விலை ரூபா 20.00



வன்முறை அதிகரிப்பு

பக்கம் 09



இனப்பிளவை ஏற்படுத்தும் முயற்சி

பக்கம் 11



சர்வதேச குழுவை அனுப்ப வேண்டும்

பக்கம் 14



கலக்கினார் பீற்றர்ஸன்

பக்கம் 11

பக்கங்கள்: 30

# உதயன்

சுடர் 27
கதிர் 147

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 09 சனிக்கிழமை (21/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

www.onlineuthayan.com

## பள்ளிவாசல் மீது தாக்குதல்

### தம்புள்ளையில் பிக்குகள் அராஜகம்; வேடிக்கை பார்த்தனர் பொலிஸார்

கொழும்பு, ஏப்.21

தம்புள்ளையில் அமைந்துள்ள 60 வருடகால பழைமை வாய்ந்த ஹைரியா ஜும்ஆ பள்ளிவாசல் மீது 500இற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் பொலிஸாரின் முன்னிலையில் நேற்றுத் தாக்குதல் நடத்திக் கடும் சேதத்தை ஏற்படுத்தினர். பள்ளியில் ஜும் ஆ தொழுகைக்காக அமர்ந்திருந்தவர்களும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இதனால் அப்பள்ளியில் ஜும்ஆ தொழுகை ரத்தானதோடு தம்புள்ளையில் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டன.

பள்ளிவாசலின் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டிருந்த பொலிஸாருக்கு மேலதிகமாக 200 இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப் பட்டே நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பகல் 12 மணிமுதல் 2.30 மணிவரை நீடித்த இத்தாக்குதலால் பள்ளிவாசலுக்குக் கடும் சேதம் ஏற்பட்டது. பள்ளிவாச 04

# தீர்வுக்கான சாதக சமிக்ஞையை அரசே முதலில் வெளியிடட்டும்

### ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தார் சுஷ்மா



கொழும்பு, ஏப்ரல் 21

புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சாதக சமிக்ஞைகளைக் காட்ட வேண்டியது இலங்கை அரசின் பொறுப்பு. என வலியுறுத்தி உள்ளார் இந்திய நாடாளுமன்றக் குழுவுக்குத் தலைமைதாங்கி இலங்கை வந்த சுஷ்மா சுவராஜ். "அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவில் எட்டிவிடலாம்" என்று ஜனாதிபதி மஹிந்தவிடம் அவர் நேரில் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை சுஷ்மா, அவரது மகள், இந்தியத் தூதுவர் ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அந்த சந்திப்பில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா 04

## பேச்சில் இணக்கப்பாட்டை எட்டும் அக்கறை இலங்கையிடம் இல்லை

### சம்பந்தன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.21

தீர்வுப்பேச்சில் உண்மையான இணக்கப்பாட்டை எட்டுவதற்கான ஆக்கபூர்வ அக்கறையை இலங்கை அரசிடம் காணக்கூடியதாக இல்லை - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்றுத் தெரிவித்தார்.

''தெரிவுக்குழுவுக்கு வரமாட்டோமென நாங்கள் அடம்பிடிக்கவில்லை. பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் அரசும், நாங்களும் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டின்படி செயற்பட வேண்டுமென்பதே எமது கோரிக்கை'' என்றார் சம்பந்தன்.

நாடாளுமன்றத் 04

## ஜனாதிபதியின் விருந்தில் சுஷ்மா மட்டும் பங்கேற்பு

### ஏனைய உறுப்பினர்கள் புறக்கணிப்பா?

கொழும்பு, ஏப் 21

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவுக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை ஒழுங்கு செய்திருந்த விருந்துபசாரத்தில், குழுவின் தலைவியான சுஷ்மா சுவராஜ் மட்டுமே பங்கேற்றுள்ளார்.

ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விருந்தில் பங்கேற்கவில்லை.

புதுடில்லியில் இருந்து இந்தக் குழுவினர் புறப் 04

## தமிழருக்கு தனி ஈழம் ஒரு நாள் உருவாகும்

### கருணாநிதி நம்பிக்கை



சென்னை, ஏப் 21

ஈழத் தமிழர்கள் சிந்திய குருதியும், செய்த தியாகங்களும் வீண்போகாது, தமிழர்களுக்குத் தனிநாடு ஒரு நாள் உருவாகும் என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி 04

## தமிழர்கள் என்ன ஆதிவாசிகளா?

### விக்கிரமபாகு கேள்வி

கொழும்பு, ஏப் 21

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்ற ஆணித்தரமான அழுத்தத்தை இலங்கை அரசு மீது பிரயோகிக்காத இந்திய நாடாளுமன்றக் குழுவின் பயணமானது வெறும் உல்லாசப் பயணமாகும். 04

## முக்கிய பிரமுகர்களுக்கு புலிகளினால் அச்சுறுத்தலாம்

### அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு கூறுகிறது

கொழும்பு, ஏப் 21

யாழ்ப்பாணத்தில் முக்கிய பிரமுகர்களுக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் உள்ளதாக அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு ஐக்கிய தேசியக் கட்சியிடம் கூறியுள்ளது. 04

## ஜனாதிபதியை சர்வதேசத்திடம் பலி கொடுக்க ரணில் முயற்சி

### அமைச்சர் மைத்திரிபால குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப் 21

கொடிய போரிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்டெடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், படையினரையும் சர்வதேசத்திடம் பலிகொடுக்கும் முயற்சியில் ரணில் உட்பட எதிர்க் கட்சித் தரப்பினர் செயற்படுகின்றனர் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார். இதனை ஒருபோதும் தாம் அனுமதிக்கப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: இலங்கையில் 04

## தமிழீழம் பற்றி பேசுவோர் துரோகிகள்

### பாதுகாப்புச் செயலர் ஆவேசம்



கொழும்பு, ஏப் 21

தமிழீழம் பற்றிப் பேசுபவர்களை நாம் துரோகிகளாகக் கருதுகிறோம். தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் நனவாகாத கனவு தமிழீழம் என்றால், அவர் இலங்கையில் அல்லாமல் இந்தியாவில் அதை உருவாக்குவதற்குப் பாடுபட வேண்டும் எனச் சீறுகிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இலங்கையிலுள்ள தமிழ் மக்களைவிட இந்தியாவில் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் வசிக் 04

### பாக். விமான விபத்து 127 பேர் பலி!

பாகிஸ்தான் இஸ்லாமாபாத்துக்கு அருகே பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் 127 பேர் பலியாகி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மோசமான வானிலை காரணமாக விபத்து நிகழ்ந்துள்ளதாகவும், விபத்துக்குள்ளான விமானம் போஜா ஏர் என்ற தனியார் விமான நிறுவனத்துக்கு சொந்தமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானம் குடியிருப்பு பகுதியில் விழுந்ததால் 40 வீடுகள் தீப்பிடித்து எரிந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

### விபத்தில் சிறுமி காயம்

உரும்பிராயில் சென்று கொண்டிருந்த துரைராஜா சுடர்நிலா (வயது 5) என்ற சிறுமியை வாகனமொன்று மோதியதில் காயமடைந்தார். சிறுமி சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரை மோதிய வாகனத்தின் சாரதி தப்பியோட அதிலிருந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### ஏ-9 வீதியில் விபத்து 9 பேருக்கு காயம்

ஏ - 9 பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 9 பேர் காயமடைந்துள்ளனர். சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொண்ட குழுவினர் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதிலேயே 9 பேர் காயமடைந்துள்ளனர். குறித்த பஸ் வீதியை விட்டுவிலகி மரத்துடன் மோதுண்ட காரணத்தினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்துச் சம்பவம் இடம்பெற்ற போது பஸ்ஸினுள் 31 பேர் இருந்துள்ளனர். காயமடைந்த 9 பேரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

### காப்பாற்றப்பட்ட இலங்கை மீனவர்கள்

சோமாலியக் கடற்கொள்ளையர்களின் பிடியில் இருந்த ஆறு இலங்கை மீனவர்களை ஸ்பெயின் போர்க் கப்பலொன்று காப்பாற்றியுள்ளது. நிமேஷாதுவ என்ற படகில் கடற்றொழிலுக்காக சென்றிருந்தபோது குறித்த மீனவர்கள் ஆறு மாதங்களுக்கு முன்னர் கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்டிருந்தனர். ஸ்பெயின் கடற்படைக்குச் சொந்தமான இன்ஃபென்டா எலேனா என்னும் கப்பலில் இருந்தவர்கள் தன்சானியாவுக்கு சுமார் 50 கடல் மைல் தூரத்தில் உள்ள கடல் பரப்பில் வைத்து இலங்கை மீனவர்களைக் காப்பாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த படகில் கடற்கொள்ளையர்கள் என சந்தேகிக்கப்படும் ஏழு பேரும் இருந்தனர் என்று ஸ்பெயின் கடற்படை அறிவித்துள்ளது.

### வெள்ளத்தில் அள்ளுண்டவர் சடலமாக மீட்பு

பதுளையில் பெய்துவருகின்ற கடும் மழை காரணமாக ஒருவர் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டு பதுளு ஓயாவில் நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தெமோதர அல்லத்த பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான முகமட் துவான் (வயது 42) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு மேற்குலகிடம் சென்றாலும் தீர்வு இங்குதான்

## அரசு கூறுகிறது



கொழும்பு, ஏப்.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்குலகத்திடம் மட்டுமல்ல, எங்குவேண்டுமானாலும் சென்று எதையும் கூறலாம். ஆனால், இங்குதான் தீர்விருக்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது என எச்சரிக்கை விடுத்துள்ள இலங்கை அரசு, கூட்டமைப்பினர் தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர் என மீண்டும் தெரிவித்திருக்கிறது.

தீர்வுத் திட்டத்துக்குப் பொதுக்களம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவாகும். எனவே, அதில் கலந்துகொண்டுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தரப்புக் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை பதில் பேச்சாளரும், ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நோக்கிலேயே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் தெளிவான முறையில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதில் கலந்துகொள்ளுமாறு நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். அந்தக் குழுவில்தான் தீர்வு விடயம் தொடர்பில் சுதந்திரமாகக் கலந்துரையாடலாம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது ஒரு பொதுக் களமாகும்.

இனப்பிரச்சினைக்கு 13 அல்லது 13 பிளஸ்ஸா என்பது குறித்து தன்னிச்சையாகக் கருத்து வெளியிடமுடியாது. இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்படவேண்டும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தக் குழுவில் அங்கம் வகித்து தமது தரப்புக் கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும். அதில் ஏதாவது பிரச்சினை என்றால் திருத்தங்களை மேற்கொள்ளலாம். நாம் கூட்டமைப்புக்குப் பல தடவைகள் அழைப்பு விடுத்துள்ளோம்.

சர்வகட்சிக் குழுவானது பரந்துபட்ட கருத்துகளைக் கொண்டது. எனவே, அந்தக் குழுவின் சிபாரிசுகளையும் தெரிவுக்குழுவில் சமர்ப்பித்துப் பரிசீலிக்கலாம். மாட்டோம் என நாம் சொல்ல மாட்டோம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடாக எட்டப்படும் தீர்வு, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இவ்வாறான வழிமுறைகளை விடுத்து மேற்குலகிடம் மட்டுமல்ல, ஏனைய இடங்களிலும் அரசைப் பற்றி குறை கூறுகின்றது. எங்குவேண்டுமானாலும் சென்று எதையும் கூறலாம். ஆனால், இங்குதான் தீர்வு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதி அல்ல. வடக்கு, கிழக்கில் ஏனைய தமிழ்க் கட்சிகளும் உள்ளன. அவற்றின் அபிலாஷைகளையும் நாம் கேட்டறியவேண்டும்.

- இவ்வாறு குறிப்பிட்டார் அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன. (த)

## ஹற்றன், கிழக்குப் பகுதிகளுக்கு இந்தியக் குழுவினர் பயணம்



கொழும்பு,ஏப் 21

இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று வெள்ளிக்கிழமை, ஹற்றன் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுக்கான பயணத்தை மேற்கொண்டு தமிழ் மக்களுடன் கலந்துரையாடினர்.

நேற்றுக் காலை, ஹற்றன் நகருக்கான பயணத்தை மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற குழுவினருடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மட்டக்களப்புக்கான பயணத்தை மேற்கொண்ட இந்தியக் குழுவினர், வந்தாறுமூலையிலுள்ள தேசிய தொழில் பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலும் கலந்துகொண்டனர்.

இந்த வைபவத்தில் இந்தியக் குழுவினருடன் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன, பிரதியமைச்சர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)



நில்வள கங்கையில் நேற்றும் சுமார் 18 அடி நீளமான முதலை ஒன்று பிடிக்கப்பட்டது. மாத்தறைப்பொலிஸார், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினர் ஆகியோரின் உதவியுடன் இந்த முதலை பிடிக்கப்பட்டது. பிடிக்கப்பட்ட முதலை அங்கிருந்து பாதுகாப்பான இடமொன்றுக்கு எடுத்தச்செல்லப்பட்டது.

## கிழக்கு தேர்தல் முடிந்த பின்னரே முதலமைச்சரின் பெயர் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.21

கிழக்கு மாகாண முதலமைச்சர் இவர்தான் என்று பெயர் குறிப்பிடாமலேயே வேட்பாளர்களை நிறுத்தி, தேர்தலின் பின்பே முதலமைச்சர் யார் என்பதை அறிவிப்பது என்ற தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்திருக்கிறார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

கிழக்கு முதலமைச்சர் வேட்பாளராக மு.கா.தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னர் தீர்மானித்திருந்தபோதிலும் அரசியல் கட்சிகள் சிலவற்றிலிருந்து வெளிப்பட்ட ஆட்சேபனையை அடுத்து மேற்படி முடிவுக்கு ஜனாதிபதி வந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. (த)

## கடற்படைத் தளபதிக்கு ஓராண்டு சேவை நீடிப்பு

கொழும்பு,ஏப் 21

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவுக்கு, ஒரு ஆண்டு சேவை நீடிப்பு வழங்கப்படலாம் என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கைக் கடற்படைத் தளபதி எதிர்வரும் 27ஆம் திகதியுடன் ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ளார்.

ஏற்கனவே ஒருமுறை சேவை நீடிப்பைப் பெற்றுள்ள அவருக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை பதவியில் இருக்கும் வகையில் சேவைநீடிப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பான அதிகாரபூர்வக் கடிதம் அவருக்கு அடுத்தவாரம் வழங்கப்படலாம் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த)

## எரிவாயுக்குழாய் வெடிப்பு; 11 பேர் காயம்

களுத்துறை வர்த்தக வலயத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் குளோரின் தொட்டியுடன் இணைக்கப்பட்டிருந்த எரிவாயுக் குழாய் நேற்று வெள்ளிக்கிழமை காலை வெடித்ததில் 3 பணியாளர்கள் உட்பட 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் 8 பிரதேசவாசிகள் காயமடைந்துள்ளதாகவும் எரிகாயங்களுக்குள்ளான நபர்கள் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸர் தெரிவித்தனர். இச்சம்பவத்தையடுத்து தொழிற்சாலைப் பணியாளர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

Wanted
Journalist

We are looking for a Journalist, with a minimum experience of five years, competent equally in English and Tamil. Should be proficient enough in translation from English to Tamil and viceversa. Candidates who had worked in print or electronic media will be given preference. Should be within the age limit of 30 to 50 years.

Selected candidate should be willing to work with the editorial team and be enthusiastic and co-operative.
Apply with full bio-data and copies of testimonials
before 25th April 2012
to:

Chief Editor,
New Uthayan Publications (pvt.) Ltd.
361, Kasthuriyar Road.

## மீனவர் பிரச்சினை குறித்து இராமேஸ்வரம் சென்று பேசுவேன்

### அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,ஏப்.21

இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக 5 ஆயிரம் மீனவர்கள் சகிதம் இராமேஸ்வரம் சென்று கலந்துரையாடப்போவதாக பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

1000 படகுகளில் விரைவில் இராமேஸ்வரம் சென்று அங்குள்ள மீனவர்களுடன் பேசுவோம். இது ஒரு ஜனநாயக நடவடிக்கை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (10-7)

## இந்தியாவால் எம்மை அசைக்கவே முடியாது

### அமைச்சர் மேர்வின்

கொழும்பு,ஏப் 21

இலங்கை வந்துள்ள இந்தியக் குழுவாலோ அல்லது இந்திய தேசத்தில் இருக்கின்ற கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரினாலேயோ இலங்கை அரசை அசைக்க முடியாது. நம்மை அசைப்பதற்கு அவர்களுக்குத் தகுதி இல்லை. நாம் கொண்ட கொள்கையில் உறுதியுடன் நிற்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மேர்வின் சில்வா.

இலங்கை வந்துள்ள இந்தியக் குழு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு சிங்கள மக்களின் விருப்பத்தின்படிதான் தீர்வைக் கொடுக்கும் அரசு. ஏனெனில், இந்த நாட்டில் சிங்கள மக்களே பெரும்பான்மை இனத்தவர். அவர்களின் விருப்பத்துக்கு அமைவாகவே சிறுபான்மை இனத்தவர்களான தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்படும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

இந்தியாவுக்கு அடிபணிந்து நாம் செயற்படமாட்டோம். கருணாநிதி ஐயாவும், ஜெயலலிதா அம்மையாரும் பாடும் பாடல்களுக்கு நாம் ஆடமாட்டோம். எம்மை இந்திய தேசத்தால் அசைக்க முடியாது.

இலங்கை வந்துள்ள இந்தியக் குழு இங்குள்ள மக்களை பார்வையிட்டு போகலாம். ஆனால், தீர்வை உடன் வழங்குமாறு எம்மை நிர்ப்பந்திக்க முடியாது'' என்று கூறினார் அமைச்சர் மேர்வின் சில்வா. (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையான குற்றவாளிகளே மீண்டும் குற்றம் புரிகின்றனர்

## யாழ். பொலிஸ் தலைமை அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்ரல்21

*குற்றச் செயல்களில் ஈடுபட்டு விடுதலையான ஒரு குறிப்பிட்ட குழுவினரே மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். அவர்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விரைவில் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.*

யாழ்.பொலிஸ் தலைமை அதிகாரி சமன் சிகேரா நேற்று யாழ்.நகரில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: -

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சட்டவிரோத செயல்கள் தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்துகின்றோம். அரசியல் ரீதியாக குற்றவாளிகளைப் பாதுகாக்க எந்தவகையான அழுத்தங்களும் இல்லை.

பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிங்கள மொழியில் பதிவு செய்தால் அது பற்றி நீங்கள் என்னிடம் முறையிடலாம்.

அடையாள அட்டைகள் தொலைந்தால் அதற்கான பதிவுகளின் பிரதிகளை நாங்களே எடுத்து உதவுகின்றோம்.

போதைப் பொருள்கள், கஞ்சா போன்றவை அதிக அளவில் விற்பனை செய்யப்படுகின்றன. அவை இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கஞ்சா போன்றவை இந்தியாவில் இருந்து எடுத்துவரப்படுகின்றன. அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது குறித்த விழிப்புணர்வுகளையும் மேற்கொண்டுள்ளோம் என்று தெரிவித்தார். (ம-7)

### போதைப் பொருள் வியாபாரம் செய்த 7 பேருக்கு தொடர் மறியல்

போதைப்பொருள் கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் ஐவர் மற்றும் குருநகர் மீனவர் இருவரையும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க யாழ். மேல்நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பிணை கோரினர். எனினும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து பதில் கிடைக்காததால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ம-4)

### கூட்டுறவு அமைப்புகளுக்கு அபிவிருத்தி நிதி கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு இந்த ஆண்டின் அபிவிருத்திக்கான நிதி இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டுறவு அமைப்புகளுக்கான அபிவிருத்தி தொடர்பான சகல தரவுகளும் பெறப்பட்டு ஏற்கனவே வடமாகாணக் கூட்டுறவு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பனை தென்னை வள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள் உட்பட அனைத்துச் சங்கங்களதும் தரவுகள் திரட்டப்பட்டு சேகரிக்கப்பட்டு அவை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால், இதுவரைக்கும் அபிவிருத்தி தொடர்பாக அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று கூறப்பட்டது.

அதேவேளை, கடந்த 2011 இல் கூட்டுறவு சங்கங்களுக்கு அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் இந்த அபிவிருத்திக்கான நிதி மூலம் பெரும்பாலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறப்பட்டது. (ம-17)

### தனங்களப்பு யுவதி கொலைக்கு:
## சந்தேகநபர்கள் மூவருக்கு தொடர்ந்தும் மறியல்

தென்மராட்சி, ஏப்.21

தனங்களப்பு யுவதியின் கொலை தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் மூன்றாம் சந்தேகநபரான சுப்பிரமணியம் சுரேஷ் என்பவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையும் முதலாம் இரண்டாம் சந்தேக நபர்களை மே நான்காம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் மாதம் தனங்களப்பு பகுதி வயல் பகுதி ஒன்றில் புஷ்பமலர் (வயது- 21) என்னும் யுவதி கொலை செய்யப்பட்டு அவ்விடத்தில் புதைக்கப்பட்டு, ஜனவரி மாதத்தில் அவரது எலும்புக்கூடு மீட்கப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினர் இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## தரக்குறைவுடன் பேக்கரி

தரச்சான்றிதழ் வழங்கப்பட்ட பின்பும் தரக்குறைவான முறையில் இயங்கி வந்த பேக்கரி ஒன்று சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் 'பி' தரத்திலிருந்த பேக்கரியை 'சி' தரத்துக்கு குறைக்க சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார விதிமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்காவிட்டால் வழங்கப்பட்ட சான்றிதழ் இரத்துச் செய்யப்படும் என்று உரிமையாளரை எச்சரித்தனர்.

இளவாலையிலுள்ள பேக்கரி ஒன்றே இவ்வாறு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-115)

## தெல்லிப்பழையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குக் கூரைத் தகடுகள்

வலி வடக்கு ஏப் 21

வலி வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள 21 குடும்பங்களுக்கு தெல்லிப்பழை பொலிஸாரால் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.வீரசிங்க தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண, காங்கேசனதுறை பொலிஸ் உதவி அத்தியட்சகர் கமகே உட்பட பொலிஸ் அதிகாரிகளும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ். ஸ்ரீமோகன் உட்பட பொது



அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டனர்.

தலா 15 கூரைத்தகடுகள் வழங்கப்பட்டதுடன் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. கோணப்புலம் பிரதேசத்தைச் சேர்ந்த 11 குடும்பங்களுக்கும் தந்தை செல்வாபுரத்தைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கும் இந்தக் கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-86)

## ஏழு பெரிய மதகுகளை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.21

தீவுப் பகுதியில் உள்ள ஏழு பிரதான மதகுகளை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெருந்தெருக்கள் அமைச்சால் ஒதுக்கப்பட்ட நிதி உதவியுடன் இந்த மதகுகள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன. குறிகாட்டுவான் வீதியில் புங்குடுதீவு வழுக்கையாற்றில் உள்ள இரண்டு மதகுகளும் பண்ணை வீதியில் ஊர்காவற்றுறையில் நான்கு மதகுகளும், அனலைதீவில் கந்தசாமி கோயிலடியில் ஒரு மதகும் திருத்தப்படவுள்ளன. அத்துடன் கொக்குவில் வட்டுக்கோட்டை வீதியில் மற்றொரு மதகும் இவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இந்த மதகுகளை விரைவில் புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## கோப்பாய் ஆலயங்களில் திருட்டு முயற்சிகள்

யாழ்ப்பாணம், ஏப்.21

கோப்பாய் பகுதியிலுள்ள இரண்டு இந்து ஆலயங்களின் விக்கிரகங்களைப் புரட்டி திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில், கண்ணகி அம்மன் கோயில் ஆகிய இரண்டினதும் முன் கதவை உடைத்து உட்சென்று திருடர்கள் தேடுதல் நடத்தியுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் ஆலயங்களிலிருந்து எந்தப் பொருள்களும் திருட்டுப் போகவில்லை எனப் பொலிஸார் கூறினார்கள்.

இந்த திருட்டு முயற்சி தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இரண்டு ஆலயங்களிலுள்ள விக்கிரகங்கள் புரட்டப்பட்டு ஆலயத்தின் புனிதத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையில் நடந்த திருட்டு முயற்சி தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றம் அதிர்ச்சியடைந்ததுடன் கண்டனமும் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சமய கலாசாரம் ஏற்படுத்திய புண்ணிய சிவபூமியில் இப்படியான செயல்கள் நடப்பதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோரை உடனடியாக அடையாளம் கண்டு தண்டனை வழங்க வேண்டும்.

அத்துடன் இவை தொடர்வதை நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளும் இந்து மக்களும் முன்வரவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தனது கண்டனத்தில் மேலும் தெரிவித்துள்ளது. (ம-3)

## நிகழ்வுகள் இன்று

### ஆய்வரங்கம்

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலை அமைப்பின் (சொண்ட்) ஏற்பாட்டில் மாதாந்த ஆய்வரங்கம் முற்பகல் 10 மணிக்கு யாழ்.அரசடி வீதியில் அமைந்துள்ள நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வரங்கில் வடமாகாண இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண சிரேஷ்ட முகாமையாளர் ப.சிவதீபன் மாறி வரும் பொருளாதார சூழலில் சமூகத்தின் பங்கு எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். (ம-14)

### நூல் அறிமுகம்

பேராசிரியர் சி.சிவசேகரத்தின் ''குழந்தையும் தேசமும்'' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழா பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ஜும்மாபள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### பொதுக் கூட்டம்

யாழ்.பிரதேச சங்கத்தின் பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### திறப்பு விழா

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி செல்லையா ஐயர் அன்னதான கலாசார மண்டபத் திறப்பு விழா பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். (ம-14)

### புத்தாண்டு விழா

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி வங்கிகளின் புத்தாண்டுவிழாவும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் இன்று நடைபெறவுள்ளன. (ம-14)

* * *

யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் நீதம் மலர் வெளியீடும் ஆண்டு விழாவும் கைலாசபதி கலையரங்கில் பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக இலங்கை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-5)

### நூல் வெளியீடு

திருமதி அன்னலட்சுமி இராஜதுரையின் 'நினைவுப் பெருவெளி' மனப் பதிவுகள் நூல் வெளியீட்டுவிழா மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டி.எம். சுவாமிநாதன் கலந்துகொள்வார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள் என்ன ஆதிவாசிகளா?

ஆதிவாசிகளைப் பார்வையிடுவது போன்று தமிழ் மக்களை அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

இவ்வாறு விமர்சித்துள்ளார் நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய, இலங்கை உடன்படிக்கை 1987 இல் கையெழுத்திட்டு அதன்மூலமே 13 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இதுவரையில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலையோ அரசியல் தீர்வையோ அதன்படி வழங்கவில்லை. அதேபோன்று போர் முடிந்து 3 வருடங்கள் கழிந்தும் மக்கள் தமது சொந்த இடங்களில் இதுவரையில் குடியேற்றப்படவில்லை.

வழமையாக தமிழ் மக்களை ஏமாற்றும் இந்தியாவின் நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. -என்றார். (த)

## முக்கிய பிரமுகர்களுக்கு புலிகளினால் அச்சுறுத்தலாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் இம்முறை கூட்டு மே தின நிகழ்வுகளை நடத்த ஐ.தே.க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையிலேயே, விடுதலைப் புலிகளால் முக்கிய பிரமுகர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதால், யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் மே தின நிகழ்வுகளுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்று அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆனால் இத்தகைய எச்சரிக்கைகளின் மூலம் தமது மே தின நிகழ்வுகளை நிறுத்த முடியாது என்று ஐ.தே.கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை முற்றாகவே அழித்து விட்டதாக அரசு கூறும் நிலையில், அவர்களால் யாழ்ப்பாணத்தில் எவ்வாறு முக்கிய பிரமுகர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்க முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த எச்சரிக்கையை அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரபூர்வமாக விடுக்கவில்லை என்றும், தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

## தமிழீழம் பற்றி பேசுவோர் துரோகிகள்

கின்றனர். அவர் ஈழத்தை உருவாக்குவதற்காக இலங்கைக்கு வரக்கூடாது. இது இறைமையுள்ள ஒருநாடு எனவும் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழீழத்தை உருவாக்குவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐ.நாவை இந்தியா வலியுறுத்த வேண்டும் எனக் கருணாநிதி கூறியமைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

'இலங்கையில் யுத்தம் இல்லை. இங்கு இனங்களிடையே ஐக்கியம் நிலவுகிறது. ஒவ்வொருவரும் அமைதியாக வாழ்கின்றனர். இலங்கையிலுள்ள தமிழர்களைத் தூண்டுவதற்குக் கருணாநிதி முயற்சிக்கக் கூடாது. சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் கூறி எமது நாட்டை நாசமாக்க முயற்சிக்கும் இந்திய அரசியல்வாதிகள் பலரில் கருணாநிதியும் ஒருவர். என்றார் பாதுகாப்புச் செயலர். (த)

## ஜனாதிபதியை சர்வதேசத்திடம் பலி கொடுக்க ரணில் முயற்சி

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த கொடிய போரிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்டெடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், படையினரையும் சர்வதேசத்திடம் பலிகொடுப்பதற்காக எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன.

இதனடிப்படையில் இந்தியாவுக்குப் பயணம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு வெளியிட்ட கருத்தானது எமக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசு மீது சர்வதேசத்துக்கு அவநம்பிக்கையும், விரக்தியும் ஏற்படும் வகையில் சர்வதேச நாடுகளுக்குச் சென்று கருத்துகளைத் தெரிவிக்கின்றார் ரணில்.

சர்வதேச அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் எமது நாட்டைச் சூழ்ந்துள்ள நிலையில் எதிர்க்கட்சிகளும் அரசைக் கவிழ்ப்பதற்கே சதி செய்கின்றன. இவ்வாறானதொரு நிலையில் எதிர்க்கட்சிகள் அரசுக்கு ஆதரவாகச் சகோதரத்துவத்துடன் செயலாற்ற வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசிலுள்ள அனைத்துப் பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாட்டையும் அறிந்து அது தொடர்பில் கலந்துரையாடி ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் -என்றார். (த)

## பேச்சில் இணக்கப்பாட்டை எட்டும் அக்கறை இலங்கையிடம் இல்லை

தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காத காரணத்தால் அரசியல் தீர்வுப் பேச்சு தாமதமடைவதாக அரச தரப்புப் பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ள இந்திய நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சில் முதலில் அடிப்படை இணக்கப்பாடு எட்டப்படவேண்டும். அதன் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நாங்கள் வருவோம் என்பதை ஜனாதிபதியிடமும், பேச்சுக்குழுவிடமும் தெரிவித்தேன். இதற்கு அவர்கள் உடன்பட்டனர். ஆனால், இப்போது அந்த உடன்பாட்டை மீறும் வகையில் அரச தரப்பினர் செயற்படுகின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க மாட்டோமென நாம் பிடிவாதம் பிடிக்கவில்லை. ஆனால், எமது பேச்சில் அடிப்படை ஆரம்ப இணக்கப்பாடு இல்லாமல் தெரிவுக்குழுவுக்கு எம்மால் போகமுடியாது. இந்தியாவிடமும் இதனை நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கிறோம் - என்றார் சம்பந்தன். (த-சி)

## பள்ளிவாசல் மீது தாக்குதல்

லைச் சூழ்ந்துநின்று பிக்குகள் கற்களாலும் கம்பு, தடிகளாலும் தாக்குதல் நடத்தினர் என்று பள்ளிவாசலில் அமர்ந்திருந்த பள்ளிவாசல் நிர்வாகிகள் கூறினர்.

பள்ளிவாசலின் சுவர்கள் மற்றும் ஏனைய பொருள்களுக்கும் சேதம் ஏற்பட்டது என்று அவர்கள் மேலும் கூறினர்.

இதனால் தம்புள்ளை நகரில் கடும் பதற்றம் நிலவியது. தம்புள்ள பஸாரில் உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமான கடைகள் மூடப்பட்டு பஸார் வெறிச்சோடிக் காணப்பட்டது.

தம்புள்ளவில் உள்ள விகாரைப் பகுதி அண்மையில் புனிதப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதிக்குள் பள்ளிவாசல் அமைந்துள்ளது என்று தெரிவித்து அதை அங்கிருந்து அகற்றிவிடுமாறு கோரியே பிக்குகள் இந்தத் தாக்குதலை நடத்தினர். தம்புள்ளை ரஜமகா விஹாரையின் பீடாதிபதி கினாமுலுவ சிறி சுமங்கலதேரரே இந்தத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கினார்.

அந்தப் பள்ளிவாசலை உடைக்கப்போவதாகப் பிக்குகள் நேற்றுமுன்தினமே அறிவித்திருந்தனர். ஜும்ஆ தொழுகை இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது ஊர்வலமாக வந்து இத்தாக்குதலை நடத்துவதென்று அவர்கள் திட்டமிட்டிருந்தனர். அவ்வாறே செய்தனர்.

இதன்போது உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில் அந்தப் பள்ளியில் ஜும்ஆ தொழுகையை நடத்தவேண்டாம் என்று மத்திய மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பள்ளி நிர்வாகிகளிடம் கேட்டிருந்தார். தாம் தொழுகையை நிறுத்தமாட்டோம் என்று பள்ளிவாசல் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் இப்பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தவேண்டாம் என்று பிக்குகளைக் கேட்டுக்கொண்டதோடு, வழமை போல் தொழுகையை நடத்துமாறு பள்ளி நிர்வாகிகளிடம் கூறியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பள்ளிவாசலுக்கருகில் பெற்றோல்குண்டுத்தாக்குதல் ஒன்றும் நடத்தப்பட்டது என்று பள்ளிவாசல் நிர்வாகிகள் 'உதய'னிடம் தெரிவித்தனர்.

இதனால் அதிகாலையில் இருந்து பதற்றம் ஆரம்பமானது. பள்ளிவாசலின் பாதுகாப்புக்காகப் பொலிஸார் நிறுத்தப்பட்டனர். அத்தோடு, பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட இருக்கும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பள்ளிவாசல் நிர்வாகிகள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும், கொழும்பில் உள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களிடமும்மகஜர்கள்மூலம்வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவ்வாறு பள்ளியைப் பாதுகாக்கப்போவதாகப் பலரும் வாக்குறுதி வழங்கிய நிலையில்தான் பிக்குகள் பொலிஸாரின் முன்னிலையில் தாக்குதல் நடத்தினர்.

12 முதல் 2.30 மணிவரை பிக்குகளின் கட்டுப்பாட்டின் கீழேயே பள்ளிவாசல் இருந்தது என்றும் 2.30 மணிக்குப் பின்னர் இராணுவத்தினர் வந்தே பள்ளிவாசலை அவர்களிடமிருந்து மீட்டெடுத்தனர் என்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் கூறினர்.

இந்த மாதம் 23 ஆம் திகதிவரை எவரும் பள்ளிவாசலுக்குள் நுழையக்கூடாது என்று இராணுவத்தினர் இப்போது தடைவிதித்துள்ளனர்.

## தீர்வுக்கான சாதக சமிக்ஞையை அரசே முதலில் வெளியிடட்டும்

அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் இந்த விடயத்துக்கு இந்திய நாடாளுமன்றக் குழுவின் பங்களிப்பும் அவசியம் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்திய எதிர்க்கட்சித் தலைவிசுஷ்மா சுவராஜிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் தீர்வு விடயம், தெரிவுக்குழு விவகாரம், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார்.

இதன்போது தமது குழுவின் இலங்கை பயணம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்தவிடம் கருத்து வெளியிட்ட சுஷ்மா சுவராஜ், முக்கிய பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

வட பகுதிக்குப் பயணம் செய்தபோது தாம் அங்கு கண்ட, கேட்டறிந்த குறைநிறைகளை அவர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், மக்கள் முன்வைத்த கோரிக்கைகளையும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் எனத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட இலங்கையின் அரசியல் கட்சிகளுடன் நடத்திய சந்திப்பின்போது அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் முன்வைத்த பிரச்சினைகளையும் சுஷ்மா சுவராஜ், ஜனாதிபதி மஹிந்தவிடம் எடுத்துரைத்தார் என்றும் அறியமுடிகின்றது.

இதற்கிடையே கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முக்கிய விடயங்கள் குறித்தான இலங்கை அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

''தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முனைப்புடனேயே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. எனவே, அதில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியா அழுத்தவேண்டும். இந்திய மத்திய அரசின் கவனத்திற்கு இந்த விடயத்தை நீங்கள் கொண்டுசெல்ல வேண்டும். இந்த விவகாரத்தில் இந்தியக் குழுவின் பங்களிப்பு இன்றியமையாததாகும்'' என்றும் அவர் இந்திய எதிர்க்கட்சித் தலைவியிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

அத்துடன், போருக்குப் பின்னர் அரசு, வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் முன்னெடுத்துவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி மஹிந்த இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார் என அறியமுடிகின்றது.

அதேவேளை, இலங்கை [illegible] ரான காலப்பகுதியினுள் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் பாராட்டத்தக்கதாகும் என ஜனாதிபதியிடம் தெரிவித்த சுஷ்மா தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வின் முக்கியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

''புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு உங்களுடைய அரசு தீர்வைக் காணும் என்ற நம்பிக்கை எங்களிடம் உள்ளது என்றும் அதற்குச் சாதகமான சமிக்ஞைகளைக் காட்டவேண்டியது உங்கள் அரசின் பொறுப்பு'' என்று அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு செல்லுமாறு நாம் கூட்டமைப்பிடம் கேட்டுப்பார்க்கின்றோம் என்றும் அச்சந்திப்பின்போது சுஷ்மா கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-சி)

## தமிழருக்கு தனி ஈழம் ஒரு நாள் உருவாகும்

கூறியுள்ளார். தனி ஈழம் அமைப்பதற்கு ஐ.நா தலையீட்டுடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு வரவேற்புத் தெரிவித்து, கருத்து வெளியிட்டு இரண்டு நாள்களில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

திமுக தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். உலகெங்கும் வாழும் தமிழர்களின் காதுகளில் தனித் தமிழீழம் விடுதலைப் பாடலாக ஒலிக்கிறது.

இலங்கையில் தமிழர்கள் சிந்திய குருதியும் செய்த உயிர்த் தியாகங்களும் வீண் போகாது. நாளை இல்லாது போனாலும், தமிழீழம் ஒரு நாள் உருவாகும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

## ஜனாதிபதியின் விருந்தில் சுஷ்மா மட்டும் பங்கேற்பு

பட முன்னர், ஜனாதிபதி மஹிந்தவுடனான் காலை விருந்தை ரத்துச் செய்யுமாறும், நேற்று மாலை அவரைச் சந்திக்க ஒழுங்கு செய்யுமாறும் கோரியிருந்தனர்.

ஆனால் ஜனாதிபதி செயலகம் நேற்றுக் காலை விருந்தளிக்க ஒழுங்கு செய்திருந்தது.

ஜனாதிபதியின் விருந்தில் சுஷ்மா சுவராஜ் மற்றும் அவரது மகள் பன்சூரி சுவராஜ் ஆகியோரே பங்கேற்றனர்.

அவர்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா அலரி மாளிகைக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

ஜனாதிபதியுடன், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, முதற் பெண்மணி சிரந்தி ராஜபக்ச ஆகியோரும் இந்த விருந்தின் போது உடனிருந்தனர்.

முன்னதாக, வடபகுதிக்குச் சென்றிருந்தபோது, பொது மக்கள் தெரிவித்த குறைபாடுகள் மற்றும், தமிழரின் பிரச்சினைகள், அரசியல் தீர்வு தொடர்பாக ஜனாதிபதியைச் சந்திக்கும் போது எடுத்துக் கூறுவதாக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியிருந்தனர். ஆனால் அவர்கள் நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்: இப்போதுள்ள மாற்று வழி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு கொள்ளாவிடில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆளும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய சந்திப்பின் போது, இதனை அவர் அறுத்து உறுத்துக் கூறியுள்ளார்.

இதேவேளை, தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணைய வேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர் சிறிபால டி.சில்வாவும் தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வலியுறுத்தி இருக்கிறார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில், த.தே. கூட்டமைப்பு இணைந்துகொண்டு, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வர வேண்டும். அந்தத் தீர்வு வடக்கு, கிழக்கு மக்களால் மட்டுமன்றி, தென்பகுதி மக்களும் ஏற்கக்கூடியதாக அமைய வேண்டும் என்று கோடிட்டுக் கூறியுள்ளார் அமைச்சர் சிறிபால டி.சில்வா.

மற்றொரு புறத்தில், பதின்மூன்றாவது திருத்தம் ஏற்கனவே அரசமைப்பில் உள்ளது. அதற்கு அப்பாலோ அல்லது குறைவாகவோ தீர்வுப்பொதி ஒன்று உருவாக்கப்பட வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். அயல்நாடுகளுக்குச் சென்று எதனைக் கூறினாலும், தீர்வு இந்த நாட்டிலேயே உருவாக்கப்பட வேண்டும். அதனை மறந்துவிடக் கூடாது - என்று தத்துவப் பீடிகை செய்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரான லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன.

ஜனாதிபதியும் அமைச்சர் பிரதானிகளும் எதனைக் கூற வருகிறார்கள் என்பது, எல்லோருக்கும் மிக இலகுவாகவும் துல்லியமாகவும் தெரியவந்திருக்கும். தமிழர் தரப்பு எந்த மூன்றாம் தரப்பிடமும், அது இந்தியாவாக இருந்தாலும் சரி, அமெரிக்காவாக இருந்தாலும் சரி, சர்வதேசங்களாக இருப்பினும் சரி, இனப்பிரச்சினைக்கான தீர்வு, பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சம்மதித்தால் மட்டுமே சாத்தியம் என்பது மறைபொருளாக இடித்துக் கூறப்பட்டுள்ளது.

அதன் உள்ளார்த்தம்: தமிழர் தரப்புக் கேட்பதை எல்லாம், அதில் நியாயம் உண்டோ இல்லையோ வழங்க முடியாது. பெரும்பான்மை இன மக்களின் பிரதிநிதிகள் விரும்பும் தீர்வை மட்டுமே வழங்க முடியும் என்பதாகும். இத்தனைக்கும் அரசில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சி உட்பட, எல்லாமே தமிழ் மக்களின் உரிமைகளை, நீதிப்பிரகாரமும் நியாயப்பிரகாரமும் வழங்குவதற்குத் தயாரில்லை; முழுக்க முழுக்க அரசியல் கருமிகளாகவே உள்ளன. அனேகமானவை இனவாதம் மேலோங்கிய நிலையில் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே வைத்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் வெறி கொண்டவைகளாகவே உள்ளன.

இந்த இலட்சணத்தில், மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்தை நாடுவதைத் தவிர வேறு மாற்றுவழி இல்லை என்ற நிலைக்கு தமிழர் தரப்புத் தள்ளப்பட்டுள்ளது. தமக்குரிய அடிப்படை உரிமைகளைத்தானும் வழங்கக்கூடாது என்ற பேரினவாதக் கோட்பாட்டாளர்களை அரவணைத்துக் கொண்டிருக்கும் அரசாங்கம், தமக்குரிய உரிமைகளை வழங்கும் என்ற நம்பிக்கையைத் தமிழ்மக்கள் இழந்துவிட்டனர்.

அதன் பலாபலனும் வெளிப்பாடுமே, இனப்பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியமானது, தவிர்க்க முடியாதது என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகள் இலங்கை சுதந்திரம் பெற்ற சில மாதங்களிலேயே பெரும்பான்மையின அரசுகளால் கபளீகரம் செய்யப்படும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டது போன்று, அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் கைப்பற்றி, அங்கு பெரும்பான்மையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதும் ஆரம்பமாகியது. அதனூடு தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலங்களிலேயே சிறுபான்மையினராகும் ஆபத்துத் தொடங்கியது.

இத்தகைய வேளைகளில், அயல்நாடான இந்தியாவின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனேகமாக, தமிழர்களின் அபிலாசைகளை மிகப்பெரியளவில் நிறைவேற்றவில்லை. வழமையான காலத்திலும் சரி, போர்க்காலத்திலும் சரி, நோர்வே உட்பட மூன்றாம் தரப்புகளின் மத்தியஸ்தமும், அனுசரணையும் நேர்சீராக தமிழர் தரப்புக்கு நலன் பயப்பதாக அமையவில்லை. கொட்டிக் குழப்பப்பட்டும், குந்தகம் விளைவிக்கப்பட்டும் அரை வேக்காடாகவே முடிந்தன.

இப்போது, போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்து விட்ட போதிலும், இனப்பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதில், அரசாங்கம் தேவைக்கு ஏற்ற வகையில் அக்கறை காட்டவில்லை. வெறுமனே காலத்தைக் கடத்தி வருகிறது. மனம் உண்டானால் இடமுண்டு. பேரினவாதம் தலையோங்கி நிற்கும் போது, ஆள்வோரும் ஆளப்படுவோரும் இரு வேறு தரப்புகள் என்ற பாகுபாடுற்ற நிலையில் இருந்துகொண்டு, சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்குவதற்கு அரசு முன்வரும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

நாடாளுமன்ற மட்டத்திலேயே அனைத்துக் கட்சிக் குழுக்களும், தெரிவுக்குழுக்களும் நியமிக்கப்பட்ட போதிலும் இனப்பிரச்சினைக்குரிய - உகந்த - உருப்படியான தீர்வுப்பொதி எதனையும் கண்டோம் இல்லை.

அதனாலேயே, வெற்றி தருமா என்று ஆற அமரச் சிந்திக்க மாற்று வழி எதுவும் புலப்படாத நிலையில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற ஏறுகயிற்றைக் கையில் பிடிக்க வேண்டிய தேவை, கட்டாயம், ஈழத்தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில், தென்னிலங்கை அரசியலின் தீவிரவாதம் செருக்கேறி நிற்கும் வேளையில், அதனை விட மாற்றுவழி எதுவும் தொலைவில் தானும் தென்படவில்லையே. இதுவன்றி என்செய்யலாம்...?

# கருச்சிதைவு சட்டத் திருத்தம் விரைவில் நாடாளுமன்றுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.21

இளவயதுப் பெண்பிள்ளைகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு வருவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு 18 வயதுக்குக் குறைந்த பெண்பிள்ளைகள் கருத்தரிக்கும் போது அந்தக் கருவை நீக்கி விடுவது தொடர்பாக கருச்சிதைவு சட்டத்திருத்தம் ஒன்று உள்ளடங்கும் சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

சிறுவர் மேம்பாடு மற்றும் மகளிர் விவகார அமைச்சு இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது.

அது சம்பந்தமான அடிப்படைச் செயற்பாடுகள் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் திருமதி சுமித்ரா ராஹுபத்த, இது குறித்துத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான அனுமதி வழங்கப்படும் போது 18 வயது மற்றும் அதற்குக் குறைந்த பெண்பிள்ளைகள், வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுதல், முறையற்ற விதத்திலான நெருங்கிய உறவுகளால் பெண்ணொருவர் கருத்தரிப்பது, முறையற்ற விரும்பத் தகாத கருவொன்று அறியப்பட்டமை என்ற மூன்று சந்தர்ப்பங்களில் மாத்திரமே, நீதிமன்ற உத்தரவொன்றின் மீது அக்கருவைக் கலைத்து விடுவதற்கு வாய்ப்புக் கிட்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பாக மருத்துவ நிபுணர்கள் இருவரது பரிந்துரைகளின் உதவியுடன் அந்தக்கருவை நீக்கிவிடுவதற்கு வாய்ப்பு அமையக் கூடும் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சட்ட மூலம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதோடு அது சம்பந்தமாக எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்ற, சுகாதார, சமூக சேவைகள், கல்வித்துறை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்படும் எனவும் செயலாளர் சுமித்ரா ராஹுபத்த தெரிவித்துள்ளார்.

இறுதித் தீர் வொன்றை எட்டுவது சம்பந்தமாக கலந்தாலோசிப்பதற்கு ஆலோசகர் செயற்குழு ஒன்றை நாடாளுமன்றச் செயலாளரிடம் கோருவதற்கும் அமைச்சு தீர்மானித்துள்ளது. (ம-22)

## கலைஞர் சேவைக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.21

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் ஆன்மீக, கல்வி, இலக்கிய, சிற்ப, இசைக்கலைஞர்களது சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மன்றத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இந்த கௌரவிப்பு விழா மன்றத் தலைவர் சிவஸ்ரீ.சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆன்மீக சேவைகளுக்காக சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்களுக்கு "அருட்சுடர்மணி" எனவும், கல்விக் கழக மேம்பாட்டு சேவைக்கு இ.ச.பே.நாகரத்தினத்துக்கு "ஈகைக் காவலன்' எனவும், இலக்கிய எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசத்திற்கு "இலக்கியத் தென்றல்" எனவும், சிற்பக் கலைஞர் விஸ்வப் பிரம்மஸ்ரீ கனகசபை இராசலிங்கத்துக்கு "சிற்ப வேந்தன்" எனவும், சங்கீதக் கலைப் பணிக்கென விஸ்வப்பிரம்ம ஸ்ரீ இராசையா ஸ்ரீதரனுக்கு "கலைத் தென்றல்" எனவும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்துப் பட்டங்களை வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் மா.வேதநாதன், வைத்தியகலாநிதி வை. தியாகராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு வழங்கிக் கௌரவித்தனர். (ம-14)

## புவிதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.21

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் உலக புவிதின நிகழ்வுகள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் திருமதி.ச.விஜிதா, சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் ச.ரவி ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், காணி பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளர் திருமதி த.சிவபாலசுந்தரம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(ம-7)

## பணமோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது

வெளிநாடுகளுக்கான விசாக்களைப் பெற்றுத்தருவதாகக் கூறி பல வருடங்களாக பண மோசடியில் ஈடுபட்டுவந்த சந்தேக நபர் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அலுவலகம் ஒன்றை நடத்தி வந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அந்த அலுவலகத்தில் இருந்து சந்தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேகநபருக்கு எதிராக 2003 ஆம் ஆண்டில் இருந்து 2010 ஆம் ஆண்டு வரை 27 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

பல வருடங்களாக அவர் எவ்வாறு மறைமுகமாக இந்தத் தொழிலை முன்னெடுத்தார் என்பது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விசா பெற்றுத்தருவதாகக் கூறி சந்தேகநபர் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை பெற்றுக் கொண்டுள்ளதாக விசாரணை களில் இருந்து தெரியவந்துள்ளது. (எ)

## மதவாச்சி – மன்னார் ரயில்பாதை தண்டவாளம் அமைக்கும் பணி

யாழ்ப்பாணம், ஏப்.21

மதவாச்சியில் இருந்து மன்னார் வரைக்குமான ரயில் பாதைக் குரிய தண்டவாளங்கள் அமைக்கும் பணிகள் கடந்த புதன்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டன.

மதவாச்சியில் நடைபெற்ற ரயில் பாதைக்கான தண்டவாளங்கள் அமைக்கும் ஆரம்ப நிகழ்வில் இலங்கை புகையிரதத் திணைக்கள உயரதிகாரிகள் மற்றும் ரயில் பாதை அமைக்கும் பணியில் ஈடுபடும் இந்திய நிறுவனப் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

மதவாச்சியில் இருந்து மடு வரைக்கும் பின்னர் மடுவில் இருந்து தலைமன்னார் வரைக்கும் இந்த ரயில் பாதை அமைக்கப் படவுள்ளது.

இந்த ரயில் பாதை அமைப்பதற்கான தண்டவாளங்கள் யாவும் மதவாச்சியில் இருந்து மன்னார் வரைக்கும் கொண்டு வந்து வைக் கப்பட்டுள்ளன. (ம-17)

## தலைநகரில் தந்தை செல்வா நினைவுப் பேருரை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 35 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக்கிளை வருடம் தோறும் நடத்தும் 'தந்தை செல்வா நினைவுப் பேருரை' நிகழ்வு இந்த முறையும் அவரின் நினைவு தினமான எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக் கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.

'இலங்கையில் அதிகாரப் பதிவுக்கான ஏற்பாடுகள்- வரலாறும் வருங்காலமும்' என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையுரையையும் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளைத் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராஜா வரவேற்புரையையும் நிகழ்த்துவர்.

தலைநகரில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்கள், இராஜதந்திரிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## எழுத்தாளர் சிவலிங்கம் காலமானார்



ஈழத்தின் முன்னணி சிறுகதை எழுத்தாளரும் விமர்சகரும் கவிஞருமான சண்முகம் சிவலிங்கம் நேற்று கல்முனை பாண்டிருப்பில் உள்ள அன்னாரின் இல்லத்தில் காலமானார்.

1939 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் பிறந்த இவர் "நீர் வளையங்கள்" என்ற கவிதைத் தொகுதி மூலம் இலக்கிய உலகிற்குள் பிரவேசித்தார். சிறந்த கவிஞரும் மொழிபெயர்ப்பாளரும் எழுத்தாளருமாக இலக்கிய உலகில் இவர் வலம்வந்தார். கேரள மாநிலத்தில் உயர் கல்வியைப் பயின்ற இவர் அறிவியல் பட்டம் பெற்று இலங்கை திரும்பி, பல இலக்கிய நூல்களைத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்குப் பரிசளித்தார். இவரின் "ஆக்காண்டி" என்ற நூல் இலக்கிய உலகில் பரவலாகப் பேசப்பட்டது. அன்னாரின் இழப்பு தமிழ் இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும் என இலக்கியவாதிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர். (10-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்குப் பிரதேச சபையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

## 5 கோடியே 57 இலட்சம் ரூபா செலவில்

வவுனியா தெற்குப் பிரதேசசபை நெல்சிப் திட்டத்தின் நிதிப் பங்களிப்பு மற்றும் சபை நிதியுதவியுடன் 5 கோடியே 56 லட்சத்து 82 ஆயிரம் ரூபா செலவிலான பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறைவு செய்துள்ளது.

வவுனியா தெற்குப் பிரதேசசபை நெல்சிப் திட்டத்தின் நிதிப் பங்களிப்புடன் 5 கோடியே 36 லட்சத்து 68 ஆயிரம் ரூபா மதிப்பீட்டிலான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

இதன் அடிப்படையில் 2 கோடியே 45 லட்சத்து 38 ஆயிரம் ரூபா செலவில் பிரதேச சபைக்குரிய உள்ளக வீதிகள், பெரிய தம்பனை- புளியடி முறிப்பு வீதி, மடுக்குளம்-செங்கற்படை வீதி, சின்னத்தம்பனை- பிரமணாலங்குளம் வீதி, பூவரசங்குளம் - கந்தன்குளம் வீதி, சின்னத்தம்பனை வீதி, கோயில் புதுக்குளம் வீதி என்பன புனரமைக்கப்பட்டுள்ளன. 43 லட்சம் ரூபா செலவில் இளமருதங்குளம் உள்ளக வீதி, நொச்சிக்குளம் வீதி, கோதண்ட நொச்சிக்குளம் உள்ளக வீதி, கிழவிகுளம் வீதி, மாதர் பணிக்கர் மகிழங்குளம் வீதி என்பன புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும் 35 லட்சம் ரூபா செலவில் வவுனியா கள்ளிக்குளம் உள்ளக வீதிகளும், 42 லட்சம் ரூபா செலவில் சாளம்பைக்குளம் உள்ளக வீதிகளும், 56 லட்சம் ரூபா செலவில் நொச்சிமோட்டை உள்ளக வீதி, வீமன்கல் உள்ளக வீதி என்பனவும் புனரமைக்கப்பட்டுள்ளன. இதைவிட 84 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் பறநாட்டான்கல் உள்ளக வீதிகளும், 30 லட்சத்து 50 ஆயிரம்ரூபாசெலவில்பாலையருவி உள்ளக வீதிகளும் செப்பனிடப்பட்டுள்ளன.

இதேவேளை வவுனியா தெற்குப் பிரதேசசபை தனது சபை நிதியிலிருந்து 20 லட்சத்து 14 ஆயிரம் ரூபாவைச் சமயபுரம் 5 ஆம் ஒழுங்கை வீதி, தம்பனைக்குளம் உள்ளக வீதி, கணேசபுரம் குழாய் கிணற்று வீதி, கணேசபுரம் 8 ஆம் ஒழுங்கை, கந்தபுரம் குறுக்குத்தெரு, எல்லப்பர் மருதங்குளம் சிவன் முதியோர் இல்ல வீதி, கூமாங்குளம் பிள்ளையார் கோயில் வீதி, நெளுக்குளம் வெளிவட்ட வீதி, கிடாச்சூரி பாடசாலை வீதி, சிவபுரம் பாடசாலை வீதி, ஆச்சிபுரம் தரணிக்குளம் இணைப்பு வீதி, தரணிக்குளம் வீட்டுத்திட்ட வீதி, மகாறம்பைக்குளம் வீதி, காத்தான் கோட்டம் உள்ளக வீதி, மகாறம்பைக்குள அம்மன் கோயில் வீதி, பாரதிபுர வீட்டுத்திட்ட வீதி, புதுக்குளம் மூன்று முறிப்பு வீதி, முள்ளிப்புலவு வீதி, சிவபுரம் உள்ளக வீதி, ஸ்ரீநகர் உள்ளக வீதி, கிடாச்சூரி ஈஸ்வதிபுர வீதி, தோணிக்கல் லக்சபானா வீதி, சாஸ்திரி கூழாங்குளம் கொடுக்கன் புலவு வீதி, சுந்தரபுரம் முருகன் கோவில் வீதி என்பன சபை நிதி மூலம் செப்பனிடப்பட்டுள்ளனஎன்று வவுனியா தெற்குப் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிதியின் மூலம் கணேசபுரம் சுடலைக்கான வேலி அமைத்தல், பிரதேச சபையின் தற்காலிக சபாமண்டபம் அமைத்தல், பூவரசங்குளம் பொதுக் கிணறு திருத்தம், தாலிக்குளம் பலசரக்குக் கடைக்கு மின் இணைப்புப் பெற்றுக் கொடுத்தல், எல்லப்பர் மருதங்குளம் சனசமூக நிலையம் திருத்தி அமைத்தல், நீர் இறைக்கும் பம்பிகள் கொள்வனவு செய்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு மறவன் குளத்தில் 10 குழாய்க் கிணறுகளும் காத்தார் சின்னக்குளத்தில் ஒரு குழாய்க் கிணறும், சிதம்பரபுரத்தில் 3 குழாய்க் கிணறுகளும் சுந்தரபுரத்தில்மூன்றுகுழாய்க்கிணறுகளும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. (க-400)

## புதுவருடக் கொண்டாட்டம்

**உற்சாகத்துடன் இடம்பெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் கரப்பந்தாட்டம், ஊசி கோர்த்தல் போன்ற விளையாட்டுக்களுடன் மரதன் ஓட்டப் போட்டியும் இடம்பெற்றது.**

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் புதுவருடத்தைச் சிறப்பிக்கும் வகையில்புதுவருடக்கொண்டாட்டமாபெரும் விளையாட்டுப் போட்டி இடம்பெற்றுள்ளது.

கடந்த 11.04.2012 அன்று மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் மாவட்ட பொது வைத்தியசாலை அத்தியட்சகர் ரி.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இவ்விளையாட்டுப் போட்டி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை இடம் பெற்றது.

பாரம்பரிய விளையாட்டுக்களை உள்ளடக்கிய தாக இவ்விளையாட்டுப் போட்டி இடம் பெற்றது. இடம்பெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் கரப்பந்தாட்டம், ஊசி கோர்த்தல் போன்ற விளையாட்டுக்களுடன் மரதன் ஓட்டப்போட்டியும் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் பங்கு கொண்ட இந்த நிகழ்வில் மரதன் ஓட்டப் போட்டி மாவட்ட வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமாகி தாண்டிக்குளம் சந்தி வரை இடம்பெற்றுள்ளது.

இந்த மரதன் ஓட்டப் போட்டியில் மகளிர் அணியும் ஆண்கள் அணியும் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். (க-421)

## சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் கிளிநொச்சி, மன்னார் சுதேச வைத்தியர்கள்

கிளிநொச்சி,ஏப்.21

மகரகமவில் இடம்பெறவுள்ள சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளில் கிளிநொச்சி மற்றும் மன்னாரைச் சேர்ந்த பாரம்பரிய சுதேச வைத்தியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடபகுதியைச் சேர்ந்த பாரம்பரிய சுதேச வைத்தியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் மகரகமவில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் இந்த வகுப்புக்கள் மகரகம தேசிய ஆயுள்வேத நிறுவனத்தில் இடம்பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாரம்பரிய சுதேச வைத்தியர்களின் அறிவு மற்றும் ஆற்றலை விருத்தி செய்வதே இந்த பயிற்சி வகுப்புகள் இடம்பெறுவதன் நோக்கமாகும்.

இதில் கிளிநொச்சி மாவட்ட ஆயுள்வேதப் பாதுகாப்புச் சபையின் அனுசரணையின் கீழ் கிளிநொச்சியிலிருந்து 10 பாரம்பரிய சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அதன் தலைவரான வைத்தியர் கே.வி. கே. திருலோகமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் மாவட்டத்திலிருந்து ஆறு பாரம்பரிய சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் இந்தப் பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்ற உள்ளனர் என்று மன்னார் மாவட்ட ஆயுள்வேத பாது காப்புச் சபையின் தலைவரான வைத்தியர் செல்வ மகேந்திரன் தெரிவித்துள்ளார். (க-7)



பூநகரி குடமுருட்டிக் குளத்தின் புனரமைக்கப்பட்ட வான் பகுதியில் நீர்க்கசிவு ஏற்படுவதைக் காண முடிகின்றது. (18)

## மேலும் 5, 571 பேருக்கு வவுனியாவில் சமுர்த்தி

வவுனியா, ஏப்.21

வவுனியா மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மேலும் 5 ஆயிரத்து 571 குடும்பங்களுக்கு புதிதாக சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த முத்திரைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்டச் சமுர்த்தி அதிகார சபையின் உதவி ஆணையாளர் எஸ்.சபாலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் என 5 ஆயிரத்து 571 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் வவுனியா பிரதேசசெயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 381 குடும்பங்களும், வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 295 குடும்பங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 175 குடும்பங்களும் வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் 717 குடும்பங்களும் புதிய சமுர்த்தி நிவாரண முத்திரைகள் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதே வேளை வவுனியா மாவட்டத்தில் ஏற்கனவே 11 ஆயிரத்து 148 குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் வவுனியா பிரதேச செயலகத்தில் 6 ஆயிரத்து 599குடும்பங் களுக்கும், செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் 3 ஆயிரத்து 237 குடும்பங்களுக்கும், வவுனியா தெற்குப் பிரதேச செயலகத்தில் ஆயிரத்து 312 குடும்பங்களுக்கும் முன்னர் சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்பட் டுள்ளன.

தற்போது தெரிவு செய்யப்படாதுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு மிக விரைவில் முத்திரைகளைவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (க-400)

### மின்கம்பத்துடன் மோதியது டிப்பர் வாகனம்

முல்லைத்தீவு சிலாவத்தையில் வேகமாக வந்த டிப்பர் வாகனம்மின்கம்பத்தில்மோதி தலைகீழாகப் புரண்டு விழுந்துள்ளது.

நேற்றுக் காலை 5.45 மணியளவில் செம்மலையிலிருந்துமுல்லைத்தீவு நோக்கி வந்த இந்த வாகனம் சிலாவத்தைப் பாடசாலையிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் கட்டுப்பாட்டையிழந்து மின்கம்பத்துடன் மோதி யது. இதில் மின்கம்பம் முறிந்து விழுந்தது. மின்கம்பிகளும் அறுந்து வீழ்ந்தன. வாகனம் தலைகீழாகப் புரண்டு மறுபுறம்திரும்பிய நிலையில் காணப்பட்டது. (க-435)

## சின்னப் பல்லவராயன்கட்டில் தினமும் காணிப் பிணக்குகள்

### பூநகரி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபம்

அக்கராயன், ஏப்.21

பூநகரி சின்னப் பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் தினமும் காணிப் பிணக்குத் தொடர்பான தகராறுகள் இடம்பெற்று வருகின்றன.

இங்கு வசிக்கின்ற கிராம மக்களுக்குரிய காணி ஆவணங்கள் வழங்கப்படாமையே இதற்கான காரணமாகும்.

இந்தக் குடியேற்றக் கிராமம் 1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தலா ஒன்றரை ஏக்கர் வயல் நிலங்களில் இங்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இவற்றுக்குரிய காணி ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனாலேயே காணி தொடர்பான தகராறுகள் தினமும் இடம் பெறுகின்றன.

இவை தொடர்பாகப் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இறுதியாக இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் குரல்கள் எழுப்பப்பட்டன. ஆனால் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

இங்கு இடம் பெறும் காணிப் பிணக்குகளுக்கு அதி காரிகளும் ஒருவகையில் காரணமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு மண்எண்ணெய் முத்திரை விநியோகம்

வவுனியா, ஏப்.21

வவுனியா மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி 6ஆயிரத்து 917 மண்எண்ணெய் முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்தினை அடுத்து விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். இதனையடுத்து விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் அரசினால் சமுர்த்தி அதிகார சபையினூடாக அவர்களுக்கான மண்எண்ணெய் முத்திரை விநியோகம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள் பெருமளவாக வாழும் பிரதேசங்களில் மண்எண்ணெய் விநியோக முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா தெற்குப் பிரதேச செயலகப் பிரிவில் 647 முத்திரைகளும், வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரம் முத்திரைகளும், வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 347 முத்திரைகளும் வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 929 முத்திரைகளும் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் சேமமடு, ஆறுமுகத்தான் புதுக்குளம், மாளுகை, பாலமோட்டை, மருதமடு, வேப்பங்குளம், மருதங்குளம், ஒமந்தை, பன்றிக்கெய்த குளம், இளம் மருதங்குளம், நெடுங்கேணி, ஒலுமடு, மதியாமடு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் முத்திரைகள் வழங்கப்பட்டு மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்று வருவதாக வவுனியா மாவட்டச் சமுர்த்தி அதிகார சபையின் உதவி ஆணையாளர் சபாலிங்கம் தெரிவித்தார். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.3,407 மில்லியன் ஒதுக்கீடு குடாநாட்டு சுகாதாரத்துக்கென

## போதனா வைத்தியசாலைப் பணியும் அடங்கும்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரத்துறைக்கு கடந்த வருடம் 81 வேலைத்திட்டங்களுக்கு 3 ஆயிரத்து 407 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்று வரும் புனரமைப்புப் பணிகளும் உள்ளடங்குகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகளுக்கு 3 ஆயிரத்து 38 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சுகாதார அமைச்சு ஊடாக 138.2 மில்லியன், பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தின் ஊடாக 369.79 மில்லியன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 119.82 மில்லியன், மாகாண சபை ஊடாக 56 மில்லியன்.**

ஜப்பானிய அரசின் ஜெய்கா நிறுவனம் ஊடாக 2 ஆயிரத்து 900 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, நிர்மாணவேலைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுகாதார அமைச்சின் மூலம் 22 வேலைத்திட்டங்களுக்காக 138.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அதில் 11 வேலைத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தின் ஊடாக 58 வேலைத்திட்டங்கள் மேற்கொள்வதற்கு 369.79 மில்லியன் ரூபா நிதி பலதரப்புக்களாலும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 14 வேலைத்திட்டங்களுக்கு 119.82 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் நிதி 6 வேலைத் திட்டங்களுக்காக 56 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. முகவர் அமைப்புக்கள் ஊடாக 38 வேலைத்திட்டங்களுக்கு 193.97 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

# திருநெல்வேலி சந்தையில் பொருள்களுக்கு கழிவு அதிகம்

யாழ்ப்பாணம், ஏப்.21

உற்பத்தியாளர்களின் பொருள்களுக்கு கூடுதல் கழிவு மேற்கொள்ளப்படுகிறது. அதுமட்டுமன்றி குத்தகைப்பணம் அதிகமாக அறவிடப்படுகிறது என்று நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக்கூட்டம் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் திருநெல்வேலி பொதுச் சந்தையின் நிலைமைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

சந்தையில் 2010 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைப் பணமாக மூன்று வீதம் மட்டுமே அறவிடப்பட வேண்டும் என்று சபை தீர்மானித்திருந்தது.

எனினும் குத்தகைக்காரர்களினால் நான்கு வீத பணம் உற்பத்தியாளர்களிடம் இருந்து அறவிடப்படுவதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இது வரை அறவிடப்பட்ட மேலதிக பணத்தை பிரதேசசபை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திய உறுப்பினர்கள் குத்தகைக்காரர்கள் பெற்றுக் கொள்ளும் பணத்துக்கு உரியமுறையில் பற்றுச்சீட்டு வழங்கவேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.

உற்பத்தியாளர்களின் பொருள்களில் கூடுதல் கழிவுகள் செய்யப்படுகின்றன.

**பச்சை மிளகாய் போன்ற சில பொருள்களுக்கு கழிவுகள் அவசியமில்லை. எனினும் கழிவு வழங்கப்படுகிறது. அத்துடன் வாழைக்குலைக்கு கூடுதல் கழிவு வழங்கப்படுகிறது.**

பச்சை மிளகாய் போன்ற சில பொருள்களுக்கு கழிவுகள் அவசியமில்லை. வாழைக்குலைக்கு கூடுதல் கழிவு வழங்கப்படுகிறது.

இது தொடர்பாக ஏனைய முக்கிய சந்தைகளில் உள்ள நிலைமைகளை அவதானித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சந்தையில் நிரந்தர வியாபாரிகளுக்கான வாடகைப்பணம் முன்னர் நாற்பது ரூபாவாக இருந்தது. தற்போது 50 ரூபாவாக குத்தகைக்காரர்களினால் அறவிடப்படுகிறது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நிலைமைகள் குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும்- வலியுறுத்தப்பட்டது. (ம-7)

## புலோப்பளைக்கு விரைவில் மின்

பளை, ஏப்.21

பளைப் பிரதேசத்தின் புலோப்பளை கிராமத்துக்கான இலவச மின் விநியோகத்திட்டம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

குடியிருப்புகளுக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான படிவங்கள் பளை பிரதேச செயலகத்தில் வைத்து இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

போரால் பாதிக்கப்பட்ட புலோப்பளை கிராமத்துக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவசமாக மின்சாரம் விநியோகிக்க யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கிராமத்துக்கு மின் விநியோகம் மேற்கொள்வதற்கான மின் மாற்றி புலோப்பளை தேவாலயத்துக்கு அருகில் பொருத்தப்பட்டு அண்மையில் லக்ஸபான மின் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண பிரதி மின் பொறியியலாளர் அ.ஞானகணேசன், பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (ம-9)



மண்கும்பான் கறுப்பாச்சி அம்மன் வீதி புனரமைப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக இந்த வீதி திருத்த வேலைகள் இடம்பெறாத நிலையில் இருந்தது. இதனால் மழைநீர் தேங்கி மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டது. தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. (ம-7)

# கந்தரோடையில் விழிப்புக்குழு

யாழ்ப்பாணம், ஏப்.21

கந்தரோடையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதி அயல் கிராமங்களில் பொலிஸாரின் அனுமதியுடன் விழிப்புக்குழுக்களை அமைத்து இரவு நேரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை கிராம இளைஞர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வாரம் கந்தரோடைப் பகுதியில் தொடர்ச்சியாக ஒரே நாளில் ஐந்து வீடுகளில் நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்த கந்தரோடைப் பகுதியில் இரவில் மட்டுமன்றி பகல் வேளையிலும் கூட பதற்றத்துடனேயே மக்கள் உள்ளனர். அவர்களில் பலர் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர்.

தற்போது கந்தரோடைப் பகுதியின் அயல் கிராமங்களான சங்குவேலி, ஆலடி, உடுவில் ஆகிய கிராமங்களின் சன சமூக நிலையங்கள் ஊடாக கிராம இளைஞர்கள் கலந்துரையாடி தினமும் இரவு நேரம் ஒரு குழுவில் 10 பேர் கொண்ட விழிப்புக் குழுக்களை அமைத்து பொலிஸாரின் அனுமதியுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்களுக்கான பாதுகாப்பை பொலிஸார் செய்ய வேண்டிய நிலையில் கிராம இளைஞர்கள் பொது நோக்குடன் செய்யும் இத்தகைய பணியால் அவர்களின் நாளாந்த தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-14-86)

# இரும்புத் திருடனை மடக்கினர் மக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.21

மதில் பாய்ந்து வீட்டு வளவில் இரும்பு திருட முற்பட்டவரை வீட்டுக்காரர்கள் பிடித்து கட்டி வைத்து பின்னர் யாழ்.பொலிஸில் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்னுள்ள ஆனந்த குமாரசாமி ஒழுங்கையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் தூரத்தே மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீடு புகுந்துள்ளார். மோட்டார் சைக்கிள் இலக்கம் இன்றியே அதில் அவர் பயணித்து வந்துள்ளார். அதனையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

வீட்டு மதில் உயரமாகக் கட்டப்பட்டிருந்த நிலையில் அதன் மீது ஏறி வீட்டு வளவினுள் இறங்கியுள்ளார்.

அங்கு காணப்பட்ட இரும்பினாலான வாகனச் சக்கரம் ஒன்றைத் தூக்கிக் கொண்டு செல்ல முற்பட்ட போதே வீட்டிலிருந்தவர்களிடம் அகப்பட்டுக் கொண்டார்.

அவர்கள் கூக்குரலிட்டு அங்கு நின்ற ஏனையவர்களுக்குத் தகவல் வழங்கினர். திருடன் வந்த வழியே மதில் பாய்ந்து வெளியே குதித்து ஓடிய போது வீட்டுக்காரர்கள் மடக்கிப் பிடித்து கட்டி வைத்தனர். பின்னர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

புத்தளத்தைச் சேர்ந்தவரும் தற்போது யாழ். பொம்மை வெளிக்கு அண்மித்து வசிப்பவருமான நஷீட் என்பவரே இவ்வாறு பிடிக்கப்பட்டவராவார். (ம-4)

## இரு வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப்.21

வீட்டில் ஆள்கள் இல்லாத நிலையில் இரண்டு வீடுகளுக்குள் புகுந்த திருடர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

யாழ்.நாச்சிமார் கோயிலடியை அண்மித்த சிவப்பிரகாசம் வீதியிலுள்ள இரண்டு வீடுகளில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ள சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டுக் கதவுகளை உடைத்து உள்நுழைந்து பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-4)

# ஊர்காவற்றுறை குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.21

ஊர்காவற்றுறைக்கான குடி தண்ணீர் விநியோகம் திடீரென பாதிக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் விநியோகத்துக்கான நிலத்தடி மார்க்கக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பே இதற்குக் காரணம்.

அல்லைப்பிட்டி பகுதியில் இருந்து ஊர்காவற்றுறைக்கு நிலத்தடி மார்க்கமாகவே தண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் பாதிப்படைந்துள்ள குழாயை சீர் செய்யும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கூறியது.

இந்த நிலத்தடி குழாய்கள் சீர்செய்யும் பணிகள் ஒரு சில நாள்களில் நிறைவு பெற்றுவிடும் என்றும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்துக்கு மாலை வேளையில் குடிதண்ணீர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்றும் கூறப்பட்டது. (ம-[illegible])

# கோழிப் பண்ணையாளரை பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.21

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் கோழிப்பண்ணைகள் வைத்திருப்போர் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிரதேச சபையில் அதனைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஐம்பது கோழிகளுக்கு மேல் வைத்திருப்போர் இந்தப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கோழிக் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுவதாகவும் கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெற வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இது தொடர்பான தீர்மானம் பிரதேச சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (ம-7)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக பாவனைக்கு வாகனம்

நவாலி, ஏப்.21

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அலுவலகப் பாவிப்புக்கென வாகனம் ஒன்று யாழ்.அரச அதிபரால் பிரதேச செயலரிடம் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கு பாவனையிலிருந்த இரண்டு வாகனங்களில் ஒன்று பாவிக்க முடியாத நிலையிலுள்ளதைத் தொடர்ந்து இது வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 தாக்குதல்களில் 37 பேர் சாவு

## ஈராக்கில் பல்வேறு பகுதிகளில்



பாக்தாத்,ஏப்.21
ஈராக்கில் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகள் நடத்திய 30 இற்கும் மேற்பட்ட கார்க் குண்டு, மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் சிக்கி 37 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் மதவாதிகள், பாதுகாப்பு வீரர்கள், உயரதிகாரிகள், அரசியல் தலைவர்களைஇலக்காகக் கொண்டு தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்துகின்றனர்.

இதில் தற்கொலைத் தாக்குதல்கள், 13 வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தினர். மேலும், சில இடங்களில் துப்பாக்கிச் சூடும் நடத்தித் தாக்கினர்.

தலைநகர் பாக்தாத்தில் சுகாதார அமைச்சர் மஜித் ஹமீட் அமினை இலக்காகக் கொண்டு நடந்த கார்க் குண்டு தாக்குதலில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். நேற்று முன்தினம் நடந்த இந்தத் தாக்குதல்களில் பொதுமக்கள் 22 பேர், 10 பொலிஸார், 2 இராணுவத்தினர், அல்குவைதா எதிர்ப்பாளர்கள் 3 பேர் உட்பட 37 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், ஈராக்கின் பல பகுதிகளில் மார்ச் 20 ஆம் திகதி முதல் இதுவரை நடந்த தீவிரவாதத் தாக்குதல்களில் 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 255 பேர் காயமடைந்துள்ளனர்.

# சூடான்-தென்சூடான் இடையே போர் மூளும்



சூடான்-தென்சூடான் நாடுகள் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தமது ஆட்சியாளர்களிடம் இருந்து தென்சூடான் மக்களை விடுவிப்பதே தமது முக்கிய குறிக்கோள் என சூடான் அதிபர் ஓமர் அல் பஷிர் குறிப்பிட்டுள்ளார். அண்மைக் காலமாக வலுவடைந்துள்ள எல்லை மோதல்களை அடுத்து சூடான் அதிபர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். சூடானில் இருந்து கடந்த ஜூலை மாதம் தென் சூடான் தனி நாடாகப் பிரிந்து சென்றதில் இருந்து அதனை முன்னாள் கிளர்ச்சியாளர்களான மக்கள் விடுதலை அமைப்பு ஆட்சி செய்து வருகின்றது.

இந்த நிலையில் மக்கள் விடுதலை அமைப்பு அழிக்கப்பட வேண்டிய ஒன்றெனவும் சூடான் அதிபர் கூறியுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மோதல்கள் மற்றுமொரு பகுதிக்கும் பரவியுள்ளதுடன், முழுமையான போர் மூளும் அபாயம் தோன்றியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சூடானுக்குச் சொந்தமான ஒன்றென பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட ஹெட்லிக் எண்ணெய்ப் பிராந்தியத்தை தென்சூடான் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

இதனிடையே தென்சூடானின் வட பிராந்தியத்திலுள்ள அவேல் பகுதியில் மோதல்கள் வெடித்துள்ளன என்று அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# தடையை நீக்கும் ஐரோப்பிய ஒன்றியம்

யாங்கூன்,ஏப்.21
மியன்மார் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்க, ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது. மியன்மாரில் பல ஆண்டுகளாக, இராணுவ ஆட்சி நடக்கிறது. நோபல் பரிசு வென்ற அந்த நாட்டின் ஜனநாயகத் தலைவி ஆங் சாங்சூகி, கடந்த 1990ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற போதும், அவரை ஆட்சியில் அமர விடாமல், வீட்டுச் சிறையில் அடைத்து வைத்தது இராணுவ அரசு. இதனால், உலக நாடுகள், மியன்மார் மீது பொருளாதாரத் தடையை விதித்தன.

கடந்த மாதம் நடந்த இடைத்தேர்தலில், ஆங் சாங் சூகி அமோக வெற்றி பெற்றுள்ளார். அடுத்த வாரம், அவர் நாடாளுமன்றத்துக்குள் செல்லவுள்ளார். இதைத் தொடர்ந்து, மியன்மார் மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்த, ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டுள்ளன.

ஏற்கனவே, சில தடைகளைத் தளர்த்த, ஆஸ்திரேலியா முடிவு செய்துள்ளது. அமெரிக்காவும், விரைவில் பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தி, மியன்மாருடன் தூதரக உறவுகளைப் புதுப்பிக்க உள்ளது.


## காணி விற்பனைக்கு

பின்வரும் காணிகள் உடன் விற்பனைக்கு உண்டு
1. வரணி இயற்றாலையில் பருத்தித்துறை வீதியில், (எருவன் நுணாவடிச் சந்திக்கு அருகில்) புற்றுக்கோயிலுக்கு அருகிலுள்ள காணி
2. வரணி இயற்றாலையில் பருத்தித்துறை வீதியில், மேற்குப் புறமாக (எருவன்) பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ 100 m தூரத்திலுள்ள வெறும் காணி வாரநாள்களில் தொடர்பு கொள்ளலாம்

தொடர்பு : 077 9452036

## தோட்ட பராமரிப்பாளர் தேவை

கரந்தன், உரும்பிராயில் உள்ள விவசாய தோட்டத்துக்குத் தோட்டப் பராமரிப்பாளர் தேவை. இவர் தோட்ட வேலை கள் செய்யக்கூடிய அனுபவம் உள்ளவராகவும் 35 - 45 வயதுக்கு இடைப்பட்டவராகவும் 5 கிலோ மீற்றர் தூரத்துக்குள் வசிப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு:- ஆர்.வி.ஜி.ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.இல.021 222 6806
(வி/17148) (2-6-7)

## வாகனம் விற்பனைக்கு

டிமோ பட்டா NP-LH - 36 - 45 ரக வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு : 077 8446089

## வாகனம் விற்பனைக்கு

ISUZU 250 FULL BODY
ALUMINUM 14 ½
BRAND NEW, WHITE COLOUR
மொடல் NKR 66L, NP LG XXXX
தொடர்புகளுக்கு: 0777721740

## வீடு விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, அல்லாரை வீதியில் J/318 கிராம சேவகர் அலுவலகத்துக்கு அருகில் 5 பரப்புக் காணியுடன் கூடிய 37 அடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு :0779711972

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகர சபைக்குட்பட்ட, யாழ் பல்கலைக்கழகம் மற்றும் திருநெல்வேலி அம்மன் சிவன் கோயிலுக்கு அருகில் 1 ½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 2452529

## தவறவிடப்பட்டது

கனகபுரம் வீதியில் (19.04.2012) அன்று 4 வங்கிப் புத்தகங்கள், வாகனப் புத்தகம் என்பன தவறவிடப்பட்டுள்ளன. கண்டு எடுத்தவர்கள் மயில்ஆசன் உதிரிகள் வாணிபத்தில் ஒப்படைக்கவும்.
தொடர்பு: 0773415679, 0774252164

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் ''யாழ் அக்கூறியம்'' நிறுவனத்தில் வேலை செய்வதற்குப் பெண் பிள்ளைகள் தேவை.
அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: "யாழ் அக்கூறியம், நட்டாதெருச் சந்தி. 0759910060

## வீடு விற்பனைக்கு

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முன்பாக (50m) தூரத்தில் உள்ள கடைத்தொகுதி சகல வசதியும் கொண்ட ... விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0770878998, 0778853011,0212262020


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
01★ 07★ 1931

இறப்பு
21★ 04★ 2006

**அமரர் பொன்னு தம்பிராசா**
(டேவிற் இராஜசிங்கம்)

ஐயா என்ற வார்த்தைக்கு
இலக்கணமாக விளங்கி
எமக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத் தந்தையே
ஆண்டு ஆறு ஆனபோதும்
ஆறவில்லை எம் துயர்....
கலங்கிய விழிகளுடன்

45, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (17116) (2-6-9)

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
21★ 12★ 1944

மறைவு
22★ 03★ 2012

**திருமதி இராஜேந்திரா சறோஜினிதேவி**

கடந்த (22.03.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி இராஜேந்திரா சறோஜினிதேவி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (21.04.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
ஆவரங்கால். (17116) (2-6-9)

இ.ரமேஸ்குமார்
(தம்பா)

## மரண அறிவித்தல்



**மகேசன் தர்மபாலன்**

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேசன் தர்மபாலன் (18.04.2012) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா மகேசன் - ஞானபூங்கோதை தம்பதியரின் மூத்த புதல்வனும், குளோறியா சறோவின் அன்புக் கணவரும், இளவாலையைச் சேர்ந்த ஜோன் பிள்ளை - ஜெயராணி தம்பதியரின் மருமகனும், றோகான், அலன், பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிக்கோல், கிபேட்சன் ஆகியோரின் மாமனும், ஜெயபாலன் (பிரான்ஸ்), சாந்தினி, மாலினி (ஜேர்மனி), விக்னகுமார் (நோர்வே) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் அருந் தவபாலன், அன்ரன் அழகராஜா (ஜேர்மனி), தாமரா (நோர்வே), ஜெயக் குமார் (U.K), ஜெயந்தினி (பிரான்ஸ்), ராஜன் (U.K), ஜெறோ (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஜோயல், ஷோலி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் (25.04.2012) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி
ஜேர்மனி :
0049 70312653843

தகவல்:
திருமதி சாந்தினி அருந்தவபாலன்
(சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வன்முறை அதிகரிப்பு

## மாலியின் இராணுவ ஆட்சியாளர் மீது கடும் கண்டனம்

மாலியின் ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றிக்கொண்டதைத் தொடர்ந்து அங்கு வன்முறைகளும் கைதுகளும் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மாலியின் இராணுவ ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள கைதுகளுக்கும், வன்முறைகளுக்கும் சர்வதேச அமைப்புக்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

அரசியலமைப்பு ஆட்சியை மீண்டும் நடைமுறைப்படுத்துவதாக வழங்கிய உறுதிமொழிக்கு மாறாக மாலி இராணுவ ஆட்சியாளர்கள் கைதுகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



மாலியின் இராணுவ ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள கைதுகளுக்கும், வன்முறைகளுக்கும் சர்வதேச அமைப்புக்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.


மேற்கு ஆபிரிக்க நாடான மாலியின் ஆட்சி அதிகாரத்தைக் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி சதி மூலம் இராணுவத்தினர் கைப்பற்றிருந்தனர்.

இந்த நிலையில் வெளியேற்றப்பட்டுள்ள ஜனாதிபதி அமாடு ரூமானி டுவாரேக்கு நெருக்கமான 22 பேரை கடந்த நான்கு நாள்களாக இராணுவ ஆட்சியாளர்கள் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கைதுகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கவலை வெளியிட்டுள்ளதுடன், ஆபிரிக்க ஒன்றியமும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# 8 ஆயிரம் கிலோ மீற்றர் வரை பாயக் கூடியது அக்னி

## இந்தியாவின் கூற்று பொய்க்கின்றது சீனா





பீஜிங்,ஏப்.21

அக்னி 5 ஏவுகணையின் உண்மையான பாயும் திறனை இந்தியா மறைத்து விட்டதாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது. சீன இராணுவ அறிவியல் பிரிவு ஆராய்ச்சியாளரான வென்லாங் "அக்னி 5 ஏவுக ணையின் பாய்ந்து சென்று தாக்கும் திறன் 5000 கிலோ மீற்றர் அல்ல,மாறாக 8000 கிலோ மீற்றர் வரை பாய்ந்து சென்று தாக்கும் திறன் கொண்டது" என்று குற்றஞ்சாட்டியுள்ளார். ஏனைய நாடுகளிடையே பீதி உருவாகுவதை தவிர்க்கவே இந்தியா இந்த உண்மையை உலகுக்கு மறைத்து விட்டதாகக் கூறுகிறார். ஏவுகணைப் பரிசோதனை தொடர்பாக இந்தியா ஏற்கனவே பல தகவல்களை வெளியிட்டிருந்த போதிலும் அது பற்றி கருத்துக்கள் ஏதும் வெளியிடாமல் இருந்த சீனா இப்போது இந்தக் கருத்தை வெளியிட் டிருப்பதானது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

முன்னதாக கண்டம் விட்டு கண்டம் தாண்டி 5 ஆயிரம் கிலோ மீற்றர் வரை தூரம் பாய்ந்து எதிரி இலக்குகளை அழிக்கும் திறன் வாய்ந்த அக்னி 5 அணு ஏவுகணை, ஒரிசாவில் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இதன்மூலம், இந்த ஏவுகணையைத் தயாரிக்கும் திறன் வாய்ந்த அமெரிக்கா உள்ளிட்ட 4 வல்லரசு நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சேர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மிகப்பெரிய கொலைவெறியன்



நோர்வேயில் கடந்த வருடம்77பேரைக்கொன்றதாக ஒப்புக்கொண்ட அன்டர்ஸ் பேரிங் பிரைவிக், நோர்வேயின் முழு அரசத் தலைவர்களையும் கொலை செய்ய தான் திட்டமிட்டிருந்தேன் என்று நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் ஒஸ்லோ நகரில் பிரதமர் அலுவலகத்தை இலக்குவைத்து அரச கட்டடத்தின்மீது பிரைவிக், நடத்திய கார் குண்டுத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டனர். அதன்பின் அவர் யுதோயா தீவில் நடைபெற்றுக்கொண்டிருந்த இளைஞர் முகாமில் பொலிஸ் வேடத்தில் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் 69 பேர் கொல்லப்பட்டனர்

இது தொடர்பான வழக்கு ஒஸ்லோ நீதிமன்றத்தில் நேற்று நான்காவது நாளாக நடைபெற்றது.

அப்போது, ஒஸ்லோவில் தான் நடத்திய தாக்குதலின் நோக்கம் அனைத்து நோர்வே அரச அதிகாரிகளையும் கொல்வதுதான் பிரதமர் உட்பட அரச கட்டடத்திலிருந்த அனைவரையும் கொல்வதற்குதான் திட்டமிட்டிருந்தேன் என்றும் அவர் கூறினார்.

பிரைவிக் நீதிமன்றம் கூறியதாவது:-

முன்னாள் பெண் பிரதமரான கிறோ ஹார் லெம் புரூன்ட்லண்டை பிடித்து அவரைச் சிரச்சேதம் செய்து அந்தக் காட்சியை இணையத்தில் வெளியிடத் திட்டமிட்டிருந்தேன்.

யுதோயா தீவில் நடைபெற்ற ஆளுங்கட்சியின் இளைஞர் முகாமில் அனைவரையும் கொல்வதற்கும் தான் திட்டமிட்டிருந்தேன்.

இந்தத் தாக்குதலின் ஆரம்பத்திட்டமானது மிகப் பெரியதாகும் எனவும் முழுத் தாக்குதலையும் நடத்தி முடிப்பதற்கு முன் சரணடைவதில்லை என எண்ணியிருந்தேன்-என்றார்.

ஆளும் தொழிலாளர் கட்சியின் தலைமையகத்தில் குண்டுத்தாக்குதல் நடத்தவும் மூன்றாவது குண்டுக்கான இலக்காக, நாடாளுமன்றம், நோர்வேயின் அவ்டன் போஸ்டன் பத்திரிகை, நகர மண்டபம், நோர்வே அரண்மனை ஆகியவற்றை கருத்திற்கொண்டிருந்தாக கூறிய பிரைவிக்-

எனினும் அரச குடும்பத்தினரை பாதிப்பின்றித் தப்பச் செய்வதற்காக இது குறித்து அவர்களை எச்சரிக்கவும் தீர்மானித்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

எனினும் குண்டு தயாரிப்பது தான் எதிர்பார்த்ததை விட கடினமான செயற்பாடாக இருந்ததாகவும் 2006 ஆம் ஆண்டில் தான் தினமும் சராசரியாக 16 மணித்தியாலங்கள் 'வேர்ல்ட் ஒவ் வோர்கிராவ்ட்' எனும் வீடியோ கேம் விளையாடியதாகவும் ஆனால் அவற்றுடன் கடந்த ஜூலை 22 ஆம் திகதி தாக்குதலுக்கு தொடர்பில்லை என்றார்.

ஆனால் 'கோல் ஒவ் டியூட்டி' மற்றும் 'மொடர்ன் வோர்பெயார்' ஆகிய வீடியோ கேம்கள் துப்பாக்கிப் பிரயோக தாக்குதலுக்கு உண்மையான பயிற்சியாக அமைந்தன என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

## அமைதி முயற்சிகள் பயனளிக்கவில்லை

கோபி அனானின் சமாதானத் திட்டத்தை சிரியா முழுமையாக நடை முறைப்படுத்தவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் குறிப்பட்டுள்ளார்.

நகரங்களில் இருந்து படையினர் மற்றும் ஆபத்தான ஆயுதங்களை சிரியா முழுமையாக அகற்ற வில்லை என பான் கீ மூன் பாதுகாப்பு சபையில் குறிப்பிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சிவிலியன்கள் பாதிக்கப்படுகின்றமை குறித்த தகவல்கள் கடந்த சில நாள்களாக பதிவாகியுள்ளதாகவும் பான் கீ மூன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த வன்முறைகளுக்குக் காரணம் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களே என சிரிய அரசு குறிப்பிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வன்முறைகளையும்முடிவுக்குக் கொண்டு வருவது தொடர் பாக இரு தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

# பிரபல பத்திரிகையாளர் பாகிஸ்தானில் கொலை

கராச்சி,ஏப்.21


பாகிஸ்தானில் முன்னணிப் பத்திரிகையின் மூத்த ஆசிரியர் மர்மமான முறையில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். பாகிஸ்தானின் முன்னணிப் பத்திரிகையான டன் நாளிதழின் முதன்மை ஆசிரியராக பணியாற்றி வந்த முர்டாஸ் ரஸ்வி என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் கராச்சி நகரில் உள்ள இராணுவக் குடியிருப்புப் பகுதியில் வசித்து வந்தார். நேற்றுமுன்தினம் இரவு தனது குடியிருப்புப் பகுதியின் வீடொன்றில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். பொலிஸார் அவரது உடலைக் கைப்பற்றினர்.

அப்போது அவரது கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டும், உடலில் பல இடங்களில் இரத்தக் காயங்களும் இருந்ததால். அவர் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் பத்திரிகைத்துறையில் 20 ஆண்டு காலம் பணியாற்றி வந்த ரஸ்வி, டன் பத்திரிகையின் லாகூர் பிரிவு பதிப்பகத்தின் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். கொலைக்கான காரணம் குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


## சூடு பிடிக்கும் பிரசாரப் போட்டி...



அமெரிக்க அதிபர் தெரிவுக்கான தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன. கருத்துக் கணிப்புக்களில் ஒபாமாவை விட அவரை எதிர்த்துப் போட்டியிடும் றோம்னி அதிக செல்வாக்குப் பெற்றவராக காணப்படுகின்றார். அண்மையில் பிரசாரக் கூட்டம் ஒன்றில் ஆதரவாளர்களுக்கு கையசைக்கிறார் றோம்னி.

# ஜாக்சனின் மகனுக்கு யார் தந்தை?

## உரிமை கோருகிறார் மெய்ப் பாதுகாவலர்



லண்டன்,ஏப்.21

பிரபல பொப் இசைப் பாடகர் மறைந்த மைக்கல் ஜெக்சனின், இளைய மகனுக்கு, "நான் தான் தந்தை" என்று பிரிட்டனைச் சேர்ந்த முன்னாள் பாதுகாவலர் தெரிவித்துள்ளார். உலகப் புகழ்பெற்ற பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜெக்சன் 2009ஆம் ஆண்டு அதிக அளவில், போதை மருந்து செலுத்தப்பட்டதால் மரணமடைந்தார்.

இவருக்கும் மூத்த மனைவி நிஸா, மரி, பிரஸிக்கும் பிறந்தவர், இளைய மகன் பிரின்ஸ் மைக்கல். தற்போது தனது தாத்தா , பாட்டியுடன் வாழ்கிறார். பிரிட்டனைச் சேர்ந்த முன்னாள் பாதுகாவலர் மாட் படெஸ். இவர், கடந்த 2001 இல் மைக்கல் ஜெக்சனுக்காக உயிரணு தானம் அளித் தார் எனவும், இதை தொடர்ந்து, 2002 இல் பிரின்ஸ் பிறந்ததாகவும், மரபணு ரீதியாகப் பார்க்கும்போது, பிரின்ஸுக்கு தான் தான் உண்மையான தந்தை, எனவே, அவனைப் பார்க்க எனக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று ஜாக்சன் பெற்றோரிடம் கோரியிருந்தார். ஆனால்,இது தொடர்பாக அவர்கள் எந்தப் பதிலும் கூறவில்லை. இதையடுத்து, பிரின்ஸின், தந்தை என நிரூபிக்கும் வகையில், மரபணு பரிசோதனை நடத்துவதற்கு [illegible] மாட் படெஸ் நாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடத்தப்பட்ட சட்டசபை உறுப்பினர் விடுவிப்பு




ஒரிசா, ஏப்.21

மாவோயிஸ்ட்டுகளால் கடத்தப்பட்ட ஒரிசா சட்டசபை உறுப்பினர் ஹிகாகா விடுவிக்கப்பட்டு விட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது. கடந்த மாதம் 24 ஆம் திகதி பிஜூ ஜனதா தளத்தைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் ஜினா ஹிகாகா, மாவோயிஸ்ட்டுகளால் கடத்தப்பட்டார். மாவோயிஸ்ட்டுகளின் கோரிக்கைகளை ஒரிசா அரசு நிறைவேற்றாத நிலையில் சட்டசபை உறுப்பினர் ஹிகாகா விடுவிக்கப்பட்டுள்ளார். நாராயண்பாட்னா மாவட்டத்தில் அதிகாலை ஒரு மணிக்கு ஹிகா காவை, மாவோயிஸ்ட்டுகள் விடுவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## விமான நிலையத்தில் தறிகெட்டு ஓடிய போர் விமானம்!

புனேயில் இந்திய விமானப் படையின் சுகோய்-30 போர் விமானம் ஓடுபாதையில் இருந்து தாறுமாறாக ஓடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் விமான நிலையப் பணிகள் பாதிக்கப்பட்டன.

விமான ஓடுபாதை சேதமடைந்ததால் ஓடுபாதை மூடப்பட்டு அனைத்து உள்நாட்டு விமானங்களின் இயக்கமும் நிறுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து 10 விமானங்கள் மும்பைக்கு திருப்பி விடப்பட்டுள்ளன. ஒரு விமானம் ரத்து செய்யப்பட்டுள்ளது. போர்விமானம் அகற்றப்பட்டு விமான ஓடுபாதை சீரமைக்கப்பட்ட பின்னர், பிற்பகல் ஒரு மணியளவில் விமானப் போக்குவரத்து சீரானது. (வ)




இந்தியாவிலேயே முதல்முறையாக சூரிய ஒளி மூலம் மிகப்பெரியளவு மின்உற்பத்தி செய்யும் திட்டத்தை குஜராத் மாநிலத்தில் முதல்வர் நரேந்திர மோடி, நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

## ரி.வி. செய்திகளை பார்க்காதீர்கள் என்கிறார் மம்தா

கொல்கத்தா, ஏப்.21

திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்கள் யாரும் தொலைக்காட்சிச் செய்தி அலைவரிசைகளைப் பார்க்க வேண்டாம் என்று அந்தக்கட்சி தலை வரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார்.

செய்தி அலைவரிசைகளுக்கு பதிலாகப் பாடல்கள் ஒளிபரப்பும் அலைவரிசைகளைப் பார்க்குமாறு அவர் அறிவுறுத்தி உள்ளார்.

செய்தி அலைவரிசைகள் அனைத்தும் மக்களுக்கு தான் செய்து வரும் சேவைகளைத் தவறாகக் காட்டுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசு உதவி பெறும் நூலகங்களில் செய்திப் பத்திரிகைகளை வாங்க மம்தா ஏற்கனவே தடை விதித்து உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

# பா.ஜ.க. மாநாட்டில் ஈழத்தமிழர் பிரச்சினை

### மதுரையில் 28 ஆம் திகதி

மதுரையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாரதீய ஜனதா கட்சியின் இரண்டு நாள் மாநாட்டில், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படவுள்ளதாக கட்சியின் பொதுச்செயலர்களில் ஒருவரான பி.முரளிதரராவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தமிழ் நாட்டில் உள்ளவர்களை மட்டுமல்ல இந்திய தேசம் முழுவதையும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கையில் பலமான ஓர் அரசு ஆட்சியில் இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதே வேளை, அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக எந்தவொரு பாரபட்சங்களும் காட்டப்படக் கூடாது.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டவர்களை அடையாளங் கண்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரையும் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் சமப்படுத்திப் பார்க்கக் கூடாது.

பாரதீய ஜனதாக் கட்சியின் இருநாள் மாநாட்டில், தமிழ்நாட்டு மீனவர் கள் தொடர்பான பிரச்சினையும் ஆராயப்படவுள்ளது.

இந்திய மத்திய அரசு தமிழ் நாட்டு மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் நலன்களில் அக்கறை காட்டத் தவறியுள்ளது.

சுஸ்மா சுவராஜ் தலைமையில் இந்திய நாடாளுமன்ற பிரதிநிதிகள் இலங்கை செல்லும் நோக்கம் தொடர்பில் தமிழ்நாட்டின் பிரதான இரு கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அவை கருத்திற் கொள்ளப்படவில்லை.

இலங்கைப் பயணத்தின் அவசியம் -நோக்கம் தொடர்பாக, தமிழ்நாட்டின் இரு பிரதான கட்சிகளுக்கும் இந்திய மத்திய அரசு புரிய வைக்கத் தவறியுள்ளது.

தமிழ்நாட்டின் இரு பிரதான கட்சிகளும் இலங்கை பயண நோக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்த போதிலும், இவர்களின் கோரிக் கைகள் கருத்திலெடுக்கப்படாது, இந்திய மத்திய அரசு தனது நாடாளுமன்ற பிரதிநிதிகளை இலங் கைக்கு அனுப்பி வைத்துள்ளது- என்றார் அவர். (வ)

## ராமருக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த விஷமிகள் முயற்சி

### கருணாநிதி கவலை



சேது சமுத்திரத் திட்டத்தை சீர்குலைப்பதற்கு ராமர் பெயரைப் பயன்படுத்தி அவருக்கும் கெட்ட பெயரை உண்டாக்குகின்றனர் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி மீது அக்கறையுள்ளவர்கள் பகுத்தறிவாளராக இருந்தாலும், சாதாரண நபராக இருந்தாலும் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றவே விரும்புவார்கள்.

ஆனால் இந்தத்திட்டத்தை சீர்குலைப்ப தற்காக ராமருக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். எனினும், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அதற்குப் பின்னர் சேது பாலத்தை தேசியச் சின்னம் என்று அறிவித்தால் என்ன ஆகி விடும்? இந்நிலையில் சேது சமுத்திரத் திட்டத்தை சீர்குலைக்கும் விஷமிகளுக்கு மத்திய அரசு துணை போகாமல் இருந்து இது வரை செய்யப்பட்ட ஆய்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்-என்றார் அவர். (வ)

## காவிரி நடுவர் மன்றத்துக்கு தலைவரை நியமிக்குக

### பிரதமருக்கு ஜெ. கடிதம்



சென்னை, ஏப்.21

காவிரி நடுவர் மன்றத்திற்கு ஏற்கனவே தலைவராக இருந்த என்.பி.சிங் ராஜினாமா செய்த நிலையில், அந்த மன்றத்துக்கு புதிய தலைவரை உடனடியாக நியமிக்க வேண் டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அவர் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த பல ஆண்டுகளாக தமிழகத் துக்கும், கர்நாடக மாநிலத்துக்கும் இடையே தீராத ஒரு பிரச்சினையாக தொடர்ந்து கொண்டிருப்பது காவிரி நதிநீர் பிரச்சினைதான். இந்தப் பிரச் சினைக்கு ஒரு தீர்வை வேண்டி தமிழக அரசு பல காலமாகப்போராடி வருகிறது.

இதனையடுத்து, காவிரி நீரை இரு மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிப்பது குறித்து காவிரி நடுவர் மன்றம் 2007 ஆம் ஆண்டு தனது இறுதித் தீர்ப்பை வழங் கியது. இருப்பினும், காவிரி நதிநீர் தொடர்பான பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாநிலங்களும், மத்திய அரசும் விளக்கம் அளிக்கக்கோரி மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டம் தொடரப்பட்ட வழக்கு கடந்த 2007ஆம் ஆண்டில் இருந்து காவிரி நடுவர் மன்றத்தில் நிலு வையில் உள்ளது என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## கருணை மனுக்கள் குறித்து விரைந்து முடிவு எடுக்கவும்

### மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கெடு

சட்டம், ஒழுங்கை கருதி நிலுவையில் இருக்கும் கருணை மனுக்கள், மரண தண்டனை குற்றவாளிகள் குறித்து விரைந்து முடிவு எடுக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவில் பல்வேறு நீதிமன்றங்களில் மரண தண்டனை விதிக்கப் பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் நிராகரிக்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய குற்றவாளிகள் ஜனாதி பதியிடம், மத்திய அரசிடமும் கருணை கோரி மனு தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் 1993ஆம் ஆண்டு நடந்த வெடிகுண்டு வழக் கில் மரண தண்டனை விதிக்கப் பட்ட குற்ற வாளி பகூலூர் என்பவர் 2003-ம் ஆண்டு கருணை மனுத் தாக்கல் செய்தார். இந்தமனு 2011ஆம் ஆண்டில் நிராகரிப்பட்டது. இந்த வழக்குத் தொடர்பாக பகூலூர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டது. அதில், கருணை மனு நிராகரிப்புச் செய்ப்பட்டாலும், ஆயுள் தண்டனையாகக் குறைக்க உச்ச நீதிமன்றத்தில் வாதாடப்பட்டது. பகூலூர் சார்பில் கே.டி..எஸ். துளிசி முன்னி லையானார். மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி, எஸ்.ஜெ. முகோபாத்யா ஆகியோர் அடங்கிய குழுவினர் இது சட்டம், ஒழுங்கு பிரச்சினை என்பதால், நிலுவையில் உள்ள மனுக்கள் குறித்து விரைந்து முடிவு எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (வ)

## செவ்வாய்கிரகத்துக்கு இந்திய விண்கலம்

### 2013 இல் அனுப்ப ஏற்பாடு

செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்ய விண்கலம் ஒன்றை எதிர் வரும் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் பெரும்பாலான பணிகள் முடிவடைந்த நிலையில் அரசின் அனுமதி வேண்டி, இந்தத் திட்ட அறிக்கை இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாக இஸ்ரோவிலிருந்து தகவல்கள் கூறுகின்றன.

இந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தின் சுற்று வட்டப்பாதையில் 'போலார் சாட்டலைட் லொஞ்ச் வெகிக்கிள்' என்கிற பி.எஸ்.எல்.வி ரொக்கெட் மூலம் செலுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் சுமார் 25 கிலோ அளவுக்கான ஆராய்ச்சிப் பொருள்களை விண்ணில் சுமந்து செல்கிறது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரி னங்கள் உள்ளனவா? கிரகத்தின் வானிலை, அமைப்பு, உருவாக்கம், உருமாற்றம் மற்றும் இக்கிரகத்தில் உயிர் வாழ்வதற்கான [illegible] குறித்து இந்த விண்கலம் ஆராயும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயில் அகப்பட்டு பெண் மரணம்

கல்முனை,ஏப்.21

கல்முனை, சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் சலவை இயந்திரத்தில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கைத் தொடர்ந்து ஏற்பட்ட தீயில் அகப்பட்டு பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

சாய்ந்தமருது, ஒராபி பாஷா வீதியைச் சேர்ந்த முஹம்மத் ஹனிபா ரிஸ்வானா (வயது-36) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் சலவை இயந்திரத்தினுள் ஆடைகளைக் கழுவிக்கொண்டிருந்த நிலையில் மின்சார ஒழுக்கு ஏற்பட்டு குறித்த இயந்திரம் தீப்பற்ற தொடங்கியதால் இந்தத் தீயில் குறித்த பெண்ணும் சிக்கிக் கொண்டுள்ளார். (ச)

## மலையகத்தில் மண் சரிவுகள்

**மலையகப் பகுதிகளில் பெய்கின்ற மழையால் விவசாயப் பயிர்ச் செய்கைகளும் பாதிப்படைந்து வருகின்றன.**

நுவரெலியா,ஏப்.21

நுவரெலியா மாவட்டத்தில் மாலையில் பெய்கின்ற கடும் மழை காரணமாக பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்படுகின்றன.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியை அகலப்படுத்தும் பணிகள் தற்போது இடம்பெறுவதால் வீதியின் சில இடங்களில் மண்சரிவுகள் ஏற்படுகின்றன.

கடந்த 16 ஆம் திகதி நோர்வூட், வெஞ்சர் தோட்டத்தில் இடம்பெற்ற மண் சரிவில் வீடொன்றின் ஒரு பகுதி சேதமானது.

மலையகப் பகுதிகளில் பெய்கின்ற மழையால் விவசாயப் பயிர்ச்செய்கைகளும் பாதிப்படைந்துவருகின்றன.

மாலை வேளைகளில் பெய் துவரும் மழையினால் ஏற்படும் மண் சரிவுகள் காரணமாக தங்களுக்கு போக்குவரத்துப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# முஸ்லிம் காங். ஆதரவின்றி கிழக்கை கைப்பற்ற முடியாது

### மாகாண சபைத் தேர்தல் குறித்து மாநகர சபை உறுப்பினர் ரம்ழான்

எருவில்,ஏப்.21

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவின்றி கிழக்கு மாகாண சபையை எவரும் கைப்பற்ற முடியாது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் என். கே. றம்ழான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசினால் மிக விரைவில் நடத்த உத்தேசிக்கப் பட்டு வரும் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவின்றி எக்கட்சியாலும் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்ற முடியாது. அவ்வாறு கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்கும் அதிகபட்ச ஆசனங்களை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவின்றி எவராலும் பெறவும் முடியாது. கிழக்கு மாகாணம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிக செல்வாக்கும் வாக்குப்பலமும்கொண்ட ஒரு மாகாணமாகும்.

**கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்கும் அதிகபட்ச ஆசனங்களை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவின்றி எவராலும் பெறவும் முடியாது.**

இன்று அரசின் பங்காளிக் கட்சிகளாக இருக்கின்ற கட்சிகளில் அதிகப்படியான நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள கட்சியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருந்து வருகின்றது. கிழக்கு மாகாணம் முஸ்லிம் காங்கிரஸின் பலமிக்க வாக்கு வங்கியைக்கொண்ட ஒரு மாகாணமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏனைய கட்சிகளைப் போன்று எவருடைய அரசியல் அதிகாரத்தின் நிழலுக்குப் பின்னால் நின்றுகொண்டு அரசியல் செய்யவேண்டிய தேவையும், அவசியமும் இல்லை.

முஸ்லிம் சமூகத்திற்காக எவரோடும் பேரம் பேசும் சக்தியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இழக்கவில்லை. அரசின் பங்காளிக் கட்சியாக இருந்து கொண்டு தனது கட்சியின் சொந்தச் சின்னத்தில் தாம் விரும்பிய தேர்தலில் போட்டியிடுகின்ற ஓர் ஆளுமை மிக்க தலைமைத்துவத்தைக் கொண்ட கட்சியே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸாகும்.

குறிப்பாகத் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கு மாறாக என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டது இல்லை- என்றுள்ளது. (ச-31)

# பெயர்ப் பலகைக்கு மை ஊற்றியமை இனப் பிளவை ஏற்படுத்தும் முயற்சியே

### மட்டு. மாநகர முதல்வர் குற்றச்சாட்டு




எருவில்,ஏப்.21

மட்டக்களப்பு - காத்தான்குடி எல்லைப் பகுதியில் மட்டக்களப்பு மாநகர சபையினால் அமைக்கப்பட்ட வரவேற்புப் பெயர்ப் பலகை மை ஊற்றிச் சேதமாக்கப்பட்டுள்ளது. தமிழ் , முஸ்லிம் மக்களுக்கு இடையில் மீண்டும் ஒரு பிளவை ஏற்படுத்தவே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த இடத்தில் யார் தடுத்தாலும் வரவேற்பு பலகை மீண்டும் நிறுவப்படும் என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் மட்டக் களப்பு - காத்தான்குடி எல் லையில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு பெயர்ப் பலகை இனந்தெரியாத விஷமிகளால் அகற்றப் பட்டு அது மீண்டும் அமைக் கப்பட்டிருந்த நிலையில் ' மீண்டும் அந்த வரவேற்பு பெயர்ப் பலகை மீது கறுப்பு மை ஊற்றப்பட்டுள்ளது.

கடந்த 30 வருட காலத்தில் இரு சமூகமும் பல்வேறுபட்ட முரண்பாடுகளில் இருந்து விடுபட்டு இன்று ஒரு சிறந்த நிலையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் அதனை சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே நோக்க வேண்டியுள்ளது- என்றார். (ச-31)

# இளைஞர்களிடம் வசமாகச் சிக்கிய வேலைவாய்ப்பு போலித் தரகர்

### 'மரியாதை'களுடன் பொலிஸில் ஒப்படைப்பு

எருவில்,ஏப்.21

அரச திணைக்களங்களில் தொழில் வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி தரகர் வேலையில் ஈடுபட்டுவந்ததாகத் தெரிவிக்கப்படும் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-


சம்மாந்துறையைச் சேர்ந்த தரகராகச் செயற்பட்டுவந்த இந்த நபர், அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்களில் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறப்படும் சம்மாந்துறையைச் சேர்ந்த மற்று மொரு நபருக்கு தரகர் வேலை யில் ஈடுபட்டுவந்துள்ளார்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த பல இளைஞர்களை அரச திணைக்களங்களில் தொழில் வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி மற்றைய நபரிடம் தரகராகச் செயற்படும் இந்தநபர் அவரை அறிமுகப்படுத்தியுள்ளார். அத்துடன், இந்த இளைஞர்களிடம் இருந்து பணத்தைப் பெற்று மற்றைய நபரிடம் வழங்கியுள்ளார்.

தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படும் மற்றைய நபர், அரச திணைக்களங்களில் தொழில்வாய்ப்பையும் பெற்றுக் கொடுக்காது வாங்கிய பணத்தையும் திருப்பிக்கொடுக் காது இந்த இளைஞர்களை பல மாதங்களாக ஏமாற்றி வந்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் ஆலையடிவேம்பிலுள்ள இளைஞரொருவருக்கு தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி அவரிடம் தமது 'நேர்மை' குறித்து விவரித்துக் கொண்டிருந்தார்.

இதன் போது ஏற்கெனவே தொழில் வாய்ப்புக்காக பணம் கொடுத்து ஏமாற்ற மடைந்த இளைஞர்கள் பொதுமக் களின் உதவியுடன் இவரை மடக்கிப் பிடித்து நையப்பு டைத்த பின்னர் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ச-31)



தென்னாபிரிக்க காயத்திரி பீடத் தலைவர் சுவாமி சங்கரானந்தா திருகோணமலை, கன்னியாவில் அமைந்துள்ள காயத்திரி பீட ஆத்ம யோக ஞானசபாவுக்கு வருகை தந்தபோது கன்னியா காயத்திரி பீடஸ்தாபகர் அ.வேல்மாணிக்கம் அவருக்கு பாத பூசை செய்கிறார். (40)

## சிறுவர் தொழிலாளர்களை தேடிப்பிடிக்க நடவடிக்கை

எருவில்,ஏப்.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிறுவர் தொழிலாளர்களை மீட்டு அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம், கல்வித் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தொழில் திணைக்களம், ஐக்கிய நாடுகள் சபையின் உலக தொழிலாளர் நிறுவனம், யுனிசெப் நிறுவனம், சிறுவர் நன்னடத்தைப் பிரிவு என்பவற்றுடன் இணைந்து இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்டத்திலுள்ள உயர் அதிகாரிகளுக்கு விளக்கம் அளித்து குறித்த சட்டவிரோத நடவடிக்கையைத் தடுத்தல் தொடர்பான செயற்பாட்டு குழுக்களை நியமிக்கும் விசேட மாநாடு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

# அபிவிருத்திதான் முக்கியம் என்றில்லை அரசியல் தீர்வே தற்போது அவசியம்

### முஸ்லிம் காங்கிரஸுக்கு 'ஆலோசனை' கூறுகிறார் அதன் எம்.பி.

சியம்பலாண்டுவ, ஏப். 21

அபிவிருத்தியை மட்டும் முதன்மைப்படுத்தி அரசியல் செய்யும் போக்கைத் தவிர்த்துக்கொண்டு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் விடயத்துக்கு முன்னுரிமை வழங்கவேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம். இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனது சரியான இலக்கை நோக்கிப் பயணிக்கவேண்டும்- என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அந்நூர் மத்திய கல்லூரியில் மாணவர்களுக்கு பாண்ட் வாத்தியக்கருவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

எமது சமூக கலாசார விழுமிங்கள் என்றும் பாது காக்கப்பட வேண்டியது அவசியமாகும். பாடசாலைகளில் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது தேசப்பற்றுடன் சமூக, கலாசார விழுமியங்கள் போதிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் நிலங்கள் அபகரிக்கப்படுவதையும், நிர்வாக ரீதியாக ஏற்படும் பெரும்பான்மை சமூகத்தின் நெருக்குதல்களையும் எவரும் கண்டுகொள்வதில்லை.

இந்த விடயங்களைப் பற்றிப் பேசுபவர்கள் ஓரங்கட்டப்படுகின்ற நிலைமை இன்று நிலவுகின்றது.

நமது இருப்புகளை உறுதிப்படுத்த வெறும் அபிவிருத்தி மட்டும் போதாது. அதிகாரப்பகிர்வுள்ள ஓர் அலகு நமது இலக்காக இருக்க வேண்டும்.

அந்த அலகுக்குள் நாம் உரிமை யுடன் செய்யும் அபிவிருத் திகள்தான் நமது இருப்பை உறுதிப்படுத்தி நமது எதிர்கால சந்ததியினரின் கௌரவத்தையும், இறைமையையும் பாதுகாக்கும். அவர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான அடித்த ளத்தை இடும் பொறுப்பு நமது கையில் தான் உள்ளது.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** சிறப்புக்கள் கூடும். செயல் ஆற்றல் அதிகரிக்கும். புதிதாகச் சிந்திப்பீர்கள். செயற்பாடுகளை தீவிரமாக்குவீர்கள். கூட்டு முயற்சியால் லாபங்களை கூடுதலாக்குவீர்கள். அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளின் தொடர்புகள் பயன் தரும். கடந்த காலத்தில் செய்ய நினைத்த ஒரு காரியத்தை இன்று செய்து முடிப்பீர்கள்.

**இடபம்:** வெற்றிகள், எதிலும் லாபங்கள் கிடைக்கும் உற்சாகம் கூடும். புதிய அறிமுகங்கள், முக்கியஸ்தர்களின் தொடர்புகள் பயன்தரும். தொழில் தொடர்புகள் விரிவாகும். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நிலவிய சர்ச்சைகள் கூட நல்லதொரு முடிவுக்கு வரும். பணவரவுகள் திருப்தி தரும். கடன்கள் குறையும், புதிய கடன்கள் ஏற்படும்.

**மிதுனம்:** சிந்தனைகள் கூடும். பொறுப்புகள் கூடும். சில பணிகள் தாமதமானபோதும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். கடன்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். வழக்குகளை தாமதப்படுத்த வேண்டியிருக்கும். நண்பரின் யோசனை ஒன்று சமயத்திற்கு கை கொடுக்கும். குடும்பத்தில் சிற்சில குறைகள் இருந்தபோதும், மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

**கடகம்:** ஆச்சரியங்களுக்கும், பரபரப்புக்கும் குறைவிருக்காது. தாமதப்பட்ட மற்றும் முடியாத காரியங்களை முடிப்பதற்காக முயற்சி மேற்கொள்வீர்கள். வெற்றியும் பெறுவீர்கள். பல நேரங்களிலும் உங்களின் செயற்பாடுகள் சரிதான் என்ற எண்ணம் எழும். சந்தேகங்களைத் தவிர்த்துக் கொண்டு நம்பிக்கையோடு செயற்படுங்கள்.

**சிங்கம்:** திறமை வெளிப்படும். பாராட்டுக் கூடும். ஏற்றுக்கொண்ட பணிகளை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சில பொறுப்புகளும் ஏற்படும். பழைய நட்புகளின் சந்திப்பு நிகழும். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் அலைச்சல்கள் இருக்கும். பணவரவுகள் திருப்தி தரும். வாகன வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** வியூகங்களால் வெற்றிகள் பல உண்டு. தங்களின் சில நடவடிக்கைகள் மற்றும் முடிவுகள் பிறரின் விமர்சனங்களுக்கு உள்ளாகலாம். பொருட்படுத்திக் கொள்ளாதீர்கள். புதிய தொழில் முயற்சிகளில் நிதானம் இருக்கட்டும். உடன்பிறப்புகளோடு சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

**நாளை**

சித்திரை 10 ஞாயிற்றுக்கிழமை 22.04.2012
திதி: பிரதமை பி.ப 03.22 வரை
நட்சத்திரம்: பரணி-பி.இ 03.19 வரை
சுபநேரம்: 09.00- 10.30 வரை
ராகு காலம்: 04.30-06.00 வரை

**துலாம்:** சிந்தனை ஒன்றும், செயல் வேறொன்றுமாக இருக்கும். பிறரின் பணிகளுக்காக பெரும் பகுதி நேரங்கள் கரையலாம். இருப்பினும், அதிலும் தங்களுக்கு சாதகத்தை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு உண்டு. கடன்களில் கவனம் இருக்கட்டும். சொத்துக்களால்வரும் வருமானங்கள் கூடும். மாலையில் தெய்வ வழிபாடு மனக்குழப்பத்தை நீக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகம் தரும் சூழ்நிலைகள் அதிகம் இருக்கும். நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மிகவும் உதவியாகவும், ஆதரவாகவும் இருப்பர். பணவரவுகள் போதுமானதாக இருக்கும். தாயாரின் உடல்நிலையிலும் அக்கறை தேவைப்படும். மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**தனுசு:** எதையும் வெளிப்படையாகப் பேசுவதைத் தவிர்த்து சற்று இரகசியம் காப்பது எல்லா வகையிலும், தங்களுக்கு நன்மையாகும். பரபரப்பிற்கும் குறைவிருக்காது. பண விவகாரங்களில் கொஞ்சம் தடுமாற்றம் ஏற்படத்தான் செய்யும். இருப்பினும், பெரிய பாதிப்பு இருக்காது.

**மகரம்:** வெற்றிகளும், பணவரவுகளும் தங்களை உற்சாகப்படுத்தும். எதையும் மேம்போக்காகக் கொண்டு செல்லும் பழக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வெளிவிவகாரங்கள் ஓரளவுக்குச் சாதகமாக அமையும். குடும்பத்தில், சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம். புதிய நபர்களின் சந்திப்பு பயன்படாது.

**கும்பம்:** எந்த ஒரு விடயத்திலும் இரட்டையான மனநிலையே நிலவும். இருப்பினும் தங்களுக்கு சாதகமே. சில காரணங்களுக்காக தாங்கள் மேற்கொள்ளும் பயணம் வெற்றிகரமானதாக அமையும். பணவிவகாரங்களில் சாதகமான சூழ்நிலை எனினும், திட்டமிட்ட செலவுகளை மேற்கொள்வது நல்லது.

**மீனம்:** மகிழ்ச்சி நிலவும். முக்கிய பணிகளைச் செய்து முடிக்க ஏதுவானதாகும். எதிர்பார்த்த பணம் வரும். நண்பர்களின் உதவிகள் மிகுந்த பயனுள்ளதாக அமையும். புதிய முயற்சிகளில் இறங்குவதற்கு முன் ஓரிரு முறை நன்கு ஆலோசித்து பின் செயற்படுங்கள். உடன்பிறந்தோர்களால் ஒருசில நேரங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 7 | 4 | | 8 | | | |
| | | 5 | | | | 8 | 9 | |
| | 2 | | 9 | | 3 | | | 1 |
| | | 9 | 2 | | | | | 4 |
| | 8 | | 6 | | 4 | | 7 | |
| 6 | | | | | 7 | 2 | | |
| 4 | | | 3 | | 5 | | 6 | |
| | 7 | 2 | | | | 3 | | |
| 5 | | | 7 | | 9 | 4 | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 8 | 6 | 7 | 5 | 1 | 9 | 3 |
| 6 | 3 | 7 | 1 | 9 | 4 | 2 | 8 | 5 |
| 5 | 1 | 9 | 3 | 2 | 8 | 7 | 4 | 6 |
| 3 | 5 | 2 | 9 | 8 | 7 | 6 | 1 | 4 |
| 7 | 6 | 1 | 4 | 5 | 3 | 8 | 2 | 9 |
| 8 | 9 | 4 | 2 | 1 | 6 | 3 | 5 | 7 |
| 1 | 7 | 3 | 8 | 4 | 9 | 5 | 6 | 2 |
| 9 | 8 | 5 | 7 | 6 | 2 | 4 | 3 | 1 |
| 4 | 2 | 6 | 5 | 3 | 1 | 9 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 16.06.1944

உதிர்வு 22.03.2012

அமரர்

## உயர்திரு.தில்லையம்பலம் லோகநாதன்

(விரிவுரையாளர் பொருளியல் - உரிமையாளர், அஸ்ரன் பதிப்பகம்)

கணமொன்றும் ஓயாமல் காலமெல்லாம் ஓடி உழைத்து
சாதனைகள் பல கண்ட கலைமகளின் மைந்தனே!
நின் தூய மனதாலே யாவரையும்
நிறைவான வாழ்வு வாழ வித்திட்டவரே!
இறைவனோடு இரண்டறக் கலந்து மாதமொன்று ஆயினும் எமைவிட்டு
நீங்காது எம்மோடிருந்து எம்மை வழிநடத்தும்
எமதன்புத் தெய்வமே! தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி நிற்கின்றோம்...

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, ரொரன்ரோ-கனடாவை வதிவிடமாகக் கொண்டவருமான **தி.லோகநாதன்** அவர்கள் 22.03.2012 அன்று கனடாவில் சிவபதம் எய்தினார். காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் -பட்டம்மாள் தம்பதியரின் அன்பு மகனும், கெங்காவதியின் அன்புக் கணவருமான அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு, நேரில் எமது இல்லம் வந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும், மலர் வளையம் செலுத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், இறுதி நிகழ்வுகளில் நேரில் வருகை தந்து கலந்து கொண்ட அனைவருக்கும், மறைவுச் செய்தியை வெளியீடு செய்த ஊடகங்களுக்கும், இறுதிக் கிரியைகளை நடத்தித் தந்த அந்தணப் பெரியவர்களுக்கும் மற்றும் திருமுறைகள் ஓதியவர்களுக்கும், சகல வழிகளிலும் எமக்கு ஒத்தாசை வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது 31ஆம் நாள் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை 22.04.2012 ஆம் திகதி அன்று 733, Birchmount Rd (Birchmount & Eglinton) இல் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
பிரசன்னா (மகன்) - 1-647-889-8584 (கனடா)

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 புலிகளுக்கு சர்வதேசப் பொலிஸார் பிடியாணை

கொழும்பு,ஏப்.21
விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 23 உறுப்பினர்களுக்கு எதிராக சர்வதேச பொலிஸார் பிடியாணை பிறப்பித்துள்ளனர் என்று திவயின செய்தி வெளியிட்டுள்ளது.
சிங்கள அரச சார்பற்ற நிறுவனமொன்றில் துணைத் தலைவராகக் கடமையாற்றிய நபர் ஒவருவரின் பெயரும் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
புலி உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் மற்றும் புகைப்படங்களை அரசு வழங்கியுள்ளது.
விமானத் தாக்குதல் மற்றும் படகுகள் மீது தாக்குதல் நடத்திய புலி உறுப்பினர்களின் பெயர் விவரங்களும் இந்தப் பட்டியலில் உள்ள டக்கப்பட்டுள்ளன என்று திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (ச)



இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவினர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினர்

# யாழ். மே தின கூட்டத்தை யாரும் குழப்பக் கூடாது

### சஜித் பிரேமதாஸ எம்.பி. கோருகிறார்

கொழும்பு,ஏப்.21
யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்தை எவரும் குழப்பக்கூடாது என்று அக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
மே தினக் கூட்டத்தை குழப்பும் முயற்சி மூன்றாம் தர செயற்பாடாகும். அது ஓர் அடிப்படை உரிமை மீறல் ஆகும் என்று அவர் கூறினார்.

**நாட்டின் எந்த பகுதியிலும் யாரும் கூட்டம் நடத்தும் உரிமை உள்ளது. ஆகவே கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும்.**



நாட்டின் எந்தப் பகுதியிலும் யாரும் கூட்டம் நடத்தும் உரிமை உள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு கட்சியின் சகல உறுப்பினர்களும் தமது முழு ஆதரவை வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தீர்வுத் திட்ட முனைப்புக்கு முழு ஆதரவளிக்கப்படும்

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.21
தீர்வுத் திட்ட முனைப்புக்களுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
இலங்கைக்கு வந்துள்ள இந்தியப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் அரசுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கும் என்று அவர் கூறினார்.
தேசிய இனப் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று துரித கதியில் முன்வைக்கப்படவேண்டியது அவசியமானது. தீர்வுத் திட்ட முனைப்புக்கள் காலதாமதப்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மலையகத்தவர் வாழ்வையும் நேரில் வந்து பாருங்களேன்

### இந்தியக் குழுவுக்கு அழைப்பு

இந்திய அரசியல் பிரதிநிதிகள் மலையகத்திற்கும் வந்து இந்திய வம்சாவளி மக்களின் வாழ்க்கை தரத்தினையும் பார்வையிட வேண்டும் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்தக் குழுவினர் மலையகத்துக்கு வந்தால் தேயிலை தோட்டங்களில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி தமிழர்கள் படும் துன்பங்களைப் புரிந்து கொள்ள முடியும்.
மாறாக எந்தவொரு தொழிற்சங்கமோ அல்லது அரசியல்வாதிகள் சொல்வதையோ கேட்காதீர்கள். அவர்கள் கூறும் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தங்க நகைகள் திருட்டு

கொழும்பு,ஏப்.21
வெலிப்பனை பொலிஸ் பகுதியில் உள்ள மீகமவில் வீடொன்றில் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளன.
மீகம நுகஹலந்த பகுதியில் உள்ள வீட்டில் எவரும் இல்லாத சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

## சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.21
இந்த வருடத்தின் இது வரையான காலப் பகுதிக்குள் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட தொலைபேசி இலக்கங்களுக்கு இதுவரையான காலப்பகுதிக்குள் 9,446 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று அச்சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.
இந்த முறைப்பாடுகளில் 1,361 முறைப்பாடுகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பதிவாகியுள்ளன என்றார் அவர். (ச)

## அமைச்சுப் பொறுப்புக்களில் விரைவில் மாற்றம் வரும்

### ஆராய்கிறாராம் ஜனாதிபதி

கொழும்பு,ஏப்.21
தமக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்பு தொடர்பில் தெளிவின்மையுடனும், விரக்தியுடனும், பிற்போக்குத்தனத்துடனும் செயற்பட்டுவருகின்ற அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் சிலருக்கு வேறு அமைச்சுப் பொறுப்புகளை வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தி வருகிறார் என அரச வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளது.
நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலன்கருதி பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்ற நோக்கில் அமைச்சுப் பொறுப்புகள் அமைச்சர்களுக்கு வழங்கப்படுகின்றன.
தற்போது அமைச்சுப் பதவிகளில் இருக்கின்ற அமைச்சர்கள் தம்மை வேறு அமைச்சுகளுக்கு மாற்றம் செய்யவேண்டும் எனத் தமக்கு அறிவிக்கவேண்டும். அமைச்சர்களினால் இவ்வாறு அறிவித்தல் விடுக்குமிடத்து, அந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் அமைச்சுகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து தருவதாக ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.
தமது அமைச்சுகளை மாற்றம் செய்து தரவேண்டுமென இதுவரையில் எந்தவொரு அமைச்சரும் மற்றும் பிரதி அமைச்சரும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கவில்லை என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## தனிநபர் வருமான தகவல்களில் மத்திய வங்கி மோசடியாம்

கொழும்பு,ஏப்.21
தனிநபர் வருமான புள்ளிவிவரத் தகவல்களில் இலங்கை மத்திய வங்கி மோசடி செய்யத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.
யதார்த்தத்திற்கு முரணாக திடீரென தனிநபர் வருமானத்தை அதிகரித்து காண்பிப்பதற்கு அரசு முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.
2011 ஆண்டில் இலங்கை தனிநபர் வருமானம் 2.836 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருடருக்கு வாக்களித்தால் துயரம்தான் தொடரும்

### சரத் பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு,ஏப்.21
திருடர்களுக்கு வாக்களித்தால் தொடர்ந்து துன்பங்களையே அனுபவிக்க வேண்டி ஏற்படும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.
கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக சென்றிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்று அரசு போலி அபிவிருத்தி தொடர்பில் பிரசாரம் செய்கின்ற போதிலும், மக்கள் வறுமையில் வாடுகின்றனர். வாழ்க்கைச் செலவு தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது.
திருடர்களுக்கு, கயவர்களுக்கு, செயற்திறனற்ற அரசியல்வாதிகளுக்கு வாக்களித்தால் மக்கள் தினமும் துயரங்களை அனுபவிக்க நேரிடும்.- என்றார்.

# கிடைப்பது கீழ்மட்டச் சம்பளமே

### அரச வைத்தியர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.21
தேசிய ஊதியக் கொள்கையில் 2006ஆம் ஆண்டு முதல் இதுவரையில் எவ்வித திருத்தங்களும் செய்யப்படவில்லை.
இதனால் அரச சேவையாளர்களில் கீழ் மட்டத்திலுள்ள சேவையாளர்களுக்குக் கிடைக்கின்ற சாதாரண ஊதியமே தமக்குக் கிடைக்கின்றதென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இந்நிலை 1:12 என்ற அடிப்படையில் உள்ளபோதும், எமது நாட்டில் 1:4 என்ற குறை பெறுமானத்திலே இந்தச் சம்பளக் கொடுப்பனவுக் கொள்கை நடைமுறையில் இருக்கின்றது.
இதனால் வைத்தியர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே சேவையாற்றுகின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

## பயங்கரவாதப் பிரிவு அதிகாரிக்கு பாதாள உலகத்துடன் தொடர்பு

### புலனாய்வுப் பிரிவினர் தகவல்

கொழும்பு,ஏப்.21
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் உயரதிகாரி ஒருவருக்கும், பாதாள உலகக்குழு தலைவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த உயரதிகாரி பாதாள உலகக் குழு தலைவர்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் மிக நெருங்கிய தொடர்புகளை பேணி வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.
குறித்த உயரதிகாரி தமது உத்தியோகபூர்வ துப்பாக்கியைக் கொண்டு பாதாள உலகக் குழுத் தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளார். இந்த உயர் பொலிஸ் அதிகாரி பாதாள உலகக் குழுக்களினால் வழங்கப்படும் பணம், ஏனைய சலுகைகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.
இந்த அதிகாரியை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழரின் உண்மை நிலையறிய சர்வதேசக் குழு அனுப்ப வேண்டும்

### சீமான் கூறுகிறார்



தமிழர்களின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கு இலங்கைக்கு சர்வதேசக் குழு ஒன்றை ஐ.நா அனுப்பி வைக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தமிழர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் குறித்து நேரில் கண்டறியச்சென்ற நாடாளு மன்றக் குழுவின் தலைவரான சுஷ்மா சுவராஜ், ஒரே நாளில் வன்னி முகாமில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு வரை புயல் வேகத்தில் பயணம் செய்து ஆங்காங்கே வாழும் சிலரிடம் மட்டும் பேசிவிட்டு, இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு தொடர்பாக அந்தநாட்டு அரசு மேற் கொண்டு வரும் பணிகள் திருப்தி யளிப்பதாகத் தெரிவித்துள்ளது வியப்பளிக்கிறது.

வன்னி முகாம்களில் இன்னமும் இருக்கின்ற தமிழர்களிடம் நாடாளுமன்றக் குழுவினர் பேசிய போது, அவர்கள் ஒருவித அச்சத்துடனேயே தங்களிடம் பேசியதாக தமிழ்நாட்டில் இருந்து சென்ற இரு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.தங்களோடு பேசிய அமக்களின் கண் களில் அச்சம் தெரிந்தது என்று மற்றொரு காங்கிரஸ் உறுப்பினரான கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

முல்லைத்தீவில் மக்களிடம் பேசிய போது அங்கு ஏராளமான இராணுவத்தினரும், சாதாரண உடையில் உளவுப் பிரிவினரும் குவிக்கப்பட்டிருந்தனர் என்று பல பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

ஆனால், இராணுவத்தின் கெடுபிடி ஏதும் இருப்பதாக எந்தத் தமிழரும் கூறவில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார்.

எனவே, இந்திய நாடளுமன்றக் குழுவின் பயணம் எந்தவிதத்திலும் பயனளிக்காது என்று கூறப்பட்ட கருத்துக்கள் உண் மையாகியுள்ளன. இப்படிப்பட்ட குழுவின் பயணத்தால் துயரத்திலும், அவலத்திலும் வாழும் தமிழர்களின் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.21

சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினால் ஆலயம் சார்ந்த சமூகப் பணிகளை மேற்கொள்வதற்கும் அறநெறிப் பாடசாலைகளை இயக்கும் முகமாகவும் சைவ அறநெறி ஒருங்கிணைப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் இந்தப் பணிகள் இடம்பெறவுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக சிவத்தமிழ் அறநெறி மையம், சித்தி விநாயகர் கோயில் வீதி, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (வ-86)

## சாயிபாபா ஞாபகார்த்த தாவரவியல் பூங்கா

மகா சமாதியடைந்த சத்தியசாயி பாபாவின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி மானிப்பாய் சாயி ஞாபகார்த்த தாவரவியல் பூங்கா (SAI-MEMORIAL BOTANICAL GARDEN) திறந்து வைக்கப் படவுள்ளது.

மானிப்பாய் கனகசபை வீதியில் உள்ள சர்வமத ஸ்தாபனத்தில் மிகப் பிரமாண்டமான தாவரவியற் பூங்கா எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.




யாழ்ப்பாணம், ஏப்.21

பொன்னாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறுகிறது. எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (வ)

* * *

அம்பேபுஸ்ஸ வறக்காபொல ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் திங்கட்கிழமையாகாரம்பமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (வ-13)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.21

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழாக்கள் தினமும் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் நடைபெறும். (வ-14)

* * *

வடமராட்சி,ஏப்.21

ஆவரங்கால் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜ இராமலிங்கசுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.10 மணி தொடக்கம் 9 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகின. யாகபூசை மற்றும் யாக ஆரம்பம் இன்று சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணிவரை இடம்பெறும். (வ-8)

## தேவார பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப்.21

அகில இலங்கைத் திருமறை மன்றம் நடத்தும் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்புகள் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மகளிர் கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு யாழ். சிவ தொண்டன் நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (வ-14)

## பொருள்களை திருடிய தாயும் மகளும் மாட்டினர்

நீர்கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் 5175ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய தாயும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நீர் கொழும்பு பொலி ஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான தாயும் மகளும் குறித்த சதொச விற்பனை நிலையத்தில் பொருள்களை கொள் வனவு செய்வது போன்று நடித்து, அங்கிருந்த 5175 ரூபா பெறுமதியான பால்மா , சீஸ், பிஸ்கட், பாடசாலை உபகரணங்கள் ஆகிய பொருள்களைத் திருடித் தமது ஆடைக்குள் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பகுதியில் மறைத்துக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளனர். இதன்போது பாதுகாப்பு ஊழியர்களால் அவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான தாயையும் மகளையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலை செய்த போது, இருவரையும் இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் மூவாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார் . கைது செய்யப்பட்டுள்ள பெண்ணின் கணவர் வெளிநாட்டில் தொழில் புரிகின்றார். அவர் குடும்பத்தைக் கவனிப்பதில்லை என்பது விசாரணை களின் போது தெரியவந்துள்ளது. (ந)


### கோழிக்குஞ்சு விநியோகம்

No.1 பிறீமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**POST OF WORKS ENGINEER [CIVIL]**
**[ON CONTRACT]**
**WALK IN INTERVIEW**

Applications are invited from suitably qualified persons for the post of Works Engineer [Civil] ( On Contract) for six months.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV and relevant documents on 26.04.2012 at 10.00 a.m in the Board Room of the University of Jaffna.

**QUALIFICATIONS**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers

and

(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Buildings, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour

**Salary Scale**: Fixed Salary Rs.45, 000.00.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**20.04.2012.**


## மரண அறிவித்தல்

## சேதுகாவலர் சங்கரப்பிள்ளை

( முன்னாள் உரிமையாளர் - சிறீகாந்தாஸ் ஸ்ரோர்ஸ், கைதடிச், சந்தி)



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சேதுகாவலர் சங்கரப்பிள்ளை (19.04.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேதுகாவலர் - சேதுப்பிள்ளை தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், கமலாட்சியின் அன்புக் கணவரும் விக்னேஸ்வரன் (கைதடி கிழக்கு மகிந்தினி களஞ்சிய உரிமையாளர்), சிறீஸ்கந்தராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சித்திராதேவி, தாரணி (லண்டன்) ஆகியோரின் மாமனும் குயிந்தன் - மகிந்தினி (கனடா), கபில்ராஜ் (லண்டன்), ஜஜீவன் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் கரிசனனின் அன்புப்பூட்டனும், செல்லம்மா, ஆறுமுகம் காலஞ்சென்ற அன்னமுத்து மற்றும் தெய்வானை காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் செல்லத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் சின்னப்பிள்ளை, கதிர்காம்பிகை, விசுவநாதன், தம்பையா, செல்லமுத்து, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சுப்பிரமணியம், சிதம்பரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

**தகவல்:**
**விக்னேஸ்வரன் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# ஈழத் தமிழர் கொல்லப்பட்டபோது ஜேர்மன் மௌனம் காத்தது ஏன்?

## முனிச் பல்கலைக்கழக கலந்துரையாடலில் கேள்வி

இலங்கைப் போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படும் போது எந்தவொரு சர்வதேச சக்திகளும் அதை நிறுத்த ஏன் முன் வரவில்லை?-இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முனிச் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வுக்கான விரிவுரையாளர் டக்மார் இராஜநாயகம்.

ஜேர்மனின் முன்சென் நகரில் சமூக ஜனநாயக கட்சியின் ஏற்பாட்டில், கடந்த செவ்வாய்க்கிழமை ''இலங்கை உள்நாட்டுப் போர் மற்றும் இடையே அமைதியான ஒருங் கிருத்தல்'' எனும் தலைப் பில் முனிச் பல்கலைக் கழ கத்தின் இந்திய ஆய்வுக் கான விரிவுரையாளர் டக்மார் ராஜநாயகத்தின் சொற்பொழிவும் கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளன.

அவர் தமது உரையில் மேலும்தெரிவித்ததாவது:-

லிபிய சர்வாதிகாரி கடாபி தூக்கியெறியப்பட்டதற்கு வழிவகுத்த சர்வதேச சக்திகளின் இராணுவத் தலையீடு அனைவரின் மனதிலும் உள்ளது. சிரியா தொடர்பாக, சர்வதேச நாடுகள் தின மும் நெருக்கடி அமர்வுகளை மேற்கொள்ளுகின்றன.

இவ்வாறு பல நாடுகளில் சர்வதேச வல்லரசு மற்றும் அமைப்புக்கள் தமது கவனத்தைக் காட்டும் வேளையில், இலங்கைப் போரில் பல் லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்படும் போது எந்தவொரு சர்வதேச சக்திகளும் அதை நிறுத்த ஏன் முன்வர வில்லை?.

பல்வேறு நாடுகளில் நடைபெறும் பல போர்களுக்கு முற்றிலும் வேறுபட்ட சர்வதேச எதிர்வினைகள் உள்ளன. லிபியா விடயத்தில், சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைக்கு வழி வகுத்த 'பாது காக்கும் பொறுப்பு' என்ற சர்வதேச சட்டக் கொள்கை இருந்தாலும்,ஏன் அதேபோல் ஜேர்மன் அரசியல் வாதிகள் மற்றும் ஊடகங்கள் இலங்கைப் போர் தொடர்பில் அக்கறை காட்டவில்லை அது ஏன்?- என்று கேட்டார் அவர்.

நிகழ்வின் இறுதியில், இலங்கை அரசால் உரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்படும் இனமான ஈழத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தில், ஜேர்மன் மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் எதிர்காலத்தில் தமது கவனத்தைக் கூடுதலாகச் செலுத்தவேண்டும் என்று நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். (ந)

# நாடு கடந்த தமிழீழ அரசின் எழுச்சிக் கூட்டங்கள் நாளை

## சுவிஸ், ஆஸி., ஜேர்மனியில்

நாடுகடந்த தமிழீழ அரசின் வெவ்வேறு பொதுக் கூட்டங்கள் சுவிற்சர்லாந்து, ஆஸ்திரேலியா, ஜேர்மன் ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ளன என்று தகவல்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைச் சபைத் தீர்மானம், தமிழர் போராட்டத்தின் நகர்வுகள், நாடுகடந்த தமிழீழ அரசின் செயற்பாடுகள் மற்றும் மக்களின் கேள்விகளுக்கான விளக்கங்கள் உட்படப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக, இந்தப் பொதுக் கூட்டங்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ''ஐ.நா. மனித உரிமைச் சபைத் தீர்மானமும், தமிழர் விடுதலைப் போராட்டமும் ''எனும் மையப் பொருளில் நாளை ஞாயிற்றுக்கிழமை அரசியல் கருத்தரங்கமாக அமையும் இந்தப் பொதுக் கூட்டம், சுவிஸின் சூரிச்நகரில் இடம்பெறுகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் காணொலி ஊடாக சிறப்புரையாற்றுவதோடு, மக்களின் கேள்விகளுக்கு விளக்கமளிக்க உள்ளார். நாடுகடந்த தமிழீழ அரசின் சுவிஸ் உறுதுணைக் குழுவின் ஏற்பாட்டில் இந்த அரசியல் கருத்தரங்கம் இடம் பெறுகின்றது. அதேதினம் ஜேர்மனியில் இடம்பெறுகின்ற நிகழ்வு, தியாகச் சுடர் அன்னை பூபதியின் வணக்க நிகழ்வை உள்ளடக்கிய மக்கள் அரங்கமாக அமையவுள்ளது.

அதேபோன்று ஐ.நா. மனித உரிமைச் சபைத் தீர்மானத்தை மையப்படுத்தி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நகர்வைப் பேசுபொருளாகக் கொண்டு ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரிலும் பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

முள்ளிவாய்க்காலின் பின்னரான சுதந்திர தமிழீழம் நோக்கிய, ஈழத் தமிழர்களின் ஜனநாயகப் போராட்ட வடிவமாகவுள்ள நாடுகடந்த தமிழீழ அரசின் இந்த நிகழ்வுகளில், அனைவரையும் பங்கெடுத்து, ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு வலுவூட்டுமாறு தகவல் துறை அமைச்சகம் கோரியுள்ளது. (ந)

# தமிழ்ச் சிறுமி மீது துப்பாக்கிச் சூடு நடத்திய மூவருக்கு லண்டனில் சிறைத் தண்டனை

லண்டனில் தமிழ்ச் சிறுமி மீது துப்பாக்கிச்சூடு நடத்திய மூவருக்கு லண்டனிலுள்ள நீதிமன்றம் நேற்றுமுன்தினம் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

தெற்கு லண்டனில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கடந்த ஆண்டு மார்ச் மாதம், கொள்ளையடிப்பதற்காகப் புகுந்த மூவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் துசா கமலேஸ்வரன் என்ற சிறுமி நெஞ்சில் படுகாயமடைந்தார்.

இதனால் அவர் உடல் செயலிழந்தது. தற்போது அந்தச் சிறுமி சக்கர நாற்காலியில் நடமாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூட்டுச் சம்பவக் காட்சிகள் வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் காணொலிப் பதிவுக் கருவியில் பதிவானது.

இதையடுத்து குற்றவாளிகள் மூவரையும் கைது செய்த பிரிட்டிஷ் பொலிஸார் அவர்கள் மீது கொலை முயற்சி வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கின் மீதான தீர்ப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

அதில் குற்றவாளிகளில் ஒருவர் குறைந்தது 17 ஆண்டுகளும், ஏனைய இருவரும் குறைந்தது 14 ஆண்டுகளும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பளித்தார். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் மூவரும் கறுப்பினத்தவர்களாவர். (ந)

# சூரியனின் மேற்பரப்பில் மிகப்பெரிய விரிசல்கள்

சூரியனின் மேற்பரப்பின் கிழக்குப் பகுதியில், மிகப் பெரிய விரிசல்கள் ஏற்பட்டுள்ளன என்று அமெரிக்காவின் நாஸா விண்வெளி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இந்த வெடிப்புக்களும் விரிசல்களும் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள நாஸா, சூரியனில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நாஸாவினால் அனுப்பப்பட்டுள்ள எஸ்.டி.ஓ விண்கலம் மூலமே இவை அவதானிக்கப்பட்டன. எனினும் இந்த வெடிப்பு மற்றும் விரிசலினால் பூமிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

SAAMSON ENGLISH
3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி

கொழும்பில் சிலகாலம் தங்கிவிட்டு வருபவர்கள், சிங்களத்தில் சரளமாக பேசுவதை நீங்கள் பார்த்திருக்கிறீங்களா? அந்நபர் சில வேளை 5ஆம் வகுப்புக் கூடப் படிக்காதவராக இருக்கலாம்.

உலகில் எந்தவொரு மொழியைப் பழகுவதற்கும் ''தகைமை'' தேவையில்லை பலரும் ஆங்கிலத்தை பிழையான வழியில் கற்றுக்கொண்டதனாலேயே ஆங்கிலம் பழகுவதை இன்றும் வெறுக்கின்றனர்

எமது ஆங்கிலப் பயிற்சி முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு முறையிலானதாகும்.

கரும்பலகை, வெண்கட்டி, கணினி புத்தகம், CD எதுவுமின்றி எமது ஆசிரியர்கள் உங்களுடனிருந்து ஆங்கில வசன அமைப்பு, பிரயோகம், இணைக்கும் சொல், சொற்றொடர் என்பவற்றை பேச்சுப்பயிற்சியின் மூலம் உங்கள் மனதில் பதியவைக்கும் ஒரு''Practical'' ஆன பயிற்சியாகும்.

இது நீங்கள் சிறு குழந்தையாக இருந்தபோது (2-4 வயது) எப்படி உங்கள் பெற்றோர் பேசியதை அவதானித்து தமிழைப்பேசப்பழகினீர்களோ அதே போலானதாகும்.

கடந்த ஆண்டில் மாத்திரம் 2000 இற்கும் அதிகமானவர்கள் பயிற்சிபெற்ற எமது நிறுவனத்தில் பயிற்சி பெற விரும்பும் இளைஞர், யுவதிகள், தொழில்தேடுவோர், A/L, O/L பரீட்சை எழுதியோர் தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவிருப்போர், பாடசாலை உயர்கல்வி மாணவர்கள் 22.04.2012 இற்கு முன் நேரடியாக பதிவு செய்யுங்கள் (எமது நிறுவனம் வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.)

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10
பிரிவு II 10 - 12
பிரிவு III 01 - 03
பிரிவு IV 03 - 05

3 மாத பயிற்சிக் கட்டணம் ரூபா 3000.00

SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776214567

தென்னங்கானி விற்பனைக்குண்டு

வரணி, இயற்றாளையில், பருத்தித்துறை வீதியிலிருந்து மேற்காக 150 மீற்றர்தூரத்தில்தென்னங்காணி உடன் விற்பனைக்குண்டு. மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை தொடர்பு கொள்ளலாம்
தொடர்பு:-
077 7222305

கிருஷ்ணா அடகு சேவை

இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2011 ஆம் ஆண்டு (28.02.2011) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி (15.05.2012) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையை கூட்டிப்பெற்றுக்கொள்ளவும். அல்லது ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் (15.05.2012) ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல. 370, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே : 021 4900311

இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2225046
உரிமையாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலையின் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 21

இலங்கைத் தேயிலையின் விலை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, உலக சந்தையில் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றது.

இலங்கையின் தாழ்நில மற்றும் இடைநிலத் தேயிலைகளின் விலைகள் ஓரளவு வளர்ச்சிகண்டுள்ளது.

எனினும் உயர்நிலத் தேயிலை உற்பத்தியின் விலைகள், உலக சந்தையில் குறைவாகக் காணப்படுவதாக, தேயிலை முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

டொலருக்கு நிகரான இலங்கை நாணயப் பெறுமதி குறைக்கப்பட்டமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2011ம் ஆண்டு காணப்பட்ட உயர்நிலத் தேயிலைக்கான விலை, இந்த ஆண்டு ஒப்பீட்டளவில் அதிகரித்திருந்த போதும், டொலர் பெறுமதியில் அது கணிசமான வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

கடந்த வருடத்தின் சராசரி தேயிலை விலையாக 373 ரூபா 27 சதம் பதிவாகி இருந்தது. அதாவது 3.35 டொலர்களாகும்.

இந்த ஆண்டு அது 396 ரூபா 54 சதமாக அதிகரித்திருந்தபோதும், அமெரிக்க டொலர்களின் நிகரப்பெறுமதியில் பார்க்கும் போது, 3.06 டொலர்கள் என்ற வீழ்ச்சியான பெறுமதியைக் காட்டுகிறது.

(எ)

# வலுவிழந்தோருக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 21

சமூக சேவைகள் அமைச்சின் வலுவிழந்தோருக்கான தேசிய செயலகத்தினர் அங்கவீனமுற்றோரைக் கொண்ட குடும்பங்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான விண்ணப்பங்களைப் பிரதேச ரீதியாகக் கோரியுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் அங்கவீனமுற்றோரைக் கொண்ட குடும்பங்களைத் தெரிவு செய்து தகைமையுள்ளோரின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு தேசிய செயலகத்தினர் அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார்.

அங்கவீனமுற்றோர் தொடர்பான மருத்துவச் சான்றிதழ், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பம் என்னும் சான்றிதழ், அங்கவீனமுற்றவரின் பெயரில் உள்ள காணி உறுதி அல்லது அவரின் பெயரில் தற்போது காணி உறுதி இல்லையாயின் அவருக்கு உரித்தை உறுதிப்படுத்தும் பெற்றோரின் உறுதிமொழிக் கடிதம் ஆகியவற்றை இணைத்து அனுப்பி வைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திதி 21.04.2012

மண்ணுலகில் 21.11.1947 — விண்ணுலகில் 25.04.2009

அமரர்

### குணலோகநாயகி இராஜரட்ணம் (BA)

இன்னும் பல ஜென்மங்கள் இருக்குமென்றால்!
அதிலும் நீங்களே எம் தாயாக வேண்டுமென
கடவுளிடம் நின்றோம் இறை அருள் வேண்டி!
இந்த ஜென்மம் நாம் பெற்ற நன்மைகள்!
வேண்டும் எமக்கு ஏழேழு ஜென்மமும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்!

கணவர் ஆ.இராஜரட்ணம் (Porject Manager. CARE International, Vavuniya)
பிள்ளைகள். சர்வானந்தா, (Term Leader, Ceylinco Life. Colombo)
அனுஷென். (UK)

## கார் விற்பனைக்குண்டு



நல்ல நிலையிலுள்ள வெள்ளை நிற முடைய PEUGEOT கார் விற்பனைக் குண்டு.

தொடர்பு : 077 3126374

## தேவை

முல்லைத்தீவில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு

- ★ சமையலாளர்கள்
- ★ உபசரிப்பாளர்கள்
- ★ உதவியாளர்கள்

தேவை

தொடர்பு : 077 5360958

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர் கொட்டடிச் சந்திக்கு மிக அருகில் (S.V.M காஸ் விற்பனை நிலையத்துக்குப் பின்புறம்) 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0772279219

## தவறிவிட்டது

19.04.2012 திகதியன்று கனகம்புளியடி சந்திக்கும், வதிரிக்கும் இடைப்பட்ட பாதையில் தங்க கைச்சங்கிலி ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு : 077 422 3103, 077 3345649

## மரண அறிவித்தல்

### பொன்னையா பாலசுந்தரம்

*(உரிமையாளர், ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ், மாத்தளை)*



நீர்வேலி வடக்கு, மாசிவனைப் பிறப்பிடமாகவும்நவக்கிரி மேற்கு, புத்தூரை வசிப்பிடமாகவும் தற்போது 3/7A, தேவாலய வீதி, மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசுந்தரம் (18.04.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா - ஆச்சிமுத்து தம்பதியரின் மூத்த மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், கோசலா, பார்த்தீபன் (கனடா), லிங்கரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருக்குமரனின் (லண்டன்) மாமனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி (நீர்வேலி), விக்னேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), புனிதமலர் (நீர்வேலி), விஜயலஷ்சுமி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், ஜெயவேணி (கனடா), மதுரநாயகி (கனடா), சந்திரவதனி (கனடா), நவஜோதி (கனடா), அமிர்தலிங்கம் (உபதபாலகம் - நீர்வேலி), செல்வரட்ணம் (ஸ்ரீ விஷ்ணு அசோசியேட், கொழும்பு) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், அரியதாஸ் (ஆசிரியர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), தர்மானந்தன், இந்துமதி ஆகியோரின் சிறியதந்தையும், திவாகரன், தசாதரன் (லண்டன்), சஞ்சீவன் (லண்டன்), பூரணி ஆகியோரின் பெரியதந்தையும், நகுலன், ஜெரசா, கபிலன், அர்சனா, கேசவன், கபிசன், கௌசிகா, சர்வஜன், சர்வஜினா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களுதாவளை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

3/7A, தேவாலய வீதி, மாத்தளை. (17236) (2-9-6) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும், காப்பாளரும், முன்னாள் பதிவாளராகக் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் கடமையாற்றியவருமான

### அமரர் வெற்றிவேலு முதலியார் கனகரட்ணம் இராசேந்திரா M.A.

அவர்கள் தனது 96 ஆவது அகவை யில் 14.04.2012 இறைவனடி சேர்ந்ததனை குறித்து



அன்னார் நிலைய ஆரம்பத்திற்கும், வளர்ச்சிக்குமாக வீடு வீடாகச் சென்று அங்கத்தவர்களைத் திரட்டியதனையும் இலவச சிறுவர் பாடசாலை, இலவச ஆங்கில வகுப்பு, இலவச பெண் கள் தையல் வாழைநார் பின்னல் பயிற்சி, இலவச நூலகச் சேவை என்பவனவற்றை நிலையத்தில் வெற்றிகரமாக நடத்தியதுடன்,

பகவத் கீதை போதனையினையும், நடன வகுப்பினையும், சிங்கள வகுப்பினையும், தினசரி பத்திரிகை சேவையினைத் தொடர்ந்து நடத்துவதற்கும் முன்னின்று உழைத்ததனையும் இவ்வேளையில் நினைவு கூர்ந்து,

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர்.

75/2, செட்டித்தெரு, நல்லூர்.

(17241) (2-7-9)

## ஜுவல் பிளாசா Jewel Plaza

தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை






தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை (24.04.2012) நாளன்று விசேட விலைக்கழிவுகளும் பெறுமதிமிக்க பரிசுகளும் அள்ளி வழங்கப்படும்.



கண்கவரும் டிசைன்களில் தரம், நாணயம், சரியான நிறையுடன் ஓடர் செய்து குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும் மற்றும் அசல் சிங்கப்பூர் நகைகளை தரம், நிறை விலைகளில் பங்கம் ஏற்படாத வண்ணம் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 021 222 3124

ஜுவல் பிளாசா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வாடகை

35/2, Power House Road, 3rd Lane, Jaffna எனும் முகவரியில் உள்ள இரு மாடி வீடு வங்கி, அரச ஊழியர்கள் ஸ்தாபனம் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் தங்குவதற்கும் வழங் கப்படும். விரும்பியவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

## வீடு வாடகைக்கு

இல.28, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியில் 5 அறை, Hall, குசினி, 2 குளியலறைகள், வாகனத்தரிப்பிடம் இன்னமும் 4,5 வாகனங்களும் விடக்கூடிய வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனைக்கு உகந்தது.

தொடர்புக்கு:
T.P : 077 9424506, 077 6566820

## ECONOMICS CLASSES

Mr. G . ஞானச்சந்திரன்
B.A (ECO), M.Sc (Eco) Peradeniya
A/L, GAQ, B.A,B.COM, AAT, CIMA
இடம் : திருநெல்வேலி சந்தி, அருகில்
தொடர்பு : 077 8780814

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற் பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூபா 450 /= மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை திறக்கப்படும்.

தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6944


# சுயதொழில் கொடுப்பனவு வலுவிழந்தோருக்கு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.21

நாட்டில் உள்ள அங்கவீன முற்றோருக்கான சுயதொழில் கொடுப்பனவுத் தொகை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக் கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அங்க வீனமுற்றோருக்கான சுய தொழில் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது.

சமூக சேவைகள் அமைச் சின் அங்கவீனமுற்ற நபர்க ளுக்கான தேசிய செய லகத்தினர் கடந்த ஜனவரி தொடக்கம் இந்தக் கொடுப் பனவுத் தொகையை 25 ஆயிர மாக அதிகரிக்கப்பட்டுள்ள தாக அறிவித்துள்ளார்.

சுயதொழில் உதவி கோருப வர்களின் மருத்துவ அத் தாட்சிப் பத்திரம், 3 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட வரு மானம் உள்ளதை உறுதிப் படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழ், சமூக சேவை அலுவலரால் இந்த நபர் தொடர்பான முழு அறிக்கை போன்றவற்றை அனுப்பி வைக்குமாறு சகல பிரதேச செயலர்களையும் அங்கவீன முற்றவர்களுக்கு தேசிய செயலகப் பணிப்பாளர் எம்.டி. சி.ஜயமன்ன தெரிவித்துள்ளார்.

## காலாவதியான பொருள்கள் அழிப்பு

கோப்பாய்ச் சந்திப் பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை பொதுச் சுகாதா ரப் பரிசோதகர்கள் நடத் திய திடீர் சோதனை நட வடிக்கையின் போது காலா வதியான பொருள்ளகள் பல வர்த்தக நிலையங்களி லிருந்து மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய்ச் சந்தி மற் றும் மானிப்பாய் வீதிப்பகுதி யில் உள்ள 20 வர்த்தக நிலை யங்கள் மீது தேடுதல் மேற் கொள்ளப்பட்டது.

கோப்பாய், உரும்பிராய், நீர்வேலிப் பகுதிக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோத கர்கள் மூவர் இணைந்து நடத்திய சோதனையை யடுத்தே இவை அழிக்கப் பட்டன.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## SERVICES OF TECHNICAL ASSISTANT
## [ON ASSIGNMENT]
## WALK IN INTERVIEW

Applications are invited from suitably qualified persons in order to carry out following tasks:-
* Preparation of BOQ and Estimates
* Preparation of Measurements and Drawings
* Rate Analysis

Candidates, who are interested in the above are requested to present themselves for an interview with their CV and relevant documents on 26.04.2012 at 10.30 a.m in the Board Room of this University.

**QUALIFICATIONS**

(A) National Diploma in Technology [NDT] or equivalent qualifications and have at least four years experience in the relevant filed after obtaining such qualifications.

OR

(B) National Certificate in Technology [NCT] or equivalent qualifications and have at least ten years experience in the relevant filed after obtaining such qualifications.

OR

Retired Technical Officers Class I

**Remuneration**: Negotiable

REGISTRAR, University of Jaffna,
20.04.2012.

(C/1005) (2-7-9)

## சிறந்த பொழுது போக்கின் உல்லாசப் பயணிகளின் மகிழ்விடம்

# ELITE ENTERTAINMENT

A-9, Road, Nunavil, Chavakachcheri.

# எலைற் என்ரரெயின்மென்ற்

ஏ-9, வீதி, நுணாவில், சாவகச்சேரி.

தொ.பே: 021 227 0500, 0775462487

விடுமுறைக்காலங்களில் இன்பமாகக் கழித்து மகிழ உன்னதமான இடம்.
சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும்
நீச்சல் உட்பட சகல பொழுதுபோக்கு இடம்.
அத்துடன் தங்குமிட வசதிகளுடன் விரும்பிய உணவு வகைகள் உட்பட
(பிரத்தியேகமான றூம் வசதிகளும் உண்டு)






(S/1002) (2-6-7)

தங்கத் திருநாளான
*அக்ஷய திருதியை தினத்தில்*
காலை 7.00 மணிமுதல்
இரவு 9.30 மணி வரை திறந்திருக்கும்



தங்கத் திருநாளான எதிர்வரும் (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்.

தரம், நாணயம், உத்தரவாதம் கொண்ட நகைகளை கொள்வனவு செய்ய நாட வேண்டிய ஒரே இடம்

# மைதிலி நகைமாடம்

89 V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7902

# யாழ். மைதிலி ஜுவலரி


79 Z, செட்டியார் தெரு, கொழும்பு-11
0112 396239

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை அணி – ஜொனியன்ஸ் இன்று பலப்பரீட்சையில்





யாழ். மாவட்டத்தில் பலம் மிக்க கிரிக்கெட் அணிகளாக பல்கலை அணியும், ஜொனியன்ஸ் அணியும் கருதப்படுகின்றன. இந்தச் சுற்றுப்போட்டியில் முதல்முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ள ஜொனியன்ஸ் கிண்ணத்தை வெல்ல கடுமையாகப் போராடுமா? அல்லது ஜொனியன்ஸ் அணியின் எண்ணத்தை தவிடுபொடியாக்கி வெற்றிக் கிண்ணத்தை பல்கலைக்கழக அணி தக்கவைக்குமா?

வலி.வடக்கு ஏப். 21

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அழைக்கப்பட்ட கழங்கங்களுக்கு இடையே நடத்திவரும் 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை 21 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு அவையும் கிரிக்கெட் அணியும் இணைந்து நடத்தும் இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கிரிக்கெட் அணியும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொள்ளவுள்ளன.

இந்த இறுதிப் போட்டி நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியரும், பல்கலை அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரருமான எ.சகாயராஜாவும், வவுனியா மாவட்டக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் கே.சசிகரனும் கலந்து கொள்வர்.

இரு அணிகளுமே சம நிலையில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியைப் பொறுத்தவரையில் எந்தப் பந்து வீச்சாளர்களையும் எதிர்கொண்டு அதிரடியாக ஆடக்கூடிய துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டுள்ளது. அதேவேளை ஜொனியன்ஸ் அணியும் சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட அணியாகக் காணப்படுகின்றது. அத்துடன் இரு அணிகளிலும் உள்ள பந்து வீச்சாளர்களும் இலேசுப்பட்டவர்கள் அல்லர். இந்தச் சுற்றுப் போட்டியில் பல்கலை அணியின் பந்து வீச்சாளர்களும், ஜொனியன்ஸ் அணியின் பந்து வீச்சாளர்களும் மிகவும் இக்கட்டான நிலைகளில் கூட அணியின் பக்கம் வெற்றியைத் திருப்புவதற்கு உறுதுணையாக இருந்தார்கள். இவர்களின் மிரட்டலான பந்து வீச்சும் இவ்விரு அணிகளும் இறுதிப் போட்டிக்கு நுழைவதற்கு முக்கிய காரணம்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியானது இரு அணிகளுக்கும் பலப்பரீட்சையாக அமையவுள்ளது. அத்துடன் பார்வையாளர்களுக்கு விறுவிறுப்பான போட்டியாகவும் இது அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

(ங-23-86)

## ஆண்களுக்கான பூப்பந்தாட்டத்தில் உடுவில் பிரதேச செயலகம் சம்பியன்



மூன்று சுற்றுக் களைக்கொண்ட இந்தப் போட்டியில் இரண்டு ஒற்றையர் சுற்றுக் களையும் உடுவில் பிரதேச செயலக அணி தன்வசமாக்கிச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வலி.வடக்கு, ஏப்.21

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ் மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ் மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேநடத்தியஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி யாழ் மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நல்லூர்ப் பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் இரண்டு ஒற்றையர் சுற்றுக்களையும் உடுவில் பிரதேச செயலக அணி தன்வசமாக்கிச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

முதல் ஒற்றையர் சுற்றில் நல்லூர் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த கே.சனேந்திராவும் உடுவில் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த எஸ்.துஷாந்தனும் மோதிக் கொண்டனர். இதில் உடுவில் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த எஸ். துஷாந்தன் 21:07, 21:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாம் ஒற்றையர் சுற்றில் நல்லூர் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த என்.ரம்மிய ராகுலனும் உடுவில் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த எம்.விஜிநாதனும் மோதிக்கொண்டனர். இதில் ரம்மிய ராகுலன் 21:13, 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் சுற்றில் உடுவில் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த ஜ.ரெமின்சனும் நல்லூர் பிரதேச செயலக அணியைச்சேர்ந்த என்.அபராஜிதனும் மோதிக்கொண்டனர். இதன்போது ரெமின்சன் 21:06, 21:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

ஆட்ட நிறைவில் உடுவில் பிரதேச செயலக அணி 02:01 என்ற சுற்றுக்கள் கணக்கில் நல்லூர் பிரதேச செயலக அணியை வீழ்த்தி யாழ்.மாவட்டச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

(ங-86)

## மேசைவரிப்பந்தாட்டம் இன்றுமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப் 21

சிலாப் சொலுசன் தனியார் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் மேசைவரிப்பந்தாட்ட ஆண், பெண் அணிகளும் இணைந்து நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மேசைவரிப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8. மணிமுதல் யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் மேசைவரிப்பந்தாட்ட உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி இன்றும், நாளையும் இருநாள்களுக்கு நடைபெறும்.

ஆண்கள் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி, யூனியன் கல்லூரி, யாழ் ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஒஸ்கா விளையாட்டுக் கழகம், ஆனைக்கோட்டை ஆர்.சி.ரி.எம்.எஸ், யாழ் இந்துக் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ் பல்கலைக்கழக அணி ஆகியனவும் -

பெண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக் கழக அணி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகியனவும் -

மேற்படி போட்டியில் பங்குபற்றுகின்றன. (ங-23)

## கிளிநொச்சியில் 'ரக்பி' போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.21


தமிழ் -சிங்களப் புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக கிளிநொச்சி அக்கராயன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஏற்பாட்டில் நேஷன் லங்கா பினான்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கனிஷ்ட பிரிவு அணிகளுக்கு இடையிலான ரக்பி சுற்றுப் போட்டி எதிர் வரும் 28 ஆம் திகதி கிளிநொச்சி கோணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக பிரிகேடியர் அத்துலகலகேயும், கௌரவ விருந்தினராக காமினி பெர்னாண்டோவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ங-23)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மகளிர் அணிகளுக்கிடையிலான கரம் சுற்றுப் போட்டி [illegible] கல்லூரி மண்டபத்தில், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் மு.நடராஜா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலை



மேற்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மழை புகுந்து விளையாட முடிவு சமநிலையானது.

ஆஸ்திரேலிய அணி, மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் ரினினாட்டில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

வொட்ஸன், மைக்ஹஸி இருவரது அரைச்சதத்தின் உதவியுடன் முதலாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 135 பந்துப் பரிமாற்றங்களைச் சந்தித்து 311 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் கெமர ரோச் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல இலக்குகளையும் இழந்து 257 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சந்தர்போல் 94, டெனோநரேன் 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் லயோன் 5 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார்.

54 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி ரோச்சின் பந்து வீச்சில் நேற்றுமுன்தினம் திணறியது. ஆட்டநேர நிறைவில் ஆஸ்திரேலிய அணி 3 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பொண்டிங் 32, அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய ஆட்டம் ஆரம்பமானதும் பொண்டிங் மேலதிகமாக 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க ஆஸி. அணி 93 ஓட்டங்களுக்கு நான்காவது இலக்கினை இழந்தது. அதன் பின்னர் அணி மேலும் இரண்டு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 15 ஓட்டங்களுடன் சமியின் பந்து வீச்சில் வெளியேற்றப்பட்டார்.

அடுத்தடுத்த இழப்புகளின் பின்னர் மைக்ஹஸி, மத்தியூ வேட் இணைந்து ஆஸிக்கு சிறந்த இணைப்பாட்டம் வழங்கினர். 50 ஓட்டங்களை ஆறாவது இலக்குக்கு பகிர்ந்த இந்த ஜோடி 145 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரோச்சால் பிரிக்கப்பட்டது. ஹஸி 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் சாதிக்காத நிலையில் அணி 160 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 8 இலக்குகளை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. வேட் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ரோச் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.


215 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெறுவதற்காக அதிரடியாக ஆட முடிவு செய்தது. பரத், கெரன் பவல் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கி அதிரடியை தொடங்கிய போதும் பவல் 4, பரத் 5 ஓட்டங்களுடன் ஹில் பென்ஹாஸினால் வெளியேற்றப்பட அணி 13 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்தது.

இதன் பின்னர் களம்புகுந்த அணித்தலைவர் சமி, டரன் பிரவோ சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். நேற்றைய நாளின் இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 2 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. சமி 30, பிராவோ 8 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். மழை காரணமாக நேற்றைய நாளில் 40 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுமே வீசப்பட்டது. கடைசி இரு நாள்களும் மழையால் பாதிக்கப்பட்டமையினால் ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றது. ஆட்டநாயகனாக ரோச் தெரிவானார். (5)

# புனேயைப் புரட்டிய சென்னைச் சிங்கங்கள்

ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் அசத்திய சென்னை சூப்ப கிங்ஸ் அணி, புனே வாரியர்ஸ் அணியை 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் சொந்த மண்ணில் தாங்கள் சிங்கங்கள் என்பதை சென்னை வீரர்கள் நிரூபித்துக் காட்டினர்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 24 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ், புனே வாரியர்ஸ் அணிகள் மோதின. சென்னை அணியில் தொடர்ந்து சொதப்பிய முரளி விஜய் நீக்கப்பட்டார். இவருக்குப் பதிலாக விரிதிமன் சஹா வாய்ப்பை பெற்றார். யோ மகேஷ், நண்பரின் இறுதிச் சடங்கில் பங்கேற்க தென்னாபிரிக்கா சென்ற அல்பி மோர்கலுக்குப் பதிலாக ஜகாதி, பொலஞ்சர் அணியில் இடம்பெற்றனர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புனே அணியின் தலைவர் கங்குலி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.



### வலுவான தொடக்கம்

சென்னை அணிக்கு பத்ரிநாத், டு பிளசிஸ் இணைந்து வலுவான அடித்தளம் அமைத்தனர். சாமுவேல்ஸ் பந்துப் பரிமாற்றத்தில் பத்ரிநாத் வரிசையாக இரண்டு பவுண்டரிகளை அடித்தார். மறுபக்கம் புவனேஷ் குமாரின் பந்துப் பரிமாற்றத்தில் பிளசிஸ் ஒரு சிக்சர், பவுண்டரி விளாசினார். தொடர்ந்து மிரட்டிய பத்ரிநாத், புவனேஷ் குமார் பந்துப் பரிமாற்றத்தில் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்து, அரைச்சதம் கடந்தார்.

இந்த நேரத்தில் 16 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய மர்லான் சாமுவேல்ஸ் இரட்டை அடி கொடுத்தார். மூன்றாவது பந்தில் பிளசிசை (58) வெளியேற்றினார். 5 ஆவது பந்தில் பத்ரிநாத்தை (57) ஆட்டமிழக்கச் செய்தார். நெஹ்ரா வீசிய அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் ரெய்னா 'ரன் அவுட்டாக', சிக்கல் ஏற்பட்டது.

### டோனி அதிரடி

பின்னர் டோனி, டுவைன் பிராவோ இணைந்து துணிச்சலாக போராடினர். ராகுல் சர்மா பந்தில் சிக்சர் அடித்த பிராவோ 12 ஓட்டங்களுக்கு வெளியேறினார். சாமுவேல்ஸ் வீசிய கடைசிப் பந்து பரிமாற்றத்தில் டோனி, ரவிந்திர ஜடேஜா தலா ஒரு சிக்சர் விளாசினர். சென்னை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 164 ஓட்டங்கள் எடுத்தது. டோனி (12) பந்தில் 28 ஓட்டங்கள், 3 பவுண்டரி, 1 சிக்சர்), ரவிந்திர ஜடேஜா (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### குலசேகரா மிரட்டல்

சவாலான இலக்கை விரட்டிய புனே அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பினர். குலசேகரா பந்தில் அஷ்வினின் அருமையான பிடியெடுப்பில் உத்தப்பா (8) வெளியேறினார். தொடர்ந்து அசத்திய குலசேகரா வேகத்தில் ஜெசி ரைடரும் (9) காலியானார். பொலஞ்சர் பந்துப் பரிமாற்றத்தில் 3 பவுண்டரி விளாசிய அணித்தலைவர் கங்குலி நம்பிக்கை கொடுத்தார். பிராவோ பந்தில் மனிஷ் பாண்டே (13) ஆட்டமிழந்தார். ஜகாதி சுழலில் கங்குலி (24) சிக்கினார். அஷ்வின் வலையில் சாமுவேல்ஸ் (26) வீழ்ந்தார்.

பின் ஸ்டீவன் ஸ்மித், அஞ்சலோ மத்தியூஸ் இணைந்து போராடினர். 19 ஆவது பந்துப் பரிமாற்றத்தை துல்லியமாக வீசிய பொலஞ்சர், ஸ்டீவ் ஸ்மித்தை (23) வெளியேற்றியதோடு, 4 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்தார். கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் புனேஅணியின் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டன. டுவைன் பிரோவோ கலக்கலாக பந்துவீசினார். முதல் பந்தில் மத்தியூஸ் (27) 'போல்டாக', சென்னை ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். இறுதியில் புனே அணி 20 பந்துப் பரிமாற்றத்தில் 7 இலக்குகளுக்கு 151 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. புனேயிடம் கடந்த ஆட்டத்தில் சந்தித்த தோல்விக்கு இந்த முறை சென்னை அணி சரியான பதிலடி கொடுத்தது. ஆட்ட நாயகன் விருதை குலசேகரா வென்றார். (5)



# கலக்கினார் பீற்றர்ஸன்




ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் கெவின் பீற்றர்சன் சதம் விளாச, டெல்லி டேர்டெவில்ஸ் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது. ஏற்கனவே சென்னை, மும்பை அணிகளை அடுத்தடுத்து வீழ்த்திய டெல்லி அணி, 'ஹட்ரிக்' வெற்றியைப் பதிவு செய்தது. டெக்கான் அணி, தொடர்ந்து நான்காவது தோல்வியை பெற்றது.

டெல்லியில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடருக்கான 23 ஆவது லீக் ஆட்டத்தில், டெல்லி டேர்டெவில்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற டெக்கான் அணித்தலைவர் சங்ககரா, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

டெக்கான் அணிக்கு சங்ககரா (1) மோசமான தொடக்கம் கொடுத்தார். பின்னர் இணைந்த ஷிகர் தவான், பார்த்திவ் படேல் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. அகார்கர் பந்தை சிக்சருக்கு பறக்க விட்ட தவான் (44), 2 ஆவது இலக்குக்கு 71 ஓட்டங்கள் சேர்த்த போது, நதீம் சுழலில் ஆட்டமிழந்தார். இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த பார்த்திவ் பட்டேல் (45) ஓரளவு நம்பிக்கை அளித்தார்.


ராஜஸ்தானுக்கு எதிராக அரைச்சதம் அடித்த டுமினி (4) இந்த முறை ஏமாற்றினார். டேனியல் கிறிஸ்டியன் (19) சோபிக்கவில்லை. ஜுன்ஜுன்வாலா (4), ஸ்டைன் (2), அமித் மிஸ்ரா (6) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். இலக்குகள் ஒருபுறம் சரிந்தாலும் மறுமுனையில் பொறுப்பாக ஆடிய பரத் சிப்லி, அகார்கர் பந்தில் ஒரு சிக்சர், இரண்டு பவுண்டரி அடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். டெக்கான் அணி, 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளுக்கு 157 ஓட்டங்கள் எடுத்தது. சிப்லி (25), அன்கீத் சர்மா (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். டெல்லி அணி சார்பில் மோர்கல், நதீம் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய டெல்லி அணிக்கு முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றம் அளித்தனர். பிரதாப் சிங் வேகத்தில் நமன் ஓஜா (1) நடையை கட்டினார். சேவக் (7), ஸ்ரைன் பந்தில் ஆட்டமிழந்தார். ஜெயவர்தனா (6), கிறிஸ்டியனிடம் சரணடைந்தார். அடுத்து வந்த ரோஸ் ரெய்லர் (13), ஷிகர் தவானின் துல்லியமான எறியில் 'ரன்-அவுட்' ஆனார். டெல்லி அணி 65 ஓட்டங்களுக்கு 4 முக்கிய இலக்குகளை இழந்து திணறியது.

பின்னர் அபாரமாக ஆடிய பீற்றர்சன், ஓட்ட மழை பொழிந்தார். டுமினி பந்தில் 'ஹட்ரிக்' சிக்சர் அடித்த இவர், அமித் மிஸ்ரா (3), பிரதாப் சிங் (1), கிறிஸ்டியன் (1) பந்தை சிக்சருக்குப் பறக்கவிட்டார். இர்பான் பதான் (5) ஏமாற்றினார். அடுத்து வந்த யோகேஷ் நாகர், ஒத்துழைப்பு அளிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

அன்கீத் சர்மா பந்தில் இமாலய சிக்சர் அடித்த பீற்றர்சன், ஐ.பி.எல்., அரங்கில் தனது முதல் சதம் அடித்து, அணியை வெற்றி பெறச் செய்தார். டெல்லி அணி 19.1 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 162 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பீற்றர்சன் (103 ஓட்டங்கள், 9 சிக்சர், 6 பவுண்டரி), நாகர் (23) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பீற்றர்சன் ஆட்டநாயகன் விருதை வென்றார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
21/04/2012

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வடமராட்சி ஏப்.21

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. எனவே இந்தப் பொதுக் கூட்டத்துக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது வருகை தந்து சிறப்பிக்கும்படி கல்லூரி அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


**செங்கல் விற்பனைக்கு**

அத்திவார கற்கள், 1 ½ அங்குல கருங்கல் சல்லி, 1 அங்குல கருங்கல் சல்லி, 3/4 அங்குல கருங்கல் சல்லி, ½ அங்குல கருங்கல் சல்லி,

சல்லி கற்கள்

நிலப்பதிப்புக் கற்கள்

பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு,

யாழ் மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்

**பிரணவன் என்ரபிறைசஸ்**

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

077 3818799 (சங்கிலியன் சிலைக்கு முன்)



**ENGLISH LECTURER WANTED**
**(MALE/FEMALE)**

We are recruiting lecturers with excellent teaching skills to conduct English lessons.

Salary Negotiable.

Send your CV to : nimal@expogroup.lk

LONDON METROPOLITAN COLLEGE
No:197,Arasady Road,Jaffna
(Between Kandarmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395



**வங்கித்துறைக்கான வகுப்புகள்**

CBF - 3.00 pm
DBF - 4.00 pm
ஆரம்பம் 21.04.2012 (இன்று)

அனைத்துப் பாடங்களும் ஆரம்பம்

CBM

இயக்குநர்
N. Umakanth (0777110756)
33, Temple Road, Kokuvil East, Kokuvil.



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

Batch I: 23.04.2012 09.00 - 12.00 | Batch II: 24.04.2012 03.00 - 5.00 | Batch III : 25.04.2012 09.00 - 12.00

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Quick Learning Course** 1 ½ Months
(Spoken English with Grammar)

**Diploma In English** 2 ½ Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

**எமது கல்லூரியினால் நடத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்**

**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**BI Exam - Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**IELTS** (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30-1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Batch - 1: 23.04.2012 9.00 - 12.00
Batch - 2: 25.04.2012 3.00 - 5.00
Batch - 3: 28.04.2012 9.00 - 12.00



அசஷய திருதியை தினமான 24.04.2012 அன்று கொள்வனவு செய்யும் அனைத்து நகைகளுக்கும்
அழகிய பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**



இல. 111,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224134

இல.32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 0212225511



அழகிய தங்கப்பவுண் நகைகளை நம்பிக்கையுடன்
பெற்றிட நம்பகரமான ஸ்தாபனம்

ஐஸ்வர்யம் பெருகும் அசஷய திருதியையில் உங்கள் இல்லங்களில் செல்வம் செழிக்க நகைகள் கொள்வனவு செய்வதற்கு எம்மை நாடுங்கள்

**நியூ நகுலா ஜுவல்லர்ஸ்**



இல.109, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
0212219119

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வாழ்க்கையின்
வெற்றியே
போராட்டத்தில்
தான் இருக்கிறது.
-காண்டேகர்-



# வார வசந்தம்

01

உதயன் 21 ஏப்ரல் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# உறவுகளை உருவாக்கு



■ மனோ

மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் தேவை நல்ல மனித உறவுகள். மனித உறவுகளை மேம்படுத்திக் கொள்வது எப்படி என்பது குறித்து மேலும் சில செய்திகளை நாம் அறிந்து கொள்ளுவது அவசியம்.

விவாதிப்பது விவேகமல்ல. மற்றவர்களோடு பழகும்போது ஏதேனும் ஒரு பொருள் குறித்து கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். அப்பொழுது நம்முடைய கருத்துத்தான் உண்மையானது என்று அடுக்கடுக்காக ஆதாரங்களை அள்ளிவைத்து விவாதத்திலும் தர்க்கத்திலும் ஈடுபடுவதால் பயனொன்றும் சாதகமானதாயிருக்காது. உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர் அறிவு நிலைக்கேற்ப அவரவர் அனுபவத்திற்கேற்ப அவர்களுடைய பார்க்கும் கோணம் நம்முடைய கோணத்தினின்றும் மாறுபட்டிருப்பது இயல்பான உண்மை. அதன் அடிப்படையில் அவர்களின் கருத்து நம்முடைய கருத்துக்கு முரண்பட்டதாக இருக்கலாம். உண்மையிலேயே ஒருவேளை அவர்கள் பார்க்கிற பார்வை தவறானதாகக் கூட இருக்கலாம். அறியாமையின் காரணமாக முரண்படவும் செய்யலாம்.

மனித உறவுகளின் மகத்துவத்தை, நன்மைகளை உணர்பவர்களாக நாம் இருந்தால் கருத்து முரண்பாடுகள் உண்டாகும்போது அன்போடும், பண்போடும், அடக்கத்தோடும், அக்கறையோடும் நம் கருத்துக்கள் எப்படி சரியானவைகள் என்று இனிமையாக எடுத்து வைக்கலாம்.

இதை விடுத்து உயர்ந்த குரலில் அதிகாரமும், ஆணவமும் மிகுந்த தொனியில் நம் அறிவாற்றலை மெய்ப்பிக்கும் ஆசையில் தர்க்கமும் விவாதமும் செய்து விவாத வெற்றியே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டால் உறவுகளை உருவாக்குவதில் செம்மை சேர்ப்பதில் தோல்வியடைய நேரிடும்.

ஊடலில் தோற்றவர் வென்றார் என்று வள்ளுவர் விளம்புவது போல விவாதத்தில் வென்றவர் தோற்றார் என்று கூறலாம்.

குறிப்பாக விற்பனைத் துறையில் உள்ளவர்களுக்குத் தர்க்கம் செய்வதின் தவறைச் சுட்டிக்காட்ட ஆங்கிலத்தில் இப்படிச் சொல்வர். ''வாதாடி நீங்கள் வென்றால் வாடிக்கையாளரை இழந்து விடுவீர்கள் வாதாட்டத்தில் நீங்கள் தோற்றால் வாடிக்கையாளரை வென்று விடுவீர்கள்'' ஆகவே மனதில் நிறுத்துங்கள் விவாதம் விவேகமானதல்ல.

சில நேரங்களில் சில மனிதர்கள் பெருமையாகச் சொல்லுவார்கள். நான் எதையும் மறைத்துப் பேசமாட்டேன் வெளிப்படையாகச் சொல்லிவிடுவேன். தப்பு என்று மனசுக்குப் பட்டால் முகத்திற்கு நேரே தயங்காமல் தப்பு என்று சொல்லிவிடுவேன் என்று. உலகத்தில் எந்த மனிதனுமே தன்னுடைய முகத்திற்கு நேராக மற்றவர்கள் தவறு என்று சுட்டிக் காட்டுவதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தங்களுடைய செயற்பாடுகள் , கருத்துக்கள் தவறு என்று அவர்கள் மனம் ஏற்றுக்கொண்டாலும் மற்றவர்கள் சுட்டிக் காட்டும் போது மனம் சங்கடப்படுவார்கள். இது உளவியல் அடிப்படையில் எல்லா மனிதர்களுக்கும் உள்ள உளப்பாங்கு. மற்றவர்களின் தவறுகளை மறைமுகமாகச் சுட்டிக்காட்டலாம். ஒரு வேளை காலமும் சூழ்நிலையும் அமையுமானால் இது போன்ற தருணங்களில் நாம் எப்படி இது போன்ற தவறை முன்பு செய்ய நேர்ந்தது என்பதனைக் கூறி அது போலத்தான் இதுவும் இருக்கிறது. இருப்பினும் தவறுகள் நேரக்கூடாது என்று சுட்டிக்காட்டலாம். நாமும் தவறு செய்யக்கூடியவர்கள்தான் என்று நம்மையும் விமர்சனத்திற்கு உட்படுத்தும்போது மற்றவர்கள் மனம் நோகமாட்டார்கள் நம்மை மதிப்பார்கள்.

மற்றவர்களின் தவறுகளை இமாலயத் தவறுகள், இவைகள் மாற்றிக் கொள்ளவே இயலாதவைகள் என்று பூதக்கண்ணாடி பார்வையால் பெரிதுபடுத்தி அவர்களை மட்டம் தட்டுவதைத் தவிர்க்க வேண்டும். இதற்குப் பதிலாக தவறுகள் நேர்ந்து விடும் பொழுது அவர்களை உற்சாகப் படுத்தும் விதமாக இதென்ன பெரிய தவறு ஒன்றுமில்லை, எல்லாவற்றையும் திருத்திக்கொள்ளலாம் என்று பேசலாம். இப்படிப் பேசும் பொழுது தன்னை தன் தவறை உணர்ந்தவர்கள் நம்மீது மிகுந்த மரியாதை கொண்டு நம்மோடு கூட தொடர்ந்து நல்லுறவு பாராட்டுவார்கள்.

தவறுகளை நாம் செய்து விடும் பொழுது நம்முடைய ஆளுமைப் பண்பை உயர்த்திக்காட்டும் விதமாக ஆமாம் நான் தவறு செய்து விட்டேன் என்று தயங்காமல் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

அதை விடுத்து, மற்றவர்களின் தவறுகளை மட்டும் சுட்டிக் காட்டிவிட்டு நம்முடைய தவறுகளைத் தட்டிக் கழிக்கும் போது மக்கள் நம்மை மதிக்கமாட்டார்கள். மதிக்காதபோது உண்மை உறவுக்கு எங்கே இடமிருக்கிறது. நம்மைச் சுற்றி போலி மனிதர்கள் மாத்திரமே இருப்பார்கள்.

> “மனித உறவுகளின் மகத்துவத்தை, நன்மைகளை உணர்பவர்களாக நாம் இருந்தால் கருத்து முரண்பாடுகள் உண்டாகும்போது அன்போடும், பண்போடும், அடக்கத்தோடும், அக்கறையோடும் நம் கருத்துக்கள் எப்படி சரியானவைகள் என்று இனிமையாக எடுத்து வைக்கலாம்.

மற்றவர்களை நோக்கி நாம் நம் சுட்டுவிரலை நீட்டிக் காட்டுகிறபோது ஒன்றைக் கவனிக்க நாம் மறந்து விடுகிறோம். அது, மற்றைய மூன்று விரல்கள் நம்மை நோக்கி மடங்கி நம்மை மறைமுகமாகச் சுட்டுவதாகும். மற்றவர்களின் முதுகில் உள்ள அழுக்குகளைச் சுட்டிக்காட்ட விழையும்போது நம் முதுகில் உள்ள அழுக்குகளை நம்மால் கவனிக்க இயலாமல் போவதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை.

நல்ல மனித உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண் டுமானால் முதலில் நண் பர்களாக நட்பு முறையில் பேசத் தொடங்க வேண்டும். அறிமுகமாகாத மனிதர்களைப் பொது இடங்களில் சந்திக்கின்ற [illegible] முகத்தைத் திருப்பிக் கொ[illegible] எந்தத் தொடர்பும் இல்லை. பேசுவதற்கு என்ன இருக்கிறது என்று காலத்தைச்சற்று கடினமாகக் கழிப்பதை விட நட்பு முறையில் ஏற்கனவே அறிமுகமானவர்களிடம் பேசுவதைப் போல பொதுவாக நாட்டு நடப்புகளைக் குறித்தோ தட்ப வெப்பநிலை குறித்தோ பேசத் தொடங்கி நெருங்கிப் பழகலாம்.

சில சமயம் இந்த எதிர்பாராத சந்திப்புகளில் நல்ல நண்பர்கள் கூடக் கிடைக்கலாம். புதிய உறவுகள் கூடப் பரிணமிக்கலாம். பேருந்துகளில் புகை வண்டிகளில் நீண்ட தூரப் பயணம் செய்கின்றபோது இது போன்ற உறவுகள் மலர வாய்ப்புகள் அதிகமிருக்கிறது. பயணமும் அலுப்புத் தெரியாமல் நன்றாக அமையும்.

பொதுவாக மற்றவர்களோடு பேசத் தொடங்கும் போது உடன்பாடான கருத்துக்களை முன்வைத்து உரையாடலைத் தொடங்க வேண்டும். முரண்பாடான கருத்துக்களை எடுத்த எடுப்பிலேயே பேசத் தொடங்கினால் நம்மீது மற்றவர்களுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டு மனம் திறந்த உரையாடலில் ஈடுபடாமல் உறவுகள் சீர்கேட்டையும். மற்றவர்களின் கோணத்தில் நாம் பார்க்கத் தொடங்குவதே உறவுகளை உருவாக்கும் உன்னதமான வழியாகும்.

ஒரு தொழிலகத்திலோ அல்லது நிறுவனத்திலோ ஏதேனும் ஒரு விடயம் அல்லது பிரச்சினை குறித்துச் சக ஊழியர்களோடு அதற்கான தீர்வு குறித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது தலைமைப் பொறுப்பிலிருக்கும் நாமே தீர்வுகளைத் தந்தாலும் அந்தத் தீர்வுகள் மற்றவர்கள் தந்ததுதான். அது இவரால் தான் சொல்லப்பட்டது அல்லது அவரால் தான் வடிவமைக்கப்பட்டது என்று மற்றவர்க[illegible] சேர்க்கும் விதமாக நடந்து [illegible] எவ்வளவு பெரிய நன்மையை நமக்குச் சேர்க்கும் தெரியுமா?

ஒரு வேளை மற்றவர்களின் யோசனைகளும் ஆலோசனைகளும் தலைமைப் பொறுப்பிலிருக்கும் நமக்கு முழு அளவில் திருப்தியளிக்காததாயிருந்தாலும் பாராட்டுவோம். உற்சாகப்படுத்துவோம். ஒவ்வொரு சிறு சிறு மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் உளமார அங்கீகரிப்போம்.

மற்றவர்களுக்கு அதிகாரத்தின் அடிப்படையில் கட்டளைகளைப் பிறப்பித்து நம் எண்ணங்களை, திட்டங்களைச் செயல்படுத்துவதைக் காட்டிலும் இப்படிச் செய்யவேண்டுமானால் என்ன செய்யலாம்? எது நன்றாக இருக்கும்? உங்களின் யோசனை என்ன? தொடர்புடைய எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்குமா? இலாபகரமானதாக இருக்குமா? நட்டம் உண்டாகாதல்லவா? என்பன போன்ற வினாக்களைக் கேட்டு வேண்டிய பதில்களைப் பெறலாம்.

இந்த உளவியல் உத்தி மற்றவர்களை வேலையில் உளமார ஈடுபடவைக்கும். மகிழ்ச்சியோடு நாம் சொல்வதை ஏற்றுச் செயல்படுவார்கள். ஒத்துழைப்பார்கள் உறவுகள் பலப்படும். மற்றவர்கள் தவறு செய்துவிடும் பொழுது அந்த தவறை விளம்பரப்படுத்தி அவர்களின் பெயருக்கும் புகழுக்கும் குந்தகம் விளைவிக்கும் வண்ணம் நாம் செயல்படக்கூடாது.

தவறு செய்யாத மனிதர்கள் உலகத்தில் யார்தான் இருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களை தாழ்த்துவதால் உண்டாகிற தரமற்ற இன்பத்திற்கு அடிமையாகி விடக்கூடாது. அது போன்ற பண்பை அழித்துவிட வேண்டும்.

தவறு செய்த மனிதர்கள் தங்களது பெயரைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாக மனதளவில் மன்னித்துவிடுவோம். திருந்துவதற்கு சந்தர்ப்பமே வழங்காமல் சமுதாயத்தில் அவதூறுகளை அவர்கள் மேல் அள்ளி வீசுவதால் அழிவது மனித உறவுகள்தான். அழிவது மனித நேயம் அழிவது அன்பு. அன்பு அழிந்து விட்டால் அங்கே வெறுப்பும் கோபமும் இடம் பிடிக்கும். அன்புதான் மற்றவர்களை கவரும் காந்தம். அன்பு தான் உள்ளங்களை கட்டும் கயிறு. அன்பு தான் ஆண்டவன். அன்பு தான் சிவம். அன்பினால் உலகை ஆண்டு நல்லுறவுகளை உருவாக்குவோம். மேம்படுத்துவோம் வெற்றிக்கு வழி இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (46)

**கையெழுத்தின் நுணுக்கங்கள்**

9 வகையான எண்களும் நவக்கிரகத்தின் காந்த அலைவீச்சில் இயங்குகின்றது. இந்த ஒன்பது எண்களும் சித்தர்கள் பயன்படுத்திய நவபாசானங் களைப் (விஷங்கள்) போன்றது. இவைகள் செயல் படும் பஞ்ச பூத தத்துவங்கள் அறிந்தவர்கள் எண் சித்தர் கள் ஆவார்கள். பண்சித்தர்கள் விஷத்தைப் பயன்படுத்தி பல நோய்களைக் குணமாக்கி நன்மைகள் செய்ததைப் போல எண்சித்தர்கள் எண்களைப் பயன்படுத்தி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறார்கள்.

கூர்மையான கத்தி போன்ற இந்த எண்களின் தத்துவங்கள் காய்கறி அறுக்கவும், அதே நேரத்தில் கையை அறுக்கவும் பயன்படும் கத்தி போன்று நன்மை, தீமை இரண்டும் கலந்து காணப்படுவதால் இவையும் எண் விஷங்கள் போல சரியாகக் கையாண் டால் வெற்றி நிச்சயம் தரும். அனைத்துக் காரியத் திலும் ஜெயமுண்டாகும். இதனுடைய நுணுக்கத்தைத் தவறான வழியில் பயன்படுத்தவும் முடியும். தீய காரியங்கள் செய்தால் முடிவில் தானே அனுபவிக்க வேண்டி வரும். மந்திர சாஸ்திரத்தின் மூலக் கருவே இந்த எண்களின் இயற்கை கூறும் இரகசியங்கள். எனவே ஆக்க சக்திகளைப் பயன்படுத்தி மனித குலம் மேன் மையடையப் பாடுபட வேண்டும்.

**1 ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

பெயரை அதிர்ஷ்டமாக மாற்றிய பின்னர் 1ஆம் எண்காரர்கள் தங்கள் கையெழுத்தையும் வசிய எண் களுடன் குறியிடக் கற்றுக் கொள்ள வேண்டும். கையெ ழுத்தின் ஆரம்பம் வலப்புற சுழி முனையுடன் கீழிருந்து மேல்நோக்கி ஆரம்பித்து சூரிய ஆதிக்க எழுத்துக்கள் கோபுர அம்சத்துடன் காட்சி அளிக்கு மாறு குறியிட வேண்டும். கையெழுத்தின் குறியீடு களைக் கண்டபடி மாற்றிக் குறியிட்டால் வீண் மனக் குழப்பங்களும், தோல்வியும் சம்பவிக்கும். மனதின் திறத்தைக் கையெழுத்தால் அளவிட்டுக் கூறமுடியும். சரியான முறையில் அமையும் கையெழுத்து வளமான குடும்பம், வசதியான வீடுகள், வாகன வசதிகள், நிரந் தரத் தொழில் என்று அனைத்து நல்ல பலன்களையும் விரைவாக அளித்திடும். பலருக்கு வேலை கொடுக்கும் அமைப்புகள், அதிகாரமிக்க பதவிகள், பணபலம், ஆள் பலம், நல்ல நண்பர்கள், பார் புகழும் சாதனைகள், பிறர் கண்டு வியக்கும் விருதுகள், பாராட்டுப் பத்திரங்கள்,



சுகமான ஆரோக்கியமான திரேகம், ஆட்சிப் பீடத்தில் இருப்போர்களின் நல்லாதரவுகள் என்று அனைத்து நல்ல சம்பவங்களையும் பெற்றுத் தரும். நிரந்தரமான வெற்றிக்குச் சொந்தக்காரராக்கும். 1ஆம் எண்காரர்கள் சூரிய எழுத்துக்களை கீழே சீராக வரவிடாமல் மேல் நோக்கி இழுத்துச் சென்று ஒரே சீராக இடவேண்டும்.

**2 ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

இவர்கள் தங்கள் பெயரை அதிர்ஷ்டமாக அமைத்த பிறகு தாங்கள் குறியிடும் கையெழுத்தையும் வசிய முள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும். முழு வட்ட நிலவைப் போன்ற குறியீடுகளுடன் வலப்புறமாகச் சுழித்து ஆரம்பித்த கையெழுத்து மாயா சக்தி படைத் தது. ஏணிப்படி போன்ற தோற்றத்துடன் சிகரம் அமைத்து 20 டிகிரி வரையிலும் சாய்த்துக் குறியிட வேண்டும். 2 செ.மீ நீளமுள்ள கையெழுத்து நீடித்த அதிர்ஷ்டம் தரும்.

கையெழுத்தை முடிக்கும் போது மூன்றாம் பிறை வடிவக் குறியுடன் முடிக்கவேண்டும். மேல்நோக்கிய வளைவுக் கையெழுத்து வளமிக்க வாழ்க்கையைத் தரும். சோம்பலை நீக்கும். சுறுசுறுப்புடன் இயங்கச் செய்யும். குடும்பப் பிரச்சினைகள், மனக் குழப்பங்கள் தீரும். முகத்தில் பொலிவும், அமைதியும், மேன்மையான எண்ணங்களும் தோன்றும். வீண் பயம் நீங்கும். தீய பழக்கத்திலிருந்து மீட்டுக் கொண்டுவரும். இந்த உலகத்தையே தன்னுடைய மாய சக்தியால் கவர்ந்தி ழுக்கும் வசிய சக்தி மிக்கது சந்திர ஆதிக்கக் கையெ ழுத்துக்கள்.

**3 ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

இவர்கள் தங்கள் பெயரை அதிர்ஷ்டகரமாக மாற்றிக் கொண்ட பின்னர் தாங்கள் இடும் கையெழுத்தையும் வசீகரமாக மாற்றிக் கொள்ள வேண்டும். கழித்தல், வகுத்தல், வால், சமக் குறிகள், துதிக்கை, கீழ் வெட்டுக் குறிகள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். கையெழுத்தின் ஆரம்பத்தை வலப்புறச் சுழியுடனும், முக்கோணக் குறியுடனும் அமைக்க வேண்டும்.

குரு ஆதிக்க எழுத்துக்களை இடைவெட்டுக் குறியில்லாமல் அமைக்க வேண்டும். மேல் நோக்கிய கையெழுத்தைக் கம்பீரத்துடன் 3 செ.மீக்குள் நீளமு டையதாக புள்ளி வைக்காமல், அடிக்கோடு இடாமல் குரு ஆதிக்க எழுத்துக்களைக் கோவில் கோபுரங்கள் போன்று உயரமாக இடவேண்டும். வசியக் கையெ ழுத்து வளமிக்க வாழ்க்கை, பொருளாதார முன் னேற்றம் என்று அனைத்துச் சுகபோகத்தையும் வாரி வழங்கும். கூட்டல், பெருக்கல் குறியீடுகள் நல்ல முன்னேற்றத்தை உருவாக்கும். வலைப்பின்னல் குறியீடுகள் கூடாது. சாதி, மத, இன பேதமின்றி அனைவருக்கும் அதிர்ஷ்டத்தை அள்ளிக் கொடுக்கும்.

*(தொடரும்)*

---

# புல்லாங்குழலின் புலம்பல்

ஆங்கிலக் கவிஞன் பிரான்சிஸ் தாம்ஸனுடைய வாழ்க்கையைப் பார்த்துவிட்டு அவனுடைய கவிதைகளைப் படிக்கும் போது இந்த நரகத்திலிருந்தா இந்த சொர்க்கப் பூக்கள் மலர்ந்தன என்று வியக்காமல் இருக்க முடியாது.

அவன் ஒரு புதிர். உறவுகளை விரும் பாமல் தன்னைத் தானே அனாதையாக்கிக் கொண்டவன்.

காச நோய். அதன் துன்பத்தை மறக்க அபினி இப்படி ஒர குப்பையாகித் தெருவைத் தானே தேடிக் கொண்டவன்.

**வாலிப வெறியில்**
**காலத் தூண்களை**
**அசைத்தேன்;**
**என் வாழ்க்கையை**
**என்மீதே**
**இடித்து வீழ்த்தினேன்;**
**வருஷங்களின்**
**புழுதிக் குவியலுக்கு இடையே**
**அழுக்கேறி நிற்கிறேன்;**
**இடிபாடுகளுக்கு அடியில்**
**செத்துக் கிடக்கிறது**
**என் யௌவனம்**

என்று உடைந்து போன தன் வாழ்க் கையை தானே சித்திரிக்கிறான் தாம்ஸன்.

'மனிதனை விடக் கீழே விழுந்துவிட் டேன் என்று தன் வீழ்ச்சியை அவனே அழகாகச் சொல்லுகிறான். இந்தப் பிசுக் குப் பிடித்த கந்தல் துணியை காலம் திரி யாக்கிற்று; தெய்வீகக் கவிச் சுடரை அதில் ஏற்றி வைத்தது.

இந்தச் சுடரைக் கூட அவன் வரமாகக் கருதவில்லை; சாபமாகவே கருதினான். 'நான் கவிஞனாகச் சபிக்கப்பட்டவன்' என்கிறான். ஆனால் அவன் பெற்ற சாபம் நமக்கு வர மாகி விட்டது. அவனுடைய நட்சத்திரங் கள் வெளிப்பட்டுப் பிரகாசிப்பதற்காகவே அவனுக்கு இருள் அருளப்பட்டது போலும்.

வாழ்க்கையை உடல் வாழ்க்கை, கவிதை வாழ்க்கை என்று அவன் பிரித்தே காண்கிறான். இரண்டுமே அவனுக்குச் சுமையாகப்படுகின்றன.

**கவிஞன்**
**இரட்டை வாழ்க்கை**
**வாழ்ந்தான்;**
**இரட்டைச் சுமையால்**
**வருந்தினான்-**
**ஊன் வாழ்க்கை;**
**கவி வாழ்க்கை!**

ஆனால் இந்தச் சுமைகளை சுகமான சுமைகளாகவே அனுபவித்தான்; கர்ப்பச் சுமையைப் போல!

உண்மையான படைப்பு கவிஞனால் செய்யப்படுவதில்லை; அது கவிஞன் வழி யாகப் பிறக்கிறது என்பதை உணர்ந்தவன் தாம்ஸன்.

**மேகம் சூழ்ந்த**
**அந்தராத்மச் சிகரங்களிலிருந்து**
**வெள்ளமெனப் பாய்கிறது**
**பாடல்**

என்று தன் கவி நதிமூலத்தை உணர்த் துகிறான். தயாரிக்கிற கவிதை வேறு; தானே பிறக்கிற கவிதை வேறு. இரண்டிற்கும் இடையே பொம்மை தயாரிப்பதற்கும் பிரசவிப் பதற்கும் உள்ள வேறுபாடு உண்டு.

பிள்ளையைப் பெற்று விட்டுப் பெற் றவளே வியப்பதைப் போலத்தான் தன் கவிதையைப் பார்த்துக் கவிஞன் வியக் கிறான். அந்தக் கவிதையைப் பற்றிக் கவிஞனுக்கே முழுமையாகத் தெரியுமா?

**எப்படிக் கற்றோம் என்று**
**தெரியாத பாடத்தை**
**நாம் போதிக்கிறோம்;**
**எங்களிடமிருந்து**
**பீறிடுவது என்ன?**
**சொல்லுபவனை விடக்**
**கேட்பவனே நன்றாக அறிவான்.**

என்று இதற்கு விடை சொல்லுகிறான் தாம்ஸன். எவ்வளவு ஆழ்ந்த உண்மை! உண்மையான படைப்பனுபவத்தை உணர்ந் தவர்களால் தான் இதைப் புரிந்துகொள்ள முடியும்.

இசையைப் பற்றி யாருக்கு என்ன தெரி யும்? சுவைப்பவனுக்குத் தானே தெரி யும்? மலரைப் பற்றிக் காம்புக்கு என்ன தெரி யும்? வண்டுக்குத் தானே தெரியும். பெண் மையைப் பற்றி பெண்ணுக்கு என்ன தெரியும் ஆணுக்குத் தானே தெரியும்.

வாழ்வின் துயரங்களைப் பிரசவ வேதனை என உணர்ந்து கொண்டவன் தாம்ஸன். அவன் வீழ்ந்து கிடந்த ஆழங்களிலி ருந்துதான் உயரங்களைக் கற்றுக் கொண் டான். அவனைப் புல்லாங்குழல் ஆக்குவ தற்காகவே காலம் அவனை உறவுகளை விட்டு அறுத்தது; சுட்டது; துளைத்தது. அந்தப் புல்லாங்குழலிலிருந்து புனிதமான கீதங்கள் புறப்பட்டன. புல்லாங்குழலின் இசை என்பது என்ன? அதன் புலம்பல் தானே! சோகம் தான் சுகானுபவ இசையாகிறது.

மகிழ்ச்சி இதய சமுத்திரத்தின் மே லோட்ட அலையாட்டம். அந்த சமுத் திரத்தின் ஆழம் அமைதியான சோகத்தில் இருக்கிறது. அங்கே தான் மனிதன் தன்னைக் கண்டெடுக்கிறான்.

இந்த ஞானம் தந்த சோகத்தையே தாம் ஸன் சொந்தம் கொண்டாடுகிறான். அவ லங்களால் அவன் அழுகுணிச் சித்தன் ஆக வில்லை. கவலையைத் தன்னைப் புடம் போடும் கனலாக உணர்ந்த ஞானி அவன்.

**கண்ணீரால் கழுவப்பட்ட**
**கண்களுக்கு தான்**
**புனித தரிசனங்கள்**
**கிடைக்கும்**

என்று தெரிந்து கொண்டான் அவன். ஞானக் குளியல் பெற்ற அவன் கண்கள் இயற்கையின் மர்மத்திரைகளை ஊடுரு

> “மகிழ்ச்சி இதய
> சமுத்திரத்தின் மேலோட்ட
> அலையாட்டம். அந்த
> சமுத்திரத்தின் ஆழம்
> அமைதியான சோகத்தில்
> இருக்கிறது. அங்கே தான்
> மனிதன் தன்னைக்
> கண்டெடுக்கிறான்”

வித் தத்துவ உண்மைகளை தரிசிக்கின்றன.

இன்பத்துக்கும், துன்பத்துக்கும் இடை யில் உள்ள கள்ளத் தொடர்பு அவனுக்குத் தெரிந்து விடுகிறது. இன்பத்தைத் 'துன்பங் களின் சா'றாகவே அவன் காண்கிறான். சிரிப்பைக் 'கண்ணீர்ப் பொய்கையிலிருந்து நீராடி எழுகின்ற நீர்த் தேவதை'யாகப் பார்க் கிறான். அதனால் 'கொலுவீற்றிருக்கும் சோகமே என் மகிழ்ச்சியாக இருக்கட்டும்' என்று பிரகடனம் செய்கிறான்.

'விண்ணுலக வேட்டை நாய்' என்ற தன்னுடைய அற்புதமான கவிதையில் சோகத்தை,

**இறைவன் உயர்த்திய**
**அபயக் கரத்தின்**
**நிழல்**


என்று தாம்ஸன் கூறுகிற போது மெய் சிலிர்க்கிறது. ஆன்மிகச் சிகரத்தின் உச் சியை அடைந்தவனால் மட்டுமே இப்படி உணர முடியும். நட்சத்திரம் எங்கோ வானத்தில் இருக்கிறது. பூ பூமியில். இந்த இரண்டிற்கும் ஏதாவது தொடர்பு இருக்க முடியுமா? தொடர்பை உணர்கிறவன் ஞானி யாகி விடுகிறான். பிரமாண்டமான பிரபஞ் சத்தின் அங்கங்கள் தாமே இவை. ஒரே உடலின் உறுப்புக்கள். இதை ஆழமாக உணர்ந்த தாம்ஸன் இதை வெளிப்படுத்துகிற விதம் பிரமிப்பூட்டுகிறது.

**ஒரு சிறு பூவை**
**நீ அசைத்தால்**
**ஒரு நட்சத்திரம்**
**அணைந்து போகலாம்!**


தெய்வமே! இனி பூக்கள் எப்படித் தொடுவது?

**அப்துல் ரகுமான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பைசா சாய்ந்த கோபுரம்



போனானோ பஸ்ஸானோ என்பவர் 1173ல் இந்த கோபுரத்தை கட்ட ஆரம்பிச்சாராம். சதுப்பு நிலத்தில் கட்டப்பட்டதால், பத்தரை மீட்டர் உயரம் எழும்பியதுமே, கோபுரம் லேசாகச் சரிய ஆரம்பித்து விட்டதாம்... என்றாலும், இந்தச் சரிவை, கட்டடம் உயர, உயரச் சரி செய்து விடலாம் என்ற நோக்கில் மூன்று மாடிகள் வரை கட்டி விட்டாராம் போனானோ... அத்துடன் நிறுத்தி விட்டாராம்... பின்னால், டோமாஸ்ஸோ என்பவர் இந்த வேலையை தொடர்ந்து மேற்கொண்டு, சாமர்த்தியமாக எட்டு மாடிகள் வரை கட்டினாராம். 1300இல் இது முற்றுப் பெற்றதாம். மொத்தம், 54 மீட்டர் உயரம். வட்ட வடிவில் அமைந்த எட்டு மாடிகளுக்கும் வெளித் தாழ்வாரங்கள் உண்டு. ஒவ்வொரு மாடியிலும் உள்ள பால்கனித்தூண்கள், அதற்கு மேல் உள்ள மாடிகளைத் தாங்குகின்றன.



விசித்திரம் என்னவென்றால், இத்தனை உயர கோபுரத்துக்கு, மூன்று மீற்றர் ஆழம் தான் அஸ்திவாரம் போட்டாங்களாம். கோபுரம் இன்று செங்குத்து நிலையிலிருந்து நாலு மீட்டர் சாய்ந்து நிற்கிறது. உள்ளுக்குள், 293 படிகளைக் கொண்ட சுழல் மாடிப்படி அமைந்திருக்கிறது. உச்சியில் ஒரு மணிக்கூடு இருக்கிறது

# அன்பா, செல்வமா, வெற்றியா சிறந்தது?



ஒரு ஊரில் குமரன் தன் தாய் தந்தையுடன் வசித்து வந்தான். அப்போது அவன் வீட்டின் முன் மூன்று வயதானவர்கள் வந்து, ''உள்ளே வரலாமா?'' என்று கேட்டனர். தந்தை, ''வாருங்கள்'' என்றார். ''நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது, யாராவது ஒருவர் தான் வரமுடியும், என் பெயர் பணம், இவர் பெயர் வெற்றி, இவர் பெயர் அன்பு, எங்கள் மூவரில் ஒருவர் தான் ஒரு வீட்டிற்குள் செல்லமுடியும்... எங்கள் மூவரில் உங்களுக்கு யார் வேண்டுமோ அவரை அழைத்துக் கொள்ளுங்கள்'' என்றார் பணம் எனப் படுபவர்.

குமரனின் தந்தை, ''வெற்றியை அழைக்கலாம்.. நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம்'' என்றார். ஆனால் குமரனோ ... ''அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம்... நம்மிடம் பணம் சேர்ந்து விட்டால் எல்லாவற்றையும்.. வெற்றி, உட்பட அனைத்தையும் வாங்கலாம்'' என்றான். ஆனால் குமரனின் தாயோ, ''வேண்டாம் அன்பையே அழைக்கலாம். அன்புதான் முக்கியம்'' என் றாள். பின் மூவரும், ''அன்பு உள்ளே வரட் டும்'' என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும், பணமும் கூட உள்ளேநுழைந்தனர். உடன் குமரனின் அம்மா, ''அன்பை மட்டும்தானே உள்ளே அழைத்தோம்'' என்றார். அன்பு சொன்னார், ''நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால்.. மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம். ஆனால் அன்பான என்னை வரச் சொன்னதால்.. நான் இருக்கும் இடத்தில் தான் பணமும், வெற்றியும் இருக்கும்.. ஆகவே அவர்களும் உள்ளே வந்து விட்டனர்'' என்றார். அன்பு உள்ளம் இருந் தால்.. நம் வாழ்வில் வெற்றியும், தேவை யான வசதிகளும் தானாகவே வந்துவிடும்.


அன்பே சிவம்...அன்பே முக்கியம்.
இதையே வள்ளுவர்..

''அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''

அதாவது

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும் என்றார். இல்லையேல், அது வெறும் எலும்புத் தோல் போர்த்திய வெறும் உடலாகும். சுருங்கச் சொன்னால்.. அன்பு மனம் கொண்டவர்களே மனிதர்கள் ஆவர்.

# உலகிலேயே மிகக் கொடூரமான நச்சுத் தாவரம்





அரளி என்னும் ஒலியாண்டர் மீ என்னும் தாவரம் உலகத்திலேயே மிகக்கொடுமையான நச்சுத் தாவரமாகக் கருதப்படுகிறது. தாவரத்தின் எல்லாப் பாகங்களும் நஞ்சுதான். பல வகை யான நஞ்சுகளும் இந்த தாவரத்தில் காணப்படுகின்றன. இதில் காணப்படும் oleandrin மற்றும் neriine நச்சுக்கள் இதயத்தை பாதிக்கக்கூடியவை. தேனீக்களால் ஒலியாண்டர் பூக்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தேனை நக்கிய மாத்திரத்திலேயே மரணம் சம்பவிக்கும். ஒலியாண்டர் தாவரத்தின் பூக்கள் அழகானவை.


கொடுமையான நச்சுத்தன்மை இருந்தாலும்கூட அழகிற்காக இந்தத் தாவரம் வளர்க்கப்படுகிறது. தூரக்கிழக்கு நாடுகளில் இருந்தும் மத்தியதரைக்கடல் நாடுகளில் இருந்தும் அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்ட இந்த தாவரம் உலர்ந்த வெப்ப நிலைகளிலும் வளம்குறைந்த மண்ணிலும் வளரக்கூடியது. அடர்த்தியான புதர்வடிவில் ஆறுமுதல் பதினெட்டு அடி உயரத்திற்கு ஒலியாண்டர் தாவரம் வளரும். இலைகள் அடர் பச்சை நிறத்திலும் தடிமனாகவும் இருக்கும். கொத்தாகப் பூக்கும் பூக்கள் மஞ்சள், சிகப்பு, இளஞ்சிவப்பு, வெள்ளை ஆகிய நிறங்களில் காணப்படும்.



# தண்ணீர்

★ பூமியில் உள்ள தண்ணீரில் 97 சதவீதம் உப்புக் கலந்தது . மீதமுள்ள 3 சதவீதம் தூய்மையான நீர் என குறிப்பிடப்படுகிறது. அவற்றில் 2 சத வீதம் பனிக்கட்டிகளாகவும் பனிப் பாறைகளாகவும் காணப் படுகிறது. இதன் மூலம் 3 இல் 1 சத வீதம் தூய்மையான தண்ணீர்தான் ஆறுகள், ஏரிகள் மற்றும் பூமிக்கு அடியிலும் காணப்படுகிறது.





★ பூமியின் பரப்பளவில் 10 இல் ஒரு (1/10) பங்கு பனிக்கட்டிகளால் ஆனது. மேலும் பனிக்கட்டிகளின் 90 சதவீதம் அண்டார்டிகாவைச் சார்ந்தே இருக்கிறது, ஆயினும் அங்குள்ள எரிபஸ் என்ற எரிமலை புகையை வெளியிட்டு வருகிறது. பனிக்கட்டியின் மீதமுள்ள 10 சதவீதம் பனிப் பாறைகளாகக் காணப்படுகின்றன.

★ பனிக்கட்டிகள் உப்புத் தண்ணீரால் ஆனாலும், எவ்வித உப்பையும் பெற்றிருக்காது. எஸ்கிமோஸ் போன்ற பனிப் பிரதேசங்களில் வாழும் மக்கள் உணவுகளை சமைக்கவும் குடிக்கவும் பனிக்கட்டிகளை உறையவைத்து தான் பயன்படுத்துகிறார்கள். மேலும் இது மிகவும் தூய்மையான தண்ணீராகதான் இருக் கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

★ உப்புத் தண்ணீரில், 96 சதவீதம் தூய்மையானது. 3 சதவீதம் உப்பாகவும், மீதமுள்ள 1 சதவீதத்தில் சல்பேட், மெக்னீசியம், புரோமைட், கால்சியம், பொட்டாசியம், ஸ்ட்ரோன்டியம், போரான், ஃபுலுரைடு, தங்கம் உள்ளிட்ட 80 தனிமங்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.



# வேகமாக நீந்தும் நீர் வாழ் உயிரினம்




ஆழ்கடலில் மிகமிக வேகமாகச் செல்லும் அரிய ஜீவன்களில் ஒன்றே மயில் மீன்

பறவைகளில் மயிலுக்கு தோகைகள் இருப்பதைப் போல இவ்வகை மீன்களுக்கும் தோகைகள் போன்று இறக்கைகள் இருப்பதால் இதனை மயில்மீன் என்கிறார்கள். இவ்வகை மீன்களின் மேல்புறத்தில் இரு இறக்கைகளும் வால் பகுதியில் ஒரு இறக்கையும் இருக்கும். இந்த மீனின் மேல்தாடை கீழ் தாடையை விட இரு மடங்கு பெரிதாக இருக்கிறது. மீனின் உடல்பகுதியில் இருபுறமும் 20க்கும் மேற்பட்ட செவிள்களில் வரிக்கோடுகள் காணப்படுகின்றன.

பறவைகளுக்கு அலகு இருப்பது போல இதன் அலகும் சுமார் 10அங்குலம் வரை நீளம் உடையதாகவும் மிகவும் கூர்மையானதாகவும் இருக்கிறது. இந்த அலகின் மூலம் படகுகளைக் கூட கொத்தி உடைத்து விடும் சக்தி உடையது. மீனின் மேல்பகுதி கரு ஊதா நிறத்திலும் அடிப்பகுதி வெள்ளை நிறம் கலந்த பிறவுண் நிறத்திலும் காணப்படுகிறது. ஒரு வருடத்தில் 1.2மி.மீ முதல் 1.5 மி.மீ வரை வளரக் கூடியது.

சுமார் 100கிலோ வரை எடையுடைய இம்மீன்கள் 16 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கிறதாம். ஒரு மீன் மட்டுமே குறைந்தது 2 லட்சம் மைல்களுக்கு மேல் கடலில் பிரயாணம் செய்வதுடன் வெவ்வேறு கடல் பகுதிகளுக்கும் மாறி மாறிச் சென்றுகொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை மதியால் வெல்ல உதவுகின்ற

■ தர்மா

# கைரேகை

கைரேகை பார்ப்பதன் பிரதான நோக்கம், ஏற்படப் போகின்ற பேராபத்து, துன்பம், நோய்நொடி போன்றவற்றைத் தடுப்பதற்காகத்தான். கைரேகை பார்க்கும் போது வலக் கையையா அல்லது இடக்கையையா ஜோதிடரிடம் காண்பிப்பது என்பதில் சிலருக்கு சந்தேகம் ஏற்படலாம். மூளை (BRAIN) கட்டளையிடும் பணியை எந்தக் கை உகந்த முறையில் மேவுகின்றதோ அந்தக் கையைப் பார்ப்பது தான் சிறந்தது. இதன் பிரகாரம் சகல வேலைகளையும் மேற்கொள்வதற்கு வலது கையைப் பயன்படுத்துவோர் வலக்கையையும் இடக்கை பழக்கம் உடையோர் இடக்கையையும் கைரேகை பார்ப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். ஒருவனது கையில் உள்ள மேடுகளில் எந்த மேடு பெரியதாக தென்படுகின்றதோ அந்த மேட்டின் பயன்களே அவனுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

நம் வாழ்க்கைக்கு துணைபோவது வலக்கையும் இடக்கையும் ஆகும். வலக்கை மேற்கொள்ளும் செயலை இடக்கை அனுபவிக்கின்றது. இடக்கை செய்வதை வலக்கை அனுபவிக்கின்றது.

ஒவ்வொருவருடைய கையில் உள்ள ரேகைகள் என்ன பலனைக் கொண்டுள்ளதோ அதன்படியே வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கும் என்பது நிதர்சனம் ஆகும். கையே உங்களுக்கு உதவி, இதனாலன்றோ 'தன்கையே தனக்குதவி' என்ற பழமொழி உருவாகியிருக்கலாம்.

மூளையின் ஆற்றலை அறிந்து கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. அது கைரேகையில் தான் பரிணமித்துள்ளது. ஆகவே நமது தலைவிதி நம்தலையில் இல்லை நம் கையிலேதான் இருக்கிறது. கைரேகை


**"நம் வாழ்க்கைக்கு துணை போவது வலக்கையும் இடக்கையும் ஆகும். வலக்கை மேற்கொள்ளும் செயலை இடக்கை அனுபவிக்கின்றது. இடக்கை செய்வதை வலக்கை அனுபவிக்கின்றது".**

என்பது இயற்கையின் படைப்பு ஆகும்.

ஒரு இலையில் ஓடியுள்ள நரம்புகளைக் கொண்டு அந்தச் செடியின் வரலாற்றை தாவரவியலாளர்களினால் (BIOLOGISTS) கண்டு கொள்ள முடிகின்றது.

பல நூற்றாண்டு காலமாக மண்ணோடு மண்ணாகக் கிடந்த ஒரு பிராணியின் எச்சத்தையும் ஓர் உடலியல் நிபுணர் கண்ணுற்றால் விலங்கின் சரித்திரத்தையும் அது வாழ்ந்த காலத்தையும் கணிப்பீட்டின் மூலம் அறியத் தருவார். புவியை ஆராய்ந்து எந்த இடத்தில் குடிதண்ணீர், எங்கு பெறுமதிமிக்க உலோகம் புதைந்து உள்ளது என்று ஒரு மண்ணியல் நிபுணர் கூறிவிடுகின்றார்.


வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நிறத்தையும், உயரத்தையும், அங்க அமைப்புக்களையும் அவதானித்த பின் அவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன், என்ன பழக்க வழக்கங்களை உடையவன்? என்று கச்சிதமாகக் கூறிவிடுகின்றார்




வரலாற்று ஆசிரியர். அதேவேளை கைரேகை சாஸ்திரத்தைத் தெளிவுறக் கற்றுக்கொண்ட ஒருவன் கைரேகை பற்றிய நூலை வெளியிடுகின்றான்.

உலகிலுள்ள பல்லாயிரக்கணக்கான சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட நாடுகளை ரேகைகள் மூலம் உலக வரைபடத்தில் (WORLD MAP) சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை நாம் காண முடிகின்றது.

(தொடரும்)



மேற்படிப்புக்கு முய
மாணவர்கள் பாஷே
வந்தார்கள்.


பாஷோ கேட்டார்.

"நீங்கள் எங்கே
போகப் போகிறீர்கள்?"

முதல் மாணவர் சொல்
"அமெரிக்காவுக்கு..
வழிகளை இப்போது த
அந்த வழியில் முயற்சி
இருக்கிறேன்..."

இரண்டாவது மாணவ
"நான் எந்த இடம் என்
விரும்பவில்லை. எல்லா

# மருமகன்



அன்று கனகம் வீட்டில் அவளின் மூத்த மகளுக்கு கலியாண எழுத்து . "கலியாண எழுத்தை ரகசியமாகவும், கலியாணத்தைக் கணிசமான அளவிலும் செய்வம்" என்ற எண்ணத்தில் அதனைப் பலருக்கும் சொல்லிச் செய்யவில்லை. தனது அண்ணன், தம்பி, சகோதரிகள், அயலவர் என்ற அளவில் தம்முடன் நெருங்கிப் பழகும் ஒரு சிலருடன் வைபவத்தை சுருக்கி நடத்திக் கொண்டிருந்தாள்.

திருமணப் பதிவாளர் எழுத்தை சம்பிரதாய ரீதியாக நடத்தி முடித்தார். அதனைத் தொடர்ந்து பிரசித்த நொத்தாரிஸின் சீதன எழுத்து.

வீடு வளவு எழுத முற்பட்ட போது கடும் ஆட்சேபனை! தாய்க்குச் சீவிய உருத்து வழங்கலாகாது என்பதே முட்டுக்கட்டை.

"பின்னடிக்குப் பிரச்சினை இருக்கக் கூடாது. தவிர்க்க முடியாத தேவை ஏற்பட்டு விற்கக் கொள்ளப் போகையிக்கை இடைஞ்சல் இருக்கப்படாது" -என்பது மாப்பிள்ளை பகுதி வாதம்.

"தாய் விதவை. அவ வாய் வயிற்றைக் கட்டி- தன்னை வருத்தி அமைச்சது இந்த மனை. அவ ஏலாக் காலம் படுத்து எழும்ப வசதி தேவை" என்பது பெண் பகுதி வாதம். கனகத்தை நல்லாத் தெரிந்தவன் மணமகன். அதே ஊரைச் சேர்ந்தவன். கனகம் கணவனைக் கடந்த போர்க் காலத்தில் பலி கொடுத்தும்- மனம் தளராது-நகை நட்டை விற்றுச் சுட்டு மகன்மார் இருவரை வெளிநாடு அனுப்பியவள். தேடுவாரற்றுக் கிடந்த தரிசு நிலமொன்றை விலை கொடுத்து வாங்கி- கல் அடிப்பித்து-மண் நிரவிவித்து- நீர் வசதி தேடி- சுற்று மதில் கட்டுவித்து- அச்சறுக்கைப்படுத்தி எழுப்பப்பட்டது அம்மனை.

கனகம் உயிரோடு இருக்கும் வரை தனது மனை என்ற மன நிறைவோடு- மன நிம்மதியாக- வாழ வசதி செய்தல் தனது கடன் என உள்ளூர உணர்ந்த மாப்பிள்ளை, "மாமிக்குச் சீவிய உருத்துக் குடுக்க எனக்கு எதுவித மறுப்புமில்லை" என அனைவரும் கேட்கக் கூடியதாக உரக்கச் சொன்னான்.

"மாமி இல்லாத காலத்திலும் அவவின்ரை பேர் விளங்க வீட்டிற்கு 'கனகமனை' என பேர் சூட்டி அதனையும் உறுதியில் பதிவு செய்ய வேண்டும்" என மேலும் மணமகன் கேட்டுக் கொண்டான்.

கனகம் தன் மகளுக்கு வரும் மாப்பிள்ளை தனக்கு மருமகனல்ல- மறுமகனாக வருகின்றான் என அகமகிழ்ந்தாள்.

-வேல் அமுதன்-

# மீன்பா

அருணா தருமலிங்கம், வந்தாறுமூல



மட்டக்களப்பில் மழை வேண்டியும் தொற்று நோய் (INFECTIONAL DISEASE) பரவாமல் தடுக்க வேண்டியும் கடவுளை வணங்கிவருகின்றனர்.

மட்டுநகருக்கு தெற்கே சுமார் பன்னிரெண்டு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது தான் குருக்கள் மடம் ஆகும். இந்தக் கிராமத்தில் உள்ள முருகன் ஆலயத்துக்கு அருகில் ஒரு மணல் மேடு உள்ளது. அந்த மேட்டிலிருந்து ஆலயங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற கற்றூண்கள், கல் உத்தர்கள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டன. இந்தச் சிலையானது ஜடா முடியும் இரண்டு கைகளும் உடையதாக் கப்பட்டுள்ளது. இவ்வரிய பொருள்களை அகழ்ந்து எடுக்கப்பட்ட மணல் திட்டிக்கு அந்த ஊர் மக்கள் வேதப்பிட்டி என்னும் நாமத்தைச் சூட்டினர். இதனால் இங்கு ஒரு சமய மடம் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துயாரிப்பு



கு முயற்சி செய்கிற இரு
பாஷோவைச் சந்திக்க

டார்.
ங்கே மேற்படிப்புக்குப்
கள்?''
ர் சொன்னார்.
வுக்கு... அதற்கான
பாது தான் அறிந்தேன்...
யற்சி செய்யலாம் என்று

மாணவர் சொன்னார்.
டம் என்று முடிவு செய்ய
எல்லா முயற்சிகளையும்

செய்வேன்... எது கிடைக்கிறதோ அங்கே போவேன்...''

பாஷோ இருவரையும் வாழ்த்தி அனுப்பினார். ஐந்து வருடங்கள் கழித்து அவர்கள் இருவரையும் சந்தித்தார்.

முதல் மாணவர் அமெரிக்கா சென்று தனது மேற்படிப்பை முடித்து விட்டு வந்திருந்தார். இரண்டாவது மாணவர் ஏதோ ஒரு வேலை கிடைக்க மேற்படிப்பு படிக்கும் எண்ணத்தை கைவிட்டு விட்டிருந்தார்.

பாஷோ முதல் மாணவரைக் கேட்டார். ''சுலபமாக அமெரிக்கா செல்ல முடிந்ததா?''

''இல்லை.. படு சிரமப்பட்டுத்தான் சென்றேன்... பிறகு அங்கும் கடுமையான உழைப்பு..''

பாஷோ புன்னகைத்தார்.

### தனது கரும்பலகையில் எழுதினார்

நீங்கள் ஓர் இலக்கை அடைய வேண்டுமென்றால் அந்த இலக்கை நோக்கிச் செல்வதற்கான வரைபடத்தை முதலில் கைப்பற்றுங்கள்.

* * *


வரைபடங்கள் எளிதான பயணத்திற்கு உறுதி கொடுக்காது. ஆனால் வழி காட்டும்.

* * *

இலக்கை நோக்கிய வரைபடம் இல்லாவிட்டால் பயணம் எப்போதும் தடைப்படலாம்.

# பகுத்தறிவு

## உலகத்தை மாற்றியமைத்தது



காற்றில்லாத வீடுகளுக்குள்ளே மனிதர்கள் அடைபட்டு கிடந்த காலம் போய், சொகுசான ஒரு காலத்தைப் பகுத்தறிவு கொண்டு வந்தது.

உட்கார்ந்த இடத்திலேயே காற்று, ஒலி,ஒளி,படம்,செயற்கை மழை போன்ற ஷவர் பாத்; சிங்கார வாகனங்கள்; செவ்வாய்க் கிரகத்துக்கே பயணம் செய்யக் கூடிய வசதிகள் எல்லாவற்றையும் விஞ்ஞானம் நமக்குக் கொடுத்ததற்குக் காரணம் பகுத்தறிவுதான். அணுவைப் பகுத்து அதன் அளப்பரிய சக்தியைக் கண்டுபிடித்த அறிவு, உண்மையிலேயே அற்புதமானதுதான்.

அந்தப் பகுத்தறிவு, ''அதிலே இது உண்டு; இதிலே அது உண்டு'' என்று காட்டிற்றே தவிர,எதையும் ''இல்லை இல்லை'' என்று சொல்ல முயன்றதில்லை.

ஆனால் எமது ஊர்ப் பகுத்தறிவோ அது இல்லை இது இல்லை; அது பொய் என்று சொல்ல முனைந்ததே தவிர,எதிலே எது அடக்கம் என்று கண்டு கொள்ளக் கூடியதாக இல்லை. ஒரு பகுத்தறிவாளர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

''ஐயா, சிவாய நமவென்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்கிறார்களே,'சிவாய நம'என்று சொல்லிக் கொண்டே ஆயிரம் வாற்ட் மின்சாரத்தைத் தொட்டால் அபாயம் ஏற்படாதா?''

-என்று கேட்கிறார்.

நல்லது. அபாயம் ஏற்படத்தான் செய்யும்.

கொஞ்சம் அறிவோடு ஆராய்ந்தால் விடயம் விளங்கும். அந்தப் பாடலைப் பாடிய அடியவர், 'சிவாய நம வென்று மின்சாரம் தொடுவார்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை' என்று சொல்லவில்லை. 'சிந்திப்போர்க்கு' என்றுதான் சொன்னார். அவர் சிந்தனையைச் சொன்னாரே தவிரச் செயலைச் சொல்லவில்லை. கடிதம் எழுதியவர் மீது குற்றமில்லை; எல்லாம் நம் ஊர்ப் பகுத்தறிவு படுத்தும் பாடு!

நம் ஊர்ப் பகுத்தறிவு ஓர் அழகான பெண்ணைக் கண்டால் அவளது அழகையோ, பண்பையோ ரசிப்பதில்லை, அவள் உடம்பில் எத்தனை வீசை கறி, எத்தனை வீசை எலும்பு என்றுதான் ஆராயும்!

மனதைப் பகுத்தறியலாம்; உடம்பைப் பகுத்தறியலாமா? என்று கூட யோசிப்பதில்லை!

இந்து மதத் தத்துவங்கள் எடுத்த வேகத்தில் பிடித்து வைத்த பொம்மைகளல்ல;பகுத்துப் பகுத்து அறிந்த பின்பே உருவாக்கப்பட்டவை.

ஒன்பது ஓட்டைகள் இருந்தும், உடம்புக்குள்ளே ஒரு காற்று எந்தச் சக்திக்குக் கட்டுப்பட்டு நீண்ட காலம் வெளியேறாமல் நிற்கிறது?

விஞ்ஞானிகளே யோசிக்கும் இடம் இது.

ஆனால், நம் ஊர்ப் பகுத்தறிவு இதை யோசிக்காது; இயற்கையாகவே நிற்கிறது! என்று பதில் சொல்லும்!

எது எந்த இயற்கை?

மண்ணா? மரமா? செடியா, கொடியா?

இப்போது மேல்நாட்டு விஞ்ஞானிகள்,உடம்பில் இருந்து வெளியேறும் உயிர் எவ்வளவு வேகத்தில் வான மண்டலத்துக்குப் பயணமாகிறது என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியேறும் உயிரின் வேகம்தான் ஆராய்ச்சியில் இருக்கிறதே தவிர,அது வெளியேறாமல் இருக்கும் வழி அவனுக்கும் தோன்றவில்லை; அடுத்த தலைமுறைக்கும் தோன்றப் போவதில்லை.

மானிட சக்திக்கு மேற்பட்ட மூலத்தைப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளே மறுத்ததில்லை. சந்திர மண்டலப் பயணிகள் தேவாலயத்துக்குப் போய் வந்துதான் பயணமானார்கள்.

ஞானம் என்ற மூலத்திலிருந்துதான் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் இரண்டுமே தோன்றின. இரண்டுமே ஒரு மூலத்தை நம்புகின்றன. ஒரு மூலமும் அறியாதவன்தான் எதையும் 'நிர்மூலம்' என்று கருதுவான்.

மூல வித்து ஒன்றின் ரகசியமான பரிணாம வளர்ச்சிகளைத்தான் விஞ்ஞானம் தேடிக் கண்டு பிடித்ததே தவிர, மூலத்தைக் காண முடியவில்லை.

அறிவு ஆழமாக, ஆழமாக, முடிவு தெய்வ நம்பிக்கையாகும்.ஆழமில்லாத அறிவு ஆத்திரத்தில் பெற்ற குழந்தையே நாத்திகம்.

அறிந்தோ அறியாமலோ சிலர் அதற்கு வைத்த பெயர் பகுத்தறிவு. சுருக்கமாகச் சொல்வதானால், ஓர் அறிவும் தெளிவாக இல்லாதவன் தனக்குச் சூட்டிக் கொண்ட பெயரே 'பகுத்தறிவுவாதி' என்பது.

**நன்றி: கண்ணதாசனின் கடைசிப் பக்கம்**

# ...டும் தேன் நாட்டின்

...ந்தாறுமூலை.



## பண்பாட்டு அம்சங்கள் பற்றிய ஒரு நோக்கு!

**ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் வருகை மூலம் மட்டக்களப்பு மக்கள் இந்து சமயத்துறையில் தலைமைத்துவம் பெறவும் வழிகாட்டவும் பலம் பொருந்திய ஸ்தாபன ரீதியிலான துணையைப் பெற்றுக் கொண்டார்கள் எனலாம்.**

ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷனின் வருகை மூலம் மட்டக்களப்பு மக்கள் இந்து சமயத்துறையில் தலைமைத்துவம் பெறவும் வழிகாட்டவும் பலம் பொருந்திய ஸ்தாபன ரீதியிலான துணையைப் பெற்றுக் கொண்டார்கள் எனலாம். அதன் பிறகே 'சைவப்பிள்ளைகளுக்கு சைவப் பாடங்களை' என்ற இயக்கம் வலுப்பெற்றதையும் அறிய முடிகின்றது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் கல்வியை மேம்படுத்த சாதி சம்பிரதாயங்களையே நம்பியிருந்தனர். கட்டடம், சிற்பம், சித்திரம், ஆடல்,இசை முதலிய கலைகள் மட்டுமன்றி சட்டிபானை வனைதல், கொல்ல வேலை, தச்சு வேலை, மரவேலை, நகை செய்தல், நெசவு போன்ற தொழில்களும் சாதி அடிப்படையில் முன்னெடுத்து மேற்கொள்ளப் படுகின்றன என்பது வெள்ளிடை மலை. இலக்கிய கலைமட்டும் ஒரு சாதிக் கென்று ஒதுக்கப்படவில்லை. சங்க காலம் தொடக்கம் இன்று வரை இலக்கியஞ் செய்தவர்களில் பல சாதியினர் பல மதத்தினர் காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மக்களில் பல சோதிடர்கள் இருக்கின்றனர். மட்டக்களப்பு நாட்டார் பாடல்களில் இருந்து இதை அறிந்து கொள்ள முடிகின்றது. சுவாமி விபுலானந்தர் கூட ஜோதிடக்கலையை நன்கு கற்றுள்ளார். இவற்றை சூடாமணியிலுள்ள முடையான் என்ற ஜோதிட நூலிலிருந்து பெற்றதாக தனது யாழ்.நூலில் குறிப்பிட்டுள்ளார். இன்று மட்டக்களப்பு பிரதேசங்கள் அனைத்திலும் ஜோதிடர்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இனி மந்திரக்கலை பற்றிய தரவுகள் சில வற்றைப் பார்ப்போம். மந்திரங்களால் நன்மை, தீமை இரண்டையும் பெற முடிகின்றது.

இதன்காரணமாக மந்திரவாதியின் தொடர்பினை மக்கள் தவிர்த்துக் கொள்கின்றனர். ஆனால் வைத்தியர்களினால் கைவிடப்பட்ட தீராத நோயை மந்திரங்கள் மூலம் குணப்படுத்தலாம் என்பது அவர்களது நம்பிக்கையாகும். மந்திரக் கலையோடு தொடர்புடையவர்களின் வீடுகளில் ஓட்டுச் சுவடுகள் இன்னும் காணப்படுகின்றன என்பது மறுப்பதற்கில்லை.

மந்திரங்கள் மூலம் நல்ல பல காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதால் மந்திரவாதிகளுக்கு மதிப்பும் மரியாதையும் அளித்தும் வருகின்றனர். விஷம் (POISON) ஏறாது தடுத்தல், பேயினால் ஆட்கொள்ளப்பட்டவரை நல்வழிப்படுத்தல், சுகப்பிரசவம் நடைபெறச் செய்தல், முத்துக் குளிக்கச் செய்பவர்களை உயிராபத்திலிருந்து காப்பாற்றல் என்பன மந்திரங்களினால் ஏற்படும் நன்மையாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நீர்வைக் கதிர்வேல்




அருள்மிகு ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலராக ''நீர்வைக் கதிர்வேல்'' எனும் நூல் வெளிவந்துள்ளது. நீர்வை செல்லக்கதிர் காம சுவாமி தேவஸ்தானத்தின் வெளியீடாகத் திருக்கோயிலின் வரலாற்றையும் திருவூஞ்சலையும் மேலும் பல சைவப் பெருமக்களின் பயன்தரும் பல கட்டுரைகளையும் தாங்கி அழகிய அச்சில் வெளியாகியுள்ளது.

வாழ்த்துச் செய்திகளுடனும் ஆசிச் செய்திகளுடனும் பதிவியல், முருகியல் பொதுவியல் என்ற பகுப்புகளுடனும் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன சிவஸ்ரீ கு.தியாகராஜாகுருக்கள், சிவஸ்ரீ சா.சோம தேவக்குருக்கள், பிரமஸ்ரீ தி.மயூரகிரிசர்மா ஆகியோரின் கருணைக்கடவுள் வரம் அருளும் தெய்வம் பத்திரபுஸ்பங்களால் ஒரு பூசை ஆகிய கட்டுரைகள் திருத்தலத்தின் மகிமையைப் பேசுகின்றன. பதிவியலில் தலவரலாற்றுக் கண்ணோட்டமும் நீர்வைக் கதிர்காமக் காட்சிகளும் திருப்பணிச் சபையினரின் செயற்பாடுகளும் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களின் செல்லக்கதிர்காம திருவூஞ்சலும் கீர்த்தனைகளும் இடம் பெற்றுள்ளன. முருகியல் தொகுப்பில் ஜகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகளின் சொற்பொழிவுத் தொகுப்பும் முனைவர் கோ.ந.முத்துக் குமாரசாமி அவர்களின் வள்ளி சன்மார்க்கம் பற்றிய கட்டுரையும். நீர்வை தி.மயூரகிரிசர்மாவின் கந்தபுராணம் நம் சொந்தபுராணம் எனும் கட்டுரையும்.ஜடாயு அவர்களின் திருச்செந்தூர் கந்தன் கோயிலின் பெருமையைப் புகழும் ஆக்கத்தையும் அருணகிரிநாதரின் மூன்று விருத்தங்கள் எனும் தலைப்பில் பக்தி பனுவல்கள்பற்றி விரிவுரையாளர் ச.லலீசன் அவர்களின் கட்டுரையையும் குழந்தைப் பெருமான் கார்த்திகேயன் பற்றி சிவத்திரு வ.குமாரசுவாமி ஐயர் எழுதிய ஆக்கத்தையும் காணலாம்.

பொதுவியலில் கோப்பாய் சிவம் பிரம்மஸ்ரீ நா.சிவ சங்கரசர்மா, நி.த. நடராஜா தீக்ஷிதர் பிரம்மஸ்ரீ உ.வெங்கடேசதீக்ஷிதர், நீர்வைக்கிரி திருமதி எஸ்.ஜெயலக்சுமி, அரவிந்தன், நீலகண்டன் ஆகியோரின் ஆக்கங்களும் இடம் பெற்றுள்ளன . மகாகும்பாவிஷேகச் சிறப்பு மலர் முழுமையாக கும்பாபிஷேக சிறப்புரைத்தலோடு காலத்தின் நினைவும், வரலாறும் கலந்த இலக்கியப் பொது நூலாக வடிவு பெற்றுள்ளது. திருப்பணிச் சபையின் உறுப்பினர்களின் புகைப் படமும். மூலவர் திருவுருவப் படமும் கும்பாவிஷேக விஞ்ஞாபன நிகழ்ச்சி நிரலும். நூலில் தரப்பட்டுள்ள திருக்கோயிலின் ஒரு காலப்பதிவு எனும் வகையில் பாதுகாத்து பயன்கொள்ள வேண்டிய சிறப்புமலர் இதுவாகும்.

## தமிழ்





மாணவரின் கல்வி மேம்பாடு கருதி கல்விச் சீராக்கத்துக்கு அமைவாக புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து கல்விப்பொதுதராதரப்பத்திர உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவருக்கான 'தமிழ்' எனும் இலக்கியத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. இதன் தொகுப்பாசிரியரான கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்களின் ஆளுமை நிறைந்தொளிரும் நூலின் சிறப்புக்களுக்கு பாடத்திட்டத்தை விரித்துணர்ந்து விதந்துரைக்கப்பட்ட நூல்களில் விளக்கங்களோடு நூலை வெளியிட்டுள்ளமை பயன் தரும் பெரிய முயற்சியாகும். சங்ககால நூல்களினதும் பாடல்களினதும் விளக்கங்களுடன் திருக்குறளின் பாடத்திட்ட தேர்வுகளும் சிலப்பதிகாரம், மணிமேகலை,சுந்தரர் தேவாரம் பெரியாழ்வார் திருமொழி ஆகிய இலக்கிய செழுமைகளிலிருந்து தேர்ந்த பகுதிகளுக்கான சொற்பொருள், பொழிப்பு குறிப்பு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

கம்பராமாயணத்தைச் சேர்ந்த கைகேயி சூழ்வினைப்படலம் தேம்பவாணி, சீறாப்புராணம் தனிப்பாடல் திரட்டு பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், உமர்கய்யாம் கவிதைகள், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கவிதை,கம்பதாசன் கவிதை, பிச்ச மூர்த்தி கவிதைகள், மகாகவி கவிதைகள், நீலாவணன் கவிதை, புரட்சிக்காமல் கவிதை,முருகையன் கவிதை,சுபத்திரன் கவிதைகள், குறிஞ்சித் தென்னவன் கவிதைகள் எனத் தமிழ் இலக்கியக் கதம்பமாகத் கவிதைகளின் சிறப்புரைத்து விளக்கும் சீர்மைமிகு தொகுப்பு நூலின் இலக்கிய கனதியை அதிகரிக்கிறது.

கட்டுரைகளுக்கென தனித்தொகுப்பு சிறுகதைகள் .நாவல் எனத் தேர்ந்த,பகுதிகளும்.மாதிரி வினாப்பத்திரம் பகுதி ஒன்றும் இரண்டும் அடங்கிய இரண்டு வினாத் தாள்களும் நூலில் இடம் பெற்றுள்ளன.

தமிழின் பாடத்திட்டத்தை முழுமையாகவும் விரிவாகவும் உள்ளடக்கி ஆக்கியும் தொகுத்தும் வழங்கப்பட்டுள்ள சிறந்த தமிழ் நூல் இது என்பதில் ஐயமில்லை . இதன் ஆசிரியர் தனது ஆற்றல் என்பவற்றுடன் அனுபவப் பேறுகளை நினைவு கொண்டு தொகுத்தளித்துள்ள தமிழ் க.பொ.த உயர்தர மாணவர்களின் அரியதொரு பொக்கிசமாகும் பரீட்சைக்குப் பின்னரும் இலக்கியப் பண்பறிந்து மகிழப் பாதுகாக்கப்பட வேண்டியதொரு நூலாகும். நூலின் முழுமை மகிழ்வையும் மனநிறைவையும் தருகின்றது.

## சுருதி




சுன்னாகம் றோட்டறிக் கழகம் ஆண்டுதோறும் சுருதி மலரினை வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான ஆறாவது சுருதி மலர் வெளிவந்துள்ளது. தற்போதைய சேவை உள்ளம் கொண்ட இளைஞர் யுவதிகளை அங்கத்தவர்களாகக் கொண்ட இந்தக் கழகத்தினது அங்கத்தவர்களது புகைப்படங்களுடன் வாழ்த்துச் செய்திகள் முதல் பக்கங்களை அலங்கரித்துள்ளது. 'மாறிவரும் உலகில் திருமதி றெஜீனா இருதயநாதன் எழுதிய கட்டுரையில் ஒரு மனிதனின் வளர்ப்பு தனித்துவமாக தாயின் மடியில் மட்டும் தங்குவதில்லை. வகுப்பறையிலும் சமூகத்திலும் அவன் வளர்க்கப்படுகின்றான் என்று தெளிவுபடுத்திக் கட்டுரை விவரிக்கிறது. அருட்பணி ஆர்.சீ. எக்ஸ் நேசராஜா அடிகளார் எழுதிய 'விசுவாச வாழ்வை நோக்கிய பயணம்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் இறைவார்த்தையை நாம் மறைக்கல்வி வழியாக எல்லோருக்கும் எடுத்துரைப்பது காலத்தின் கட்டாயமாகும் என்று விவரிக்கப்படுகின்றது.

பேராசிரியர் க.தேவராஜா எழுதிய கட்டுரை பாடசாலை மட் டத்தில் தலைமைத்துவ திறன்களை வளர்த்தல் என்ற தலைப்பில் பாடசாலை, அறிவையும் திறன்களையும் உளப்பாங்கினையும் விருத்தி செய்யும் அமைப்புக்கள் என்பதால் அவற்றை வழி நடத்துவதில் பாடசாலைத் தலைமைத்துவம் முக்கியத்துவம் பெறுகின்றது என்று அதனை விளக்கிச் செல்கிறது. இப்படியாக பல கட்டுரைகளை கடந்து ஆறாவது சுருதி முன்னைய விடக் கூடிய பக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

# வள்ளுவத்தில் காலூன்றிய கவிஞர்கள்



தமிழ் நாட்டின் பண் பாட்டை உருப்படுத்திய இலக்கியங்களுள் தலைமைச் சான்று திருக்குறள் ஆகும். முப்பாலாக விளங்கும் அந்த நூலை எப்பாலாரும் ஏற்றுப் போற்றுவர். தொன்று தொட்டு அதன் சொல்லையும் பொருளையும் தமிழ்ப் புலமை உலகம் பொன்னைப் போல் போற்றி வருகின்றது.

சிலம்பில் வள்ளுவம்:

சிலம்புச் செல்வத்தை வழங்கிய செஞ்சொற் கவிஞர் இளங்கோவடிகள் ஆவார். வள்ளுவர் வழங்கிய குறளைப் பொன்னைப் போல் அவர் போற்றினார்.

*''அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை''*

என்றார் வள்ளுவர். கணவனுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்த கண்ணகி ஆவி துடித்தாள்; அழுதாள்; விரித்த கூந்தலினளாக அரண்மனை நோக்கி நடந்தாள். அவள் கோலத்தைக் கண்டு மதுரை மாநகரம் குலுங்கிற்று.

*''அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக் கண்டேங்கி*
*மல்லல் மதுரையார் எல்லாரும் தாம் மயங்கிக்*
*களையாத துன்பமிக்க காரிகைக்குக் காட்டி*
*வளையாத செங்கோல் வளைந்தது''*

என்று வள்ளுவர் காட்டியதை அடியொற்றி மதுரையார் வருந்தியதாகச் சிலம்பு பாடிற்று.

*'தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுவாளை*
*தெய்வம் தொழும் தகைமை திண்ணிதால் - தெய்வமாய்*
*மண்ணக மாந்தருக்கு அணியாய கண்ணகி*
*விண்ணக மாந்தருக்கு விருந்து''*

என்று இளங்கோவடிகள் கற்பின் செல்வியைத்

*'' தெய்வம் தொழா அள் கொழுநன் தொழு தெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை''*

என்ற வள்ளுவர் வாய்மொழியை நினைந்து பாராட்டுகிறார்.

மேகலையில் குறள்:

அடிகளைப் போலவே சாத்தனாரும் திருக்குறளில் ஈடுபாடு உடையவராவார். குறளாசிரியரைப் பொய்யில் புலவன் என்றும் வள்ளுவர் வாய்மொழியைப் பொருளுரை என்றும் சாத்தனார் போற்றுகின்றார்.

*''தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை என்ற அப்*
*பொய்யில் புலவன் பொருளுரை தேராய்''*

என்று மேகலை அறிவுறுத்துகின்றது.

*''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு''*

என்ற குறள் கருத்தைப்

*''பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்*
*உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்''*

என்று சாதுவன் வழி மணிமேகலை உணர்த்துகின்றது.

சிந்தாமணியின் குறள்:

சிந்தாமணி ஆசிரியரான திருத்தக்கதேவரும் குறளை மிகுதியாகக் கையாண்டு தம் நூலுக்கு ஏற்றம் சேர்த்துள்ளார்.

*''ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தாற் செயின்''*
*'' பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும்பொழுது''*

என்ற குறளுக்கு விளக்கம் தருவதாய்க் கீழ்வரும் சிந்தாமணியின் வரிகள் அமைந்துள்ளன.

*''இடத்தொடு பொழுதும் நாடி*
*எவ்வினைக் கண்ணும் அஞ்சார்*
*மடப்படலின்றிச் சூழும்*
*மதிவல்லார்க் கரியதுண்டோ?*
*கடற்றிடைக் காக்கை ஒன்றை*
*ஆயிரம் கோடி கூகை*
*இடற்றிடை அழுந்தச் சென்றாங்*
*குன்னுயிர் செகுத் தன்றே''*
*'' தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ*
*மன்னுயிர்க்கு இன்னாசெயல்''*

என்று வள்ளுவர் வினவுகிறார். இந்தக் கருத்தின் எதிரொலியாகவே,

''தன்னுயிர் தான் பரிந்து ஓம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க்கு இறைவனாய் இன்ப மூர்த்தியாய்
பொன்னுயிராய்ப் பிறந்து உயர்ந்து போகுமே''

என்ற சிந்தாமணிப் பாடல் அமைந்துள்ளது.

இராமாயாணத்தில் குறள்:

''அறிகொன்று அறிவான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்''

என்ற குறளின் அடிப்படையில்,

''தம்முயிர்க்கு உறுதி எண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாது நின்று உரைக்கும் வீரர்
செம்மையின் திறம்பல் செல்லாத்
தோற்றத்தாற் தெரியும் காலம்
மும்மையிற் உணரவல்லார்
ஒருமையே மொழியும் நீரார்''

என்று கம்பர் அமைச்சர்களின் பண்பினைப் பாராட்டுகின்றார்.

(தொடரும்)

சங்கரவள்ளி நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செய் மனமே...

மனிதன் சிந்திக்க-நுட்பமாகச் சிந்திக்க-மாறி மாறி பல்வேறு கோணங்களில் யோசிக்கக் கடமைப்பட்டவன். ஆனால் பலரும் இன்று சிந்திப்பதே இல்லை. கேள்வி கேட்பதே இல்லை. அதிலும் மத விடயங்களில் பலரும் கொஞ்சம் கூடத் தங்கள் சிந்தனைத் திறனைப் பயன்படுத்துவதே இல்லை. எப்போதோ, யாரோ சொன்ன செய்திகளை துளிகூட யோசிக்காமல் நம்புகிறார்கள். மனப்பாடமாக அப்படியே ஒப்பிக்கிறார்கள். இப்படிச் சொல்லலாமா? இது உண்மையாக இருக்க முடியாதே... இது பலரையும் பாதிக்குமே என்பது பற்றி எல்லாம் யோசிப்பதே இல்லை. முட்டாள்தனமான அசட்டு விடயங்களை, வெட்கம் இல்லாமல் பேசுகிறார்கள். இன்றைய மதப் பகைக்கே இதுதான் காரணம். யோசித்துச் சிந்தித்துப் பேசுகிறவர்கள் எல்லா மதங்களிலும் பெருகிவிட்டால் மதங்களுக்குள் பகை வெகுவாக குறைந்துவிடும் என்றே நினைக்கிறேன்.

கொலம்பஸ் உலகப் பயணம் மேற்கொண்டு அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அதைப் பாராட்டி ஒரு பெரிய விருந்து நடந்தது. அதில் பல பெரிய மனிதர்கள் கலந்து கொண்டிருந்தாலும், பலருக்கு அவர் மீது வெறுப்பும், பகையும் இருந்தது. ''இதென்ன பிரமாதம்... கப்பலும் ஆளும் கிடைத்தால் யார் வேண்டுமானாலும் இதைச் செய்ய முடியும்...உலகம் உருண்டை என்பதால் புறப்பட்ட இடத்திற்கே ஒருவன் பத்திரமாக வந்துவிட முடியும்'' என்றெல்லாம் கேலியாக கதை அளந்தார்கள்.

வெறுத்துப் போன கொலம்பஸ் விருந்து மேசையில் இருந்த முட்டையை எடுத்துக் காட்டி. ''யாராவது இதை நேராக நிற்க வைக்க முடியுமா? என்னால் முடியும். பந்தயம் கட்டுகிறேன்... முட்டையை நிற்க வையுங்கள் பார்ப்போம்'' என்று சவால் விட்டார். கேலி பேசிய பலரும் அமைதியானார்கள். சிலர் படுத்திருந்த முட்டையை நிற்க வைக்க குழந்தைத்தனமாக முயன்றனர். முடிவில் எல்லோரும் தோல்வியை ஒப்புக்கொண்ட பின் முட்டையின் அகன்ற பகுதியை லேசாக அழுத்தினார் கொலம்பஸ். அது கொஞ்சம் உடைந்து தட்டையானதும் அதை அப்படியே மேசையில் நிறுத்தி விட்டார். உடனே பலரும் ''இதென்ன பிரமாதம்... நாங்களும் செய்வோமே'' என்று தொடங்கினர். ''இனி செய்வது சுலபம்தான்... எதையும் முதலில் செய்வதுதான் கஷ்டம். ஆனால் அதுதான் திறமை... முதலில் ஏன் உங்களால் முடியவில்லை?'' என்று சீறினார் கொலம்பஸ்.

ஓர் அராபியக் கதை. அங்கு அடிமைகள் குடும்பத்தின் மிக முக்கிய சொத்து. ஒரு பெரும் பணக்காரருக்கு அவரது அடிமை மீது அளவு கடந்த அன்பு வந்துவிட்டது. அவரது வாழ்க்கையில் அவன் அந்தளவுக்கு முக்கிய இடத்தைப் பிடித்து விட்டான். பணக்காரருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் தந்தையை மதிப்பது இல்லை. எனவே அவருக்கும் அவன் மீது அக்கறை இல்லை. திடீர் என்று ஒரு நாள் அந்தப் பணக்காரர் இறந்து போய் விட்டார். தன் சொத்து முழுவதையும் தன் அடிமைக்கே எழுதி வைத்து விட்டார். என்றாலும் மகன் மீது உள்ள லேசான பாசத்தால் ''என் மகன் என் சொத்திலிருந்து தனக்கு விருப்பமான ஏதாவது ஒரு சொத்தை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். அடிமை கொடுக்கக் கடமைப்பட்டவன்'' என்று பரிதாபத்தால் ஒரு வரி சேர்த்திருந்தார்.

மகன் அளவு கடந்த கோபத்துடன் முல்லாவிடம் சொல்லி வருத்தப்பட்டான். நியாய சபையில் முல்லா தனக்காக வாதாட வேண்டும் என்றான். முல்லாவும் ஒப்புக்கொண்டார். முடிவில் முல்லா சொன்ன வாதத்தைச் சபை ஏற்றது. மகனுக்கு எல்லாச் சொத்துக்களும் கிடைத்து விட்டன. அப்படி முல்லா என்ன வாதிட்டார்? உயில்ப்படி மகன் விரும்பும் ஏதாவது ஒரு சொத்தை அடிமை கொடுக்கக் கடமைப்பட்டவன் என்பதால், அந்த அடிமையைத் தனக்கு அடிமையாக வந்து விடும்படி மகன் கேட்டுக் கொள்வதாக அறிவித்தார். அராபிய வாழ்வியலில் அடிமையும் முதலாளியின் சொத்துதான் என்பதால் அந்த அடிமை, பணக்காரன் மகனுக்கு அடிமையானான். இப்போது அடிமையின் சகல சொத்துக்களும் மகனது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன. ஒரு பிரச்சினையை வெவ்வேறு கோணத்தில் அணுகுவது அவசியம் என்கிற நுட்பத்தை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஷேக் முஸ்தபா என்கிற அரசர் ஒருவர், பாலைவனத்தில் யாத்திரை போக வேண்டி இருந்தது. தமக்குக் கட்டுப்பட்ட இருவருடைய குதிரைகளைக் கொண்டுவரச் சொன்னார். ஆனால் குதிரைகளைக் கொண்டு வந்த இருவருக்கும் பாலைவனப் பயணத்துக்குத் தம் குதிரைகளைக் கொடுக்க விருப்பமில்லை. எனவே இருவரும் தங்கள் தங்கள் குதிரைகளைத் தாழ்த்திப் பேசினார்கள். ஒருவர் ''என் குதிரை நொண்டிக் குதிரை'' என்றார். மற்றவர் ''இது நோயாளி...பாதியில் படுத்துவிடும்'' என்றார். ஷேக் முஸ்தபா எதைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பத்தில் ''இருவரும் குதிரைகளை செலுத்திக் காண்பியுங்கள்... பந்தயம் வைப்போம். எது முதலில் வருகிறதோ அதை எடுத்துக் கொள்வோம்'' என்றார்.

உடனே ஷேக் முஸ்தபாவின் ஆலோசகர் முன்னால் வந்து அவரது காதில் கிசுகிசுத்தார்... ''இது சரியான யோசனை அல்ல. அவனவன் ஓடாதபடி தத்தம் குதிரையை இழுத்துப் பிடித்துக் கொள்வான். நீங்கள் எப்படி தேர்வு செய்ய முடியும்?'' என்றார்.

உடனே ஷேக் முஸ்தபா ''ஓ...அதுவும் சரிதான். இவன் குதிரையை அவன் செலுத்தட்டும். அவன் குதிரையை இவன் செலுத்தட்டும்'' என்று மாற்றி உத்தரவிட்டார். அதாவது மாற்றி யோசித்தார். இப்போதென்ன... அவரவர் குதிரையை விரட்டு விரட்டென்று விரட்டத் தொடங்கினார்கள்.



இப்படிச் சிந்திப்பவர்கள்தான் இன்றைய வெற்றியாளர்கள். உலகுக்கு மிகவும் அவசியமானவர்கள். எல்லோரிடமிருந்தும் மாற்றிச் சிந்திக்கும் வல்லமை மிக்கவர்களே இனி உலகின் போக்கைத் தீர்மானிக்கப் போகிறார்கள். இதற்கு நாமும் பழகிக் கொள்ள வேண்டும்.

சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## திருப்திகரமான கல்வி இனி எமக்கு இல்லை

வடமாகாணப் பாடசாலைகளில் இந்த முறை முதலாந் தவணைக்கான பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என அண்மையில் உதயனில் ஒரு செய்தி வெளியானது. ஆசிரியர்களும் மாணவர்களும் அளவுக்கதிகமான புறக்கிருத்தியச் செயற்பாடுகளில்(Extra Curriculat activities) ஈடுபடுத்தப்பட்டமையே இதற்குக் காரணம் எனவும் கூறப்பட்டது.

மேற்படி விடயத்தை ஒடுகாலியும் தனது கோணல்க் கோலங்களில் தொட்டுக்காட்டியிருந்தார். மேலும் ஒரு செய்தி வன்னிப் பாடசாலைகளில் மாணவர்கள் கோட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கும் தமிழ்த் தினப் போட்டிகளுக்கும் இடையில் பட்ட அவஸ்தையை புட்டுக்காட்டியிருந்தது.

அப்படியானால் பூர்த்தி செய்யப்படாத பாடத்திட்டத்தின் அடிப்படையில் எவ்வாறு பரீட்சைகள் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு தேர்ச்சி அறிக்கையும் கணிப்பீட்டுப் புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன? பூர்த்தி செய்யப்படாத பாடத்திட்டத்தின் அடிப்படையில் பரீட்சைகள் நடத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டது சரியானதா? அது ஒருபுறமிருக்க மேற்படி குளறுபடியானது இந்த முறை மட்டும் தான் நடந்ததா அல்லது ஒவ்வொரு வருடமும் இப்படித்தான் நடைபெறுகின்றதா? கடந்த காலங்களிலும் இதே நடைமுறை தான் பின்பற்றப்பட்டுள்ளதா?

முதலாந் தவணையில் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் இரண்டாம், மூன்றாம் தவணைகளிலும் இயல்பாகவே (Automatically) பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படமுடியாது என்பது தெளிவு. ஏனெனில் ''அ'' கற்றுக் கொள்ளாமல் எப்படி ''ஃ'' கற்றுக்கொள்ள முடியும்? அல்பாவைக் கற்றுக் கொள்ளாமல் எப்படி ஓமேகாவைக் கற்றுக் கொள்ள முடியும்?

மேற்படி குளறுபடிகளானது திட்டமிடப்படாத செயற்பாடுகளால் எதிர்காலத்திலும் தொடரப்போகிறதா? கல்வித் திணைக்களமானது இதற்கு தகுந்த விளக்கமளிக்க வேண்டும். ஒட்டுமொத்தத் தவறுகளையும் சுற்றிவளைத்துக் கொண்டு வந்து ஆசிரியர்களின் தலைகளில் சுமத்தப் போகின்றதா?

திட்டமிடப்படாத செயற்பாடுகளை உருவாக்கிவிட்டு வடமாகாணம் கல்வியில் பின்தங்கி விட்டது என்று பத்திரிகைகளில் அறிக்கைகளை வெளியிட்டுப் புலம்புவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை.

-அறிவில்லாதவன்

## இருப்பதை விட்டு விட்டு இல்லாததுக்கு அலையாதீர்கள்

அண்மையில் எனது மனைவியின் தங்கைக்கு வரன் அமைப்பதற்காக தரகர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அவரின் கையில் சில ஜாதகக் குறிப்புகளும் பல தென்னிந்திய நடிகைகளின் புகைப்படங்களும் இருந்தன. ''என்ன ஐயா, இந்த நடிகைகளுக்கும் நீங்களா வரன் பார்க்கிறீர்கள்?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டேன். ''இல்லைத்தம்பி இவை எங்கள் இளைஞர்கள் என்னிடம் தந்த போட்டோக்கள். தங்களுக்கு இவர்களைப் போன்று அழகான பெண்களாகப் பார்க்கட்டாம். இல்லாவிட்டால் வேண்டாமாம்'' என்று கூறினார்.

பார்த்தீர்களா எவ்வளவு தூரம் எங்கள் கலாசாரம் சீரழிந்துவிட்டது என்று! ''அப்படியானால் யுவதிகளும் நடிகர்களைப் போல ஆண்களைத் தேடுகிறார்களா, நடிகர்களின் போட்டோக்களும் உங்களிடம் இருக்கின்றதா'' என்று ஆவலுடன் கேட்டேன். ''இல்லைத் தம்பி எங்கள் யுவதிகள் தங்களுக்கு வெளிநாட்டு மாப்பிள்ளைதான் வேண்டுமாம். அரச உத்தியோகம் என்று கூட உள்நாட்டு வரன் வேண்டாமாம். கட்டினால் வெளிநாடு இல்லாவிட்டால் சுடுகாடு என்று ஒத்தைக் காலில் நிற்கிறாளுகள் தம்பி'' என்று பரிதாபத்துடன் கூறினார்.

குணத்தைத் தேடிய காலம் போய் இப்பொழுது பணத்தையும் நிறத்தையும் தேடுகிற காலம் வந்துவிட்டது.

இளைஞர்களே ரோஜாக்கள் பல வர்ணங்களில் அழகாகத்தானிருக்கும். ஆனால் அதில் முட்கள் இருப்பதை மறந்துவிடாதீர்கள். அதேபோல யுவதிகளே தனவான்களை விட்டு கனவான்களைத் தேடுங்கள். வாழ்க்கை ஒரு வசந்தம். அதனை சூறாவளியாக்கி விடாதீர்கள். நடிகைகளின் வாழ்க்கைப் பின்னணிகளை நீங்கள் அறிந்திருந்தால் இவ்வாறு சிந்திக்கமாட்டீர்கள்.

இதேபோல வெளிநாட்டு நபர்களின் வாழ்க்கைப் பின்னணிகளையும் நீங்கள் பத்திரிகைகள் மூலமாக அறிந்திருப்பீர்கள். கவனம் வாழ்க்கையை சொர்க்கமாக மாற்றுவது பணமோ நிறமோ அல்ல. நல்ல மனமும் குணமும்தான். அரைநொடித் தீர்மானங்கள் ஆயிரம் காலத்துப் பயிரை அழித்து விட நீங்கள் அனுமதிக்கலாமா. நன்றாக சிந்தித்து முடிவெடுங்கள்.

-யாழ்.வதிரிவாசன்

## சனசமூக நிலையம் இயங்குமா?

உடுவில் ஆலடி கிராமத்தில் அமைந்துள்ள வாசகர் சனசமூக நிலையம் தற்போது இயங்காத நிலையில் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் உட்பட பாடசாலை மாணவர்களும் தமது பொழுதுபோக்கு நேரத்தை சரிவரப் பயன்படுத்த முடியாமல் வீதிகளில் பொழுதைக் கழித்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் தொண்டு நிறுவனங்களின் அனுசரணையுடன் இந்த கிராமத்தில் வாசகர் சனசமூக நிலையம் ஊடாக பொதுமக்களுக்கு பல சேவைகள் வழங்கப்பட்டு வந்தன. எனினும் கடந்த 5 மாதத்திற்கு முன்னர் சனசமூக நிலையத்தை மீள இயங்க வைக்கும் நோக்குடன் சனசமூக நிலையத்தின் சூழல் துப்புரவு நடவடிக்கைகளை அப்பகுதி இளைஞர்கள் மேற்கொண்டு வந்தனர்.

தற்போது சனசமூக நிலையத்தின் பெயரினைப் பாவித்து தொண்டு நிறுவனங்கள் ஊடாக நிதிகளை பெற முயற்சி எடுப்பதாகக் கூறப்படுகின்ற போதும் பணிகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாக பொதுமக்கள் சனசமூக நிலையத்தின் ஊடாக கிடைக்கும் நலன்களைப் பெறமுடியாமல் உள்ளதுடன் மாணவர்கள் பத்திரிகைகளை வாசிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் பொது நூலகங்களை நாடிச் செல்கின்றனர்.

எனவே கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் ஆலடி சனசமூக நிலையத்தை மீள இயக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

-கிராமவாசி

## வீதி விளக்கு ஒளிருமா?

மின்சார பாவனையை சிக்கனமாக பயன்படுத்துமாறு அரசு வலியுறுத்தி வருகின்றது. ஆனால் மன்னார் மாவட்டத்தில் நகர சபையால் சில வீதிகளில் விளக்குகள் பொருத்தப்பட்டன. அவை 24 மணி நேரமும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன.

இருப்பினும் பெரியகடை, சாந்திபுரம், தரவன்கோட்டை புகையிரத வீதி, எமில் நகர், மன்னார் பஸ் நிலையம் என்பவற்றிலும், தந்தை செல்வா சிலை அருகிலும் உள்ள வீதி விளக்குகள் இரவு நேரத்தில் ஒளிர்வதில்லை. இதனால் இந்த வீதியால் செல்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி வீதி விளக்குகள் ஒளிர்வதற்கு ஆவன செய்வார்களா?

-எஸ்.ராஜா, மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சருமப் பாதிப்பை தடுக்க...



எப்போது வெளியே சென்று திரும்பினாலும் கண்டிப்பாக சோப் போட்டு முகம், கை கால்களை நன்றாக கழுவ வேண்டும்.

இரவில் படுக்கப் போகும் முன் தரமான மாய்ஸ்ட்டரைஸிங் கிறீம், கோல்ட் கிறீம் ஆகியவற்றை முகத்தில் தடவவேண்டும்.

காலையில் வெளியே செல்லும் முன் சூரிய வெப்பம் தாக்காதிருக்கக் கூடியவாறு முகப்பூச்சுக்களைத் தடவிக் கொள்ளவேண்டும்.

வாரம் ஒரு முறை தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

புருவங்களை சீர்படுத்தி, மினி பேஷியல் செய்து முடியை சீராக வெட்டி வைத்துக் கொள்ள அதிகம் செலவாகாது. மாதமொரு முறை இவற்றைச் செய்து கொள்வது முகத்தின் அழகைப் பாதுகாக்கும் வசதி படைத்தவர்கள் கோல்ட் பேஷியல் கினாட் பேஸியல் செய்து கொள்ளலாம்.

நாம் வசிக்கும் இடத்தில் வெயில் அதிகமாக இருப்பதால் கிறீம் அழகுபடுத்தலை கூடுமான வரை தவிர்ப்பது நல்லது. அழகுபடுத்துவதற்கு முன் வியர்வை அதிகமாக உள்ளவர்கள் ஐஸ் கியூப்பை முகத்தில் தேய்த்து அல்லது செய்த பிறகே அழகுபடுத்த செய்ய ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஐஸ் கியூப் கொடுக்காமல் மேக்கப் செய்து விட்டால் அவை சிறிது நேரத்துக்குப் பிறகு வியர்த்து விட்டால் சிவப்பு நிற புள்ளிகளாக மாறிவிட வாய்ப்புகள் அதிகம்.

இதை தவிர்க்க பவுடர் அழகுபடுத்த அதிகமாக உபயோகிக்க வேண்டும். அவரவர் நிறத்துக் கேற்றாற் போல் பவுடரை தேர்ந்து எடுக்க வேண்டும். இது மிக முக்கியமானதாகும். இதில் லிப்ஸ்டிக்கும் அடங்கும்.

# தலைமுடிக்கு கலரிங் செய்பவர்களுக்கு

'ஹேர் கலரிங்' என்பது, நாகரிக உலகில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஒரு விஷயமாக இன்று உருவாகி விட்டது. சிலர், தங்கள் கூந்தலுக்கு அழகு சேர்ப்பதற்காகவும், சிலர் தங்களின் நரை முடிகளை மறைப்பதற்காகவும் ஹேர் கலரிங் செய்கின்றனர். ஒருவரின் தோற்றத்தை வேகமாக மாற்றுவதற்கான சிறந்த வழி ஹேர் கலரிங். தற்போது ஹேர் கலரிங், பலதரப்பட்ட கூந்தல் தன்மைகளுக்கு ஏற்ப, பல்வேறு வண்ணங்கள் மற்றும் தரங்களில் கிடைக்கின்றன.

'ஹேர் கலரிங்' வகைகள்:

ஹேர் கலரிங் செய்வதற்காக பயன்படுத்தப்படும் வண்ணங்கள், திரவம், பவுடர், எண்ணெய் கிரீம்கள் மற்றும் ஜெல்கள் உட்பட பல வகைகளில் கிடைக்கிறது. நிரந்தர ஹேர் கலரிங் செய்வதற்காக ஜெல் மற்றும் பிற பொருள்கள் ஆகியவையும், தற்காலிக மற்றும் குறிப்பிட்ட காலம் நிரந்தரமாக இருக்கும் செமி-பெர்மனன்ட் கலரிங் செய்வதற்காக, மஸ்காரா, கிரேயான்ஸ் மற்றும் வண்ண கூந்தல் ஸ்பிரேக்கள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

கூந்தலின் நீளத்தைப் பொறுத்து, அதற்கு ஹேர் கலரிங் செய்வதற்கான செலவும் ஏற்படும். குட்டையான மற்றும் நடுத்தர அளவிலான கூந்தல் வகைகளுக்கு, 'ஹேர் கலரிங்' செய்தால், மிக அழகாக தோற்றமளிக்கும்.

'ஹேர் கலரிங்' செய்பவர்கள், நிரந்தமாக செய்து கொள்வதா அல்லது தற்காலிகமாக செய்து கொள்வதா என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நரை முடியை மறைப்பதற்காக ஹேர் கலரிங் செய்ய விரும்புபவர்கள், நிரந்தமான ஹேர் கலரிங் முறையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மேலும், ஒட்டு மொத்த கூந்தலையும் ஹேர் கலரிங் செய்து கொள்வதா அல்லது ஹைலைட் மட்டும் செய்து கொள்வதா என்பதையும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

ஹேர் கலரிங் முறைகள்:

ஹைலைட்டிங், ஸ்ட்ரீக்கிங், பிராஸ்டிங், பிங்கர் பெயின்டிங் ஆகியவை ஹேர் கலரிங் செய்யப்படும் பல்வேறு முறைகள். ஆனால், இன்றைய நவீன இளைஞர்கள் பொதுவாக, ஹை லைட்டிங் மற்றும் ஸ்ட்ரீக் கிங் ஆகியவற்றையே விரும்புகின்றனர். கூந்தல் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு வண்ணங்கள் பூசப்படுவதற்கு 'ஹைலைட்டிங்' என்று பெயர். பிறவுண் மற்றும் கோல்டன் நிறங்கள் மா நிற சருமத்தினருக்கும், சிவப்பு நிறம் நல்ல வெண்மையான சருமத்தினருக்கும் பொருத்தமாக இருக்கும் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.



ஹேர் கலரிங் கூந்தலில் நீண்ட நாள்கள் இருக்க வேண்டும் என விரும்புகிறவர்கள், காப்பர் அல்லது சிவப்பு நிற கலரிங் செய்வதை முடிந்த வரை தவிர்க்கலாம். ஏனென்றால், இவை விரைவில், வெளிறிவிடும் தன்மை கொண்டது. ஹேர் கலரிங் செய்த பின், அதற்கென தகுந்த ஷம்பு மற்றும் கண்டிஷனர்களையே பயன்படுத்த வேண்டும். ஹேர் கலரிங் செய்த பின், எவ்வாறு கூந்தலை பராமரிப்பது என்பதற்கு, கூந்தல் சிகிச்சை நிபுணரிடம் ஆலோசனை பெற்று செயற்படலாம். ஹேர் கலரிங் செய்வதற்கு பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் நல்ல தரமானதுதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுவது நல்லது.

நிரந்தரமான, வளமான தலைமுடி வேண்டும் என விரும்புவோர் 'ஹேர் கலரிங்' செய்யும் ஆசைக்கெல்லாம் அடிபணியக்கூடாது.

# ஆண்களுக்கான வெயில் கால குறிப்புகள்



வெயில் காலம் வந்தாலே வெளியில் செல்லும் போது அதிக வெப்பத்தால் ஏற்படும் வியர்வையை தான் முதலில் சொல்லவேண்டும்.

வெளியில் போய் விட்டு வந்ததும் ஏற்படும் தாகத்துக்கு உடனே குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து ஜில் தண்ணீரை குடிக்காதீர்கள். ஆறிய வெந்நீர் அல்லது சாதாரண தண்ணீரையே குடியுங்கள்.

அடுத்து வியர்வையுடன் உள்ள உடையை சிரமம் பார்க்காமல் ஒவ்வொருநாளும் துவைத்து பயன்படுத்துவது நல்லது.

காலுறையை நல்ல தரமானதாக பார்த்து வாங்கிக் கொள்ளுங்கள். முக்கியமா காலுறை அணியும் முன் உள்ளங்காலில் பவுடர் போட்டுக் கொள்ளுங்கள், வெளி நாடுகளில் ஃபுட் பவுடரே கிடைக்கிறது. முடிந்தால் அதை வாங்கிக் கொள்ளுங்கள், இல்லை என்றால் ப்யூட்டி பின்க் பான்ஸே போதுமானது. தலையில் தொப்பி, சன் கிளாஸ் அணிந்து கொள்ளலாம்.

வெளியில் போகும் போது ஏதாவது சன்ஸ் கிறீம் போட்டுக் கொள்ளுங்கள். அப்படி நீங்கள் கிரீம் பயன்படுத்துபவராக இருந்தால் முகத்தில் தடவும்போது கண்டபடி பூசாதீர்கள் முகத்தில் கீழிருந்து மேலாக வட்டவடிவில் தடவுங்கள். இல்லை என்றால் சதை தொய்ந்து சீக்கிரமே கிழவர் தோற்றம் வந்துவிடும்.

வெயிலில் நடந்து வருபவர்களுக்கு முதலில் வருவது கண் எரிச்சல், வாரம் ஒரு முறை எண்ணெய் தேய்த்து குளிப்பது நல்லது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் வறண்ட சருமம் மிருதுவாகிறது. கண் சூடு தணிகிறது. தலையில் உள்ள பொடுகு, முடி உதிர்தல் என்பவற்றுக்கும் நல்லது.

வெயில் காலத்தில் கூடுதலாக பருத்தியினாலான உடைகளையே உபயோகப்படுத்துங்கள்.

கைக்குட்டை, காலுறை போன்றவைகளை ஒவ்வொருநாளும் துவைத்து உபயோகியுங்கள்

நிறைய பேருக்கு வெயில் சூட்டால் மூக்கிலிருந்து இரத்தம் வரலாம். அதற்கு, தயிர் சாப்பிடலாம். அதே போல் நீராகாரம் நிறைய சாப்பிடுவது நல்லது. தினம் மோர் குடிப்பதை (பீர் அல்ல) பழக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஜூஸ் வகைகள், பழங்கள் இது போல் வெயில் காலங்களில் நிறைய சாப்பிடுவது நல்லது.

தண்ணீர் நிறைய குடியுங்கள், முடிந்தால் இள நீர், தர்பூசணி, மாதுளை போன்ற பழங்கள் சாப்பிடலாம். இவையெல்லாம் சாப்பிடுவதால் கொப்புளங்கள், வேராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

கரட், வெள்ளரிக்காய், வெங்காயம், தக்காளி, இவைகளை சாலட் செய்து சாப்பிடலாம். உடலுக்கு குளிர்ச்சி தருவனவாக இவை அமையும்.

# உடலுக்கு ஆரோக்கியம் தரும் கரட் ஜூஸ்



கரட் ஜூஸ் நல்ல ஒரு சக்தி தரும் பானம். கரட்டை சமைத்துச் சாப்பிடுவதை விட ஜூஸாக சாப்பிடுவது உடம்புக்கு மிகவும் நல்லது. கரட் சாப் பிடாத குழந்தைகள் கூட ஜூஸை விரும்பி அருந்துவார்கள்.

கரட் ஜூஸ் தயாரிக்க தேவையான பொருள்கள்:

கரட் - ஒன்று

பால் - ஒரு டம்ளர்

தண்ணீர் - ஒரு டம்ளர்

சீனி - ஒரு மேசைக்கரண்டி அல்லது தேன்

செய்முறை: கரட்டை தோலை நீக்கி பூந்துருவலாகத் துருவவும். துருவலை மிக்சியில் போட்டு பால் பாதி தண்ணீர் ஊற்றி சீனி சேர்த்து நன்கு அடிக்கவும். அடித்ததை வடிக்கவும், மறுபடி மிக்சியில் போட்டு மீதி தண்ணீரை ஊற்றி அடித்து வடித்த பின் பருகலாம்.

குறிப்பு: குழந்தைகளுக்கு இதை ஆறு மாதத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து பழக்கவும். முதலில் வெறும் ஆறிய வெந்நீரில் செய்து கொடுக்கவும். இதனுடன் அப்பிள் ஒரு துண்டு சேர்த்து அரைத்தால் நல்ல சுவையாக இருக்கும்.

பிறகு எந்த பால்மா கொடுக்கிறீர்களோ அதனுடன் சேர்த்துக்கொடுக்கலாம். பெரிய குழந்தைகள் என்றால் ஐஸ் கியூப்ஸ் போட்டு கொடுக்கலாம்.

கண்பார்வை கோளாறு உள்ளவர்கள் தினம் அருந்தலாம். கர்ப்பிணி பெண்கள் தினமும் இதை குடிக்கலாம். குழந்தைக்கு நல்ல கலர் கிடைக்கும். முகத்தில் அரைத்தும் தேய்க்கலாம். முகம் பள பளக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org